# சிந்தனைப் பார்வைகள்



வெலிப்பன்னை அத்தாஸ்

சிந்தனைப் பார்வைகள்

# சிந்தனைப் பார்வைகள்

வெலிப்பன்னை - அத்தாஸ்

மொடர்ன் ஸ்டடி சென்றர்
வெலிப்பன்னை

| | | |
|---|---|---|
| TITLE | : | CINTHANAI PAARVAIKAL |
| AUTHOR | : | WELIPENNA - ATHTHAS |
| LANGUAGE | : | TAMIL |
| COPY RIGHT | : | AUTHOR |
| NO. OF PAGES | : | 80 |
| NO. OF COPIES | : | 1000 |
| EDITION | : | FIRST - MARCH 2003 |
| ISBN | : | 955-8847-00-3 |
| PUBLISHER | : | MODERN STUDY CENTRE<br>WELIPENNA |
| COVER DESIGNERS | : | FIZAL & JAWZY |
| PRINTERS | : | POSITIVE GRAPHICS<br>175, OLD ROAD,<br>BERUWALA.<br>TEL : 034-76929 |
| PRICE | : | RS. 125.00 |

[illegible]

---

நன்றிப் பெருக்கால் எவ்விதத்தும்
ஈடுசெய்திட முடியா வகையில்
பெற்று வளர்த்து என்னை ஆளாக்கிப்
புவியில் நான் பதவி பெறச் செய்திட்ட
என் தாய் தந்தையர்

தாயார்

அப்துற்றஹ்மான் ஸெய்னத்தும்மா

அவர்களுக்கும்

தந்தை காலஞ்சென்ற

ஹுசைன் மரிக்கார் அப்துல் ஹமீது

அவர்களுக்கும்

இந்நூல் சமர்ப்பணம்

# அணிந்துரை

இலக்கியக் கூறுகளில் வசன நடை மிக முக்கிய மானது.கற்றோரும் மற்றோரும் மிக விளங்கிக் கொள் வதற்குக் கட்டுரையியலே பயன்தரும் முறை.கட்டுரை வன்மையால் தமது சிந்தனைத் தெளிவை மற்றவர்க்கு எடுத்துக்கூறும் இலக்கியம் எழும். வசன நடை என்பது ஆறுமுக நாவலரிலிருந்து இன்றுவரை பல்வகைப் பட்டு நிற்பதை உணரலாம். இலகு தமிழில் இனிமை யாக எடுத்துக் கூறும் கட்டுரைகளை இந்நூல் அடக்கி நிற்கின்றது. இக்கட்டுரைத் தொகுதிக்குரியவர் ஓர் ஆசிரியர். அதுவும் ஒரு பாடசாலையை நிருவகிக்கும் தலைமையாசிரியர். நல்லாசிரியர் பற்றி நன்னூலார் கூறும் இலக்கணத்தைக் கற்போரும் கற்பிப்போரும் அறிவது அவசியம்.

**'குலன்அருள் தெய்வம் கொள்கை மேன்மை**
**கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை**
**நிலமலை நிறை கோல் மலர்நிகர் மாட்சியும்**
**உலகியல் அறிவோடு உயர்குணம் இனையவும்**
**அமைபவன் நூல்உரை யாசிரி யன்னே'**

இந்நூலிலுள்ள கட்டுரைகளை வாசிக்கும் போது நூலா சிரியரின் உயர்நிலை விளங்கி நிற்கும்.

தமிழ் மொழி பேச்சு மொழி, எழுத்து மொழி கலந் தது. பேச்சு மொழி, எழுத்து மொழிக்கு வாய்க்கால். இம்மொழியினால் எழுதிய நமது இலக்கிய முன் னோடி அறிஞர் சித்திலெவ்வை அவர்கள். அவர்களது 'முஸ்லிம் நேசன்' பத்திரிகைத் தமிழ், 'அசன்பே சரித்திரம்' எனும் நாவல் தரும் தமிழ்த் தர்க்கம் செந்

தமிழ் நிறைந்து இனிமை தரும். இவ்விதமே ஆசிரியர் ஏ.எச்.எம்.அத்தாஸ் அவர்களின் தமிழ் நடையும் இனிமை தரும். அவ்வப்போது அவர் எழுதிய கருத்துச் செறிவுடைய இக்கட்டுரைகள் பத்திரிகைகள், சஞ்சிகைகள் மூலம் வெளியானவை. தொகுத்துப் பார்த்துப் படிக்கும் போது ஏற்படும் இனிமை வேறுபட்டது. அதைச் சுகிப்பது கற்றோருக்கும் கற்பிப்போருக்கும் தேவை யானதே!

ஆக்க இலக்கிய இயல்புடைய எழுத்தாளர் ஏ.எச்.எம்.அத்தாஸ் அவர்கள் கட்டுரையாக வெளியாக்கியிருக்கும் இந்நூலும் ஓர் ஆக்க இலக்கிய வடிவம் தான். நவரசங்களுள் பலவற்றை உள்ளடக்கி எழும் இக்கட்டுரைகள் கட்டுரை எழுத முயலுவோருக்கு வழிகாட்டியாக அமையும். இதைப் படித்துத் தெளிதல் பயில்வோர்க்கு அவசியம். இந்த வழியில் இன்னும் தெளிவான கட்டுரைகளை எம்முன் நிறுத்த வேண்டும் என ஆசிரியரை வேண்டுகின்றேன்.

*2002-08.15* **கலாபூஷண் ஏ.இக்பால்**

# மதிப்புரை

**பா**டசாலை அதிபரும், எழுத்தாளரும், ஊடக வியல் டிப்ளோமாப் பட்டதாரியுமான வெலிப்பன்னை யைச் சேர்ந்த அல்ஹாஜ் ஏ.எச்.எம்.அத்தாஸ் ஜே.பி. தாம் இதுவரை 1961ம் ஆண்டிலிருந்து இலங்கையின் தேசிய பத்திரிகைகளுக்கும் சஞ்சிகைகளுக்கும் எழுதிப் பிரசுரமான ஆக்கங்களில் சிலவற்றைத் தொகுத்து நூலுருவில் இலக்கிய உலகுக்கு வழங்கியுள்ளார்.

''சிந்தனைப் பார்வைகள்'' என்ற இந்நூல் அவரது கன்னி முயற்சியாகும். இது 15 கட்டுரைகளை உள்ள டக்கியிருக்கிறது. அல்ஹாஜ் அத்தாஸ் தமது சொந்தப் பெயரிலும் 'இளங்கலைஞன்', 'வெலிப்பன்னை அமுதன்' போன்ற புனைப்பெயர்களிலும் எழுதிய ஆக்கங்கள் இவை. இவற்றில் சிந்தனை, சமூகம், இலக்கியம், வரலாறு, சமயம், கல்வி, ஆராய்ச்சி எனக் கட்டுரையின் பல்வேறு வடிவங்களையும் கொண்ட ஆக்கங்கள் அடங்கியுள்ளன.

இது முழுக்க முழுக்க இவருடைய சிந்தனையும் பார்வையுமாகும். இதன் மூலம் இவர் தாம் வாழும் சமூகத்தைப் பற்றியும், தாம் பின்பற்றும் சமயத்தைப் பற்றியும், தமது துறையான கல்வி பற்றியும் சிந்தனை கொண்டவராக, அவை பற்றிய அக்கறை கொண்டவ ராகக் காணப்படுகிறார்.

ஒருவர் தாம் வாழும் சமூகத்தைப் பற்றியும் தாம் பின்பற்றும் சமயத்தைப் பற்றியும் அக்கறை கொண்டு அவற்றைப் பற்றிச் சிந்தித்து அவற்றின் மேம்பாட்டுக்

காகத் தம்மாலியன்ற பங்களிப்பைச் செய்ய முன் வருகிறார் என்றால் அத்தகையோரின் நன்முயற்சியைப் பாராட்டுவது, ஊக்குவித்து உற்சாக மளிப்பது எமது கடமை.

இலாப நட்டத்தைக் கணக்குப் பார்த்துக் காரியத்திலிறங்கும் கால கட்டத்தில், இலாபம் என்பது கேள்விக் குறியாகவிருக்கும் புத்தக வெளி யீட்டுத் துறையில் இறங்கியிருக்கிறாரே என்பதற்காகவும் கூட இவரைப் பாராட்டி வைக்க வேண்டும். இது இவருடைய கன்னி முயற்சி. இளங்கன்று பயம் அறியாது என்பதால் இவருக்கு எமது நல்வாழ்த்துக்கள்.

முகாமைத்துவ ஆசிரியர் - தமிழ்ப் பிரசுரங்கள், இஃது
லேக் ஹவுஸ், என்.எம்.அமீன்
கொழும்பு.
9.9.2002

# பதிப்புரை

'வெளிப்பன்னை அத்தாஸ்' அவர்களின் 'சிந்தனைப் பார்வைகள்' என்ற நூலை வெளியிடுவதில் கல்வி நிலையம் என்ற ரீதியில் வெலிப்பன்னை 'மொடர்ன் ஸ்டடி சென்றர்' மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றது. இதில் உள்ள ஆக்கங்கள் கற்கும் மாண வர்களுக்கு விடயங்களை அள்ளி வழங்குவதுடன் வழிகாட்டும் நூலாகவும் அமையும் என்பது எமது துணிபு.

குறிப்பாக மாணவர்களுக்கும் - இதில் எடுத்தாளப் படும் விடயங்கள் தொடர்புள்ளவர்களுக்கும், மற்றோ ருக்கும் பயனளிக்கும் நூல் என்பதால் எமது மொடர்ன் ஸ்டடி சென்றர் இதனை வெளியிட முன்வந்தது.

எமது கல்வி நிலையம் 1988இல் ஆரம்பித்து 1993 வரை இயங்கிப் பின் தற்காலிக ஓய்வின் பிறகு மீண்டும் 2002 மார்ச் முதல் புனரமைப்புச் செய்யப்பட்டு மாண வர்களுக்குக் கல்வி வழங்கும் சேவையை மேற்கொள் கின்றது. பெரும்பாலான மாணவர்கள் மொடர்ன் ஸ்டடி சென்றர் மூலம் கல்வி பெற்று உயர்வடைந் துள்ளார்கள் என்பது வெலிப்பன்னை வரலாற்றில் இடம்பிடித்துக் கொண்ட உண்மைச் சரித்திரமாகும். குறிப்பாக 1989 கிளர்ச்சியின் போது பாடசாலைகள் இயங்காமலிருந்த காலகட்டத்தில் முழு மத்துகம பிர தேசத்துக்கும் தமிழ், முஸ்லிம் மாணவர்களுக்கு தமிழ் மொழி மூலக் கல்வி வழங்கிய பெருமை மொடர்ன்

ஸ்டடி சென்றர் கல்வி நிலையத்துக்கு உண்டு என்பதையும்; இதன் சேவையால் அக் காலகட்டத்தில் பிரதேசக் கல்விநிலை பாதிக்கப்படாது காக்கப்பட்டது என்பதையும் நினைவுகூர வேண்டும். கல்வியுடன் தொடர்புடைய நூல் வெளியீடும் இவ்வாறான பயன்தரும் என்பதை மனதிற் கொண்டே செயற்படுகின்றோம். எனவே அனைவரினதும் ஆதரவை இதற்கு வேண்டி நிற்கின்றோம்.

நூலை வெளியிட அனுமதி தந்த ''வெலிப்பன்னை-அத்தாஸ்'' அவர்களுக்கும் மற்றும் உதவிகள் நல்கிய அனைவர்க்கும் நன்றி கூறி வாசகர்கள் ஆலோசனைகளையும் எதிர்பார்த்துள்ளோம் என நவில்வதுடன் விடை பெறுகின்றேன்.

*41 பி, முஸ்லிம் வீதி,*
வெலிப்பன்னை.

**இவ்வண்ணம்**
**செல்வி. எம்.ஏ.எப். ஸப்ரூன்**
**பணிப்பாளர்**
**மொடர்ன் ஸ்டடி சென்றர்**

# முன்னுரை

**அளவில்லா அருளாளன்**
**நிகரில்லா அன்புடையோன்**
**இறையோனாம் அல்லாஹ்வின்**
**திருநாமம் தனைப் போற்றி**
**ஆரம்பஞ் செய்கின்றேன்.**

1961ம் வருடம் தொட்டு இற்றைவரை நான் எழுதி பத்திரிகைகள், சஞ்சிகைககளில் பிரசுரமான, ஆக்கங் களில் சில இந்நூலில் இடம் பெறுகின்றன. இந்நூல் வெளியீடு எனது கன்னி முயற்சியாக அமைகிறது.

''இளங்கலைஞன்'' எனும் புனைபெயரில் அவ் வப்போது நான் எழுதிய இஸ்லாமியப் பாடல்கள் 1969ல் 'உணர்வூட்டும் இஸ்லாமிய கீதங்கள்'' என்ற தலைப் பில் வெலிப்பன்னை ''பைத்துல் முபாரக் '' நூல் நிலை யத்தால் தொகுத்து வெளியிடப்பட்டதுண்டு. 1985ல் வெலிப்பன்னை முஸ்லிம் வித்தியாலய பழைய மாண வர் சங்க வெளியீடான '' மர்ஹூம் எம்.எம்.எம்.யூசுப் நினைவு மலர்'' உடைய ஆசிரியராகப் பணி புரிந்து மலரைத் தொகுத்தளித்தேன். எனது ஆக்கங்களைத் தொகுத்து நூலாக வெளியிடும் உணர்வு ஏற்பட்டதின் பயனாக இவ்வாறானதொரு முயற்சியை முதன் முத லில் செய்ய முற்பட்டதால் இதனைக் கன்னி முயற்சி எனக் கூறினேன்.

சிந்தனைக்குட்படுத்த வேண்டிய சில கருத்துக்கள் அவ்வப்போது முன்வைக்கப்பட்ட ஆக்கங்களில் உள்ள டக்கப்படுவதால் இந்நூலுக்குச் ''சிந்தனைப் பார்வை கள்'' எனப் பெயரிட்டேன். பத்திரிகை, சஞ்சிகைகளில்

இவ்வாக்கங்கள் வெளிவந்து சமுதாயத்தில் ஏற்படுத்திய பாதிப்பை விடப் பாரிய தாக்கம் ஒன்று நூலாக்க முயற்சியின் பலனாக ஏற்படலாம் என்ற ஒரே குறிக்கோளில் இம்முயற்சியில் இறங்க முன்வந்தேன்.

உண்மையில் அவ்வச்சந்தர்ப்பத்தில் எனது மனதை வருடிய சில விடயங்கள் பத்திரிகை, சஞ்சிகைகளில் வெளிவர வேண்டும் என்ற நோக்கில் நான் எழுதியவை. இவை பத்திரிகைகளில் வெளிவருவதால் தமிழ் பேசும் மக்கள் - குறிப்பாக எடுத்தாளப்பட்டுள்ள விடயங்கள் தொடர்புறும் மக்கள் இவ்விடயங்களில் அக்கறை காட்ட வேண்டும் என்ற நோக்கத்தில் அவ்வாறு வடிவமைக்கப்பட்டன. எனினும் அவ்வப்போது உரிய பயன் ஏற்பட்டிருக் கிறதா? என்று நான் இப்பொழுது எண்ணிப் பார்க்கும் போது அது கேள்விக் குறியாகவே தோன்றுகிறது.

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் புரட்சிப் பாடல்கள் கூட அவ்வப் போது பிரசுரமாகும் வேளைகளில் கண்ட பயன் போதியதன்று எனக் கருதியே வறுமையில் வாடிய மகாகவி பட்டினியால் துன்புற்ற போதும் கடன் பட்டேனும் நூல் வடிவில் அவற்றைத் தொகுத்து வெளியிடத் துணிந் தார் எனக் கருத இடமுண்டு. இதனால் சமுதாயத் தாக்கங்கள் உண்மையாக நிகழ்ந்துள்ளமையால் இம்முயற்சி பயனளிக்காமற் போகவில்லை என்பதை ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

எனவே எனது சிந்தனையின் பாற்பட்ட இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள அதிகமான விடயங்கள் அவை தொடர்புறும் மக்கள் மத்தியில் நிலையாக வேரூன்றப்பட வேண்டும் எனக் கருதுகின்றேன். அதற்கு உரிய வழி இவ்வாறு நூலுருவில் கையிலேந்திப் படிக்க வைப்பது தான் எனக் கருதி யதன் விளைவே இச்சிறிய நூல் எனக் கூறிக் கொள்ள விழைகின்றேன். எனவே எனது ''சிந்தனைப் பார்வைகள்''வாசிப்போர் சிந்தனைக்கும் உட்பட விட்டுவிடுகிறேன்.

சிறியேனின் சிறிய முயற்சியைப் பெரிதாகக் கருதி ஆதரவளிப்பீர்கள் என நம்புகின்றேன். இதனை வாசித்து இதன் எதிர்பார்ப்பு என்ன என இனம் கண்டு செயல்பட்டால் அது சமுதாய நன்மையைக் கொண்டுவரும், நான் பெறும் பாக்கியமும் அதுவே எனக் கூறி விடை பெறுகின்றேன். நன்றி.

41, 'அரபாத் - அகம்'
முஸ்லிம் வீதி
வெலிப்பன்னை

இஃது,
அன்புடன்
வெலிப்பன்னை- அத்தாஸ்

# துணை நின்ற நெஞ்சங்கள்

''சிந்தனைப் பார்வைகள்'' சிறுநூல் வெளிவர
அருள் பாலித்த, மறையளித்த
மாபெரியோனுக்கே புகழனைத்தும்.
முக்கியமாய் ஆக்கங்களைப் பிரதிபண்ணி உதவிய
மகன் முஹம்மது யஸீர் அரபாத்,
விசேட பிரதி தயாரித்துதவிய
ஜனாப் ஏ.எச்.மீரா சாகிப் அவர்களுக்கும்,
அணிந்துரை வழங்கிய அழுத்கம ஆசிரியர்
கலாசாலை முன்னாள் விரிவுரையாளர் இலக்கியமணி
கலாபூஷணம் கவிஞர் ஏ.இக்பால் அவர்களுக்கும்,
மதிப்புரை தந்த மாண்புமிகு பத்திரிகையாளர்
ஸ்ரீலங்கா முஸ்லிம் ஊடகத் தொடர்பு அமைப்பின்
தலைவர், பன்மொழி அறிஞர் அல்ஹாஜ் என்.எம்.அமீன் பீ.ஏ
ஜே.பி.(அகில இலங்கை) அவர்களுக்கும்,
படி திருத்திப் பிழைசீர் செய்துதவிய
பிரபல எழுத்தாளர் அல்ஹாஜ் . அல் அஸூமத் அவர்களுக்கும்
பல்வேறு சந்தர்ப்பங்களிலும் எனக்கு ஒத்தாசை புரிந்த
வெலிப்பன்னை ரஹ்மானியா ம.வி பிரதி அதிபர்
ஜனாப் .எம்.வை. கவுசுல் அமீர் அவர்களுக்கும்,
நூலின் அறிமுக உரை எழுதிய
பேருவளை இலங்கை வங்கி முகாமையாளர்
ஜனாப். தர்ஹாநகர் ஸபா அவர்களுக்கும்
பல்வேறு தேவையின் போது தொல்லை
கொடுத்தும் ஆதரவு தந்த துணைவி
ஸித்தி நபீஸா எம்.அத்தாஸ் அவர்களுக்கும்
இந்நூலை அழகுற அச்சிட்டு உதவிய
பொஸிட் டிவ் கிரபிக் நிறுவனர்
ஜனாப் பரீத்.ஏ.ஜவ்சகி அவர்களுக்கும்,
ஆலோசனை வழங்கியோர், ஆக்கம் ஊக்கம் தந்தோர்
அனைவர்க்கும் என் நன்றி உரித்தாகும்.
என்னை ஆதரிக்கும் வாசகப் பெருமக்கள்
அனைவர்க்கும் நயமிகு நன்றிகள்
என்றென்றும் உரித்துடைத்து.

**வெலிப்பன்னை - அத்தாஸ்**

## கை கோர்த்த உள்ளங்கள்

இந்நூலை வெளியிட வெலிப்பன்னை 'மொடர்ன் ஸ்டடி சென்றர்' உடன் கரம் கோர்த்துக் கொண்டவர்கள் - நிறை நன்றிகள் உரித்துடைத்து

அல்ஹாஜ் எம்.எஸ்.எம். ஹுசைன்,
மௌலானா ஸ்டோர்ஸ், வெலிப்பன்னை

ஜனாப். ரி.எம். பவுஸான்,
ரத்ன மஹால் ஜுவலர்ஸ், மத்துகம

திரு. எம். சுந்தரராஜன்,
பன்னிலகந்தை, வெலிப்பன்னை

திரு. ஜி. என்டனி,
டெல்கிட், பதுரலிய

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| முஸ்லிம்களுக்கு மதக் கல்வி புகட்டுதலில் மாற்றம் வேண்டும் | 19 |
| ஆற்றல் இலக்கியம் படைப்போர்<br>இஸ்லாமியரில் உண்டு | 22 |
| மாணவர்களின் கல்வித் தரம் குன்றக்<br>காரணங்கள் யாவை? | 25 |
| வெலிப்பன்னை ''மஸ்ஜிதுந் நூர்''<br>பள்ளிவாசல் வக்புவும் ஸாஹுல் ஹமீது (ஒலி)கந்தூரியும் | 30 |
| மஹான் செய்கு அப்துஸ் ஸமீஉ ஆலிம்<br>அவர்களின் வாழ்வும் மறைவும் | 32 |
| உலக மகா கவி இக்பால் | 35 |
| ஸக்காத் பற்றிய சிந்தனைகள் | 39 |
| களுத்துறை மாவட்ட தமிழ் மொழி மூலக்<br>கல்வி வளர்ச்சி - ஒரு நோக்கு | 44 |
| பெருமானாரின் கருணை மாட்சி<br>சீறாப் புராணத்தில் உமறுப் புலவர் காட்டும் ஒரு சம்பவம் | 48 |
| கல்விக்காக உழைத்த<br>மர்ஹூம் எம்.எம்.எம் யூசுப் | 52 |
| வேர்விலை புஹாரிக் கந்தூரி வைபவம் | 55 |
| சுகவாழ்வுக்குச் சில போதனைகள் | 59 |
| தமிழகத்தில் ஏழு நாட்கள்...<br>(தொடர் கட்டுரையில் ஒரு பகுதி) | 62 |
| முஸ்லிம் கிராமங்கள்<br>வெலிப்பன்னை - களுத்துறை மாவட்டம் | 68 |
| புரிந்துணர்வு ஒப்பந்த அமைதி பேணலில் யாழ் நகர் விஜயம்<br>(24.5 - 2002 - 29-5-2002) | 71 |

# முஸ்லிம்களுக்கு மதக்கல்வி புகட்டுதலில் மாற்றம் வேண்டும்

இன்று உலகம் முன்னேறிச் சென்று கொண்டி ருக்கும் இந்நிலையிலே முஸ்லிம்கள் பின்நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர். அன்று உலகத்தின் முன்னேற்றத்துக்கு அத்திவாரமிட்டுக் கட்டிடத்தை எழுப்பிக் காட்டிய முஸ்லிம் சமுதாயம், மற்றோர்க்கு முன் மாதிரியாகத் துலங்கிய முஸ்லிம் சமுதாயம் இன்று வாழ வழி தெரியாது திகைத்துக் கொண்டு நிற் கின்றது. இழிநிலையை அடைந்திருக்கின்றது. கேவ லம், இன்றைய முஸ்லிம் சமுதாயத்தின் நிலையைக் கவனித்தால் அது மெல்லவும் முடியாது, விழுங்கவும் முடியாது என்ற நிலையில் ஆட்டம் போட்டுக் கொண் டிருக்கின்றது.

அன்று இஸ்லாம் தோன்றுவதற்கு முன் அரேபிய நாட்டிலே, அரேபியர் வாழ்ந்த நிலையை நாம் சரித்திர வாயிலாக அறிந்திருக்கிறோமல்லவா? அவர்கள் காட்டுமிருகங்களிலும் கேவலமான நிலையிலிருந் தார்கள். கெட்ட பழக்கங்களின் உறைவிடம் என்று அவர்களைக் கூறலாம். பணயம் வைத்துச் சூதாடுதல் , மதுசாரம் அருந்துதல் போன்ற விடயங்களிலே பேர் பெற்றவர்கள். அக்கிரமச் செயல்களை ஈவிரக்கமின்றிச் செய்யத் துணிந்தவர்கள். இவ்வாறான நாட்டிலே இஸ் லாம் மதம் தோன்றிக் கெட்ட பழக்கங்கள், ஈவிரக்க மற்ற செயல்கள், கெட்ட நடத்தைகள் எனும் போர்வை களைக் கழற்றிப் படுகுழியில் தள்ளி அதற்கு எதிர் மாற்றமான நன்னடத்தை, நற்பழக்க வழக்கங்கள்,

நற்செயல்கள் எனும் போர்வையால் அவர்கள் போர்த்தப்படவில்லையா? இதற்கு வழிகாட்டி இஸ்லாம். இது அசைக்க முடியாத உறுதி.

இஸ்லாம் தோன்றிக் குறுகிய காலத்திற்குள், முஸ்லிம் சமுதாயம் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளரத் தொடங்கியது. பல்வேறு விடயங்களிலும் முஸ்லிம்கள் முன்னேற்றமடைந்தனர். இஸ்லாம் திக்கெட்டும் பரவியது. முஸ்லிம்கள் பிறருக்கு வழிகாட்டியாகத் திகழ்ந் தார்கள். முஸ்லிம்கள் என்றாலே ஒரு மதிப்பு. இவையெல்லாவற்றிற்கும் காரணம் யாது? இஸ்லாம் மதம்,இஸ்லாம் காட்டிய மார்க்கம்.

அப்படியிருந்த அந்தக் கால முஸ்லிம் சமுதாயத்துக்கு இக்கால முஸ்லிம் சமுதாயத்தை ஒப்பிட்டுப் பார்த்தால் அதன் ஏற்றத் தாழ்வு சொல்ல முடியா தது. கம்பராமாயாணத்திலே இராமனின் அம்பினது தன்மையை, இராவ ணன் வாயால் கம்பன் ஒப்பிட்டுக் கூறுவது போல் நாமும் இவ்விடத்தைக் கூறிவிடலாம். இந்நிலை நீண்டு வந்தால் காலப்போக்கில் முஸ்லிம்கள் என்று கூறுவதே வெட்கத்துக்கிடமான நிலையாகி விடும். இவ்வாறான நிலை எய்துவதற்குக் காரணம் யாது? முன்னேற்றத்தின் உச்சக் கட்டத்தை அடைந்தவர்கள் பின் தங்கியது ஏன்? இவ்வாறு நாம் நமக்குள்ளே வினா எழுப்பி விடை காண்போம்.

ஒருவன் இஸ்லாத்தை ஏற்று முஸ்லிமாகி விட்டால் அவன் மார்க்கப் பிரகாரம் நடக்க மதக் கல்வி அவசியமல்லவா? அதற்காகவே மதத்தைப் பற்றிக் கற்பிக்க மதக்கல்வி அவசியமாயிற்று. இவ்வாறு இஸ்லாம் மத பாடபோதனை அன்று தொடக்கம் இன்று வரை போதிக்கப்பட்டு வருவது போற்றத்தக்கது. எனினும் இலங்கையைப் பொறுத்தவரை மதக்கல்வி புகட்டுவதிற் பல சீர்திருத்தங்கள் செய்ய வேண்டியிருக்கிறது. சுருங்கக் கூறின் இன்றைய நிலைக்கேற்ப அது மாற்றப்பட வேண்டும். இன்றைய இலங்கையைப் பொறுத்தளவில் முஸ்லிம் சமுதாயம் மதக் கல்வியைக் கசடறக் கற்காததினாற்றான். பின் தங்க வேண்டிய நிலை அடைந்திருக்கிறது. மார்க்கத்தைப் பற்றி அவர்கள் சரியாக அறிந்து கொள்ள வில்லை. மதம் என்றளவில் ஏதோ ஓரளவையே மதக் கல்வியாகக் கற்றுக் கொண்டனர். ஆனால் அந்தக் கற்றுக் கொண்ட ஒரு சிறிதளவையும் நடைமுறையில் அனுஷ்டிக்கச் சூழ்நிலை இடந்தரவில்லை. அந்தச் சாத்தானின் மதிகெட்ட சூழலிலிருந்து தப்பித்துக் கொள்ள இறைவனின் எச்சரிக்கைகளையோ, திருமறையின் போதனைகளையோ அவர்கள் அறியவில்லை. இந்த நிலை தான் இன்றைய முஸ்லிம்களின் பிற்போக்குத் தனத்துக்கு மூலகாரணமாக அமைந்திருக்கின்றது. சில்லோர் நான் மேற்கூறிய கூற்றுக்களுக்குக் கட்டுப் பட்டவர்களல்லாமலிருக்கலாம். ஆனால் இன்று சமூகத்தின் பெரும்பாலா னோர் இந்நிலையிற்றான் இருக்கின்றார்கள் என ஐயமின்றிக் கூறலாம்.

இந்தக் குறை ஏற்படக் காரணம் மதக்கல்வி புகட்டப்படுதலில் உள்ள பிழையான முறையாகும். பிழைகளைக் களையாவிட்டால் நேர்வழி பிசகுதல் இயல்பன்றோ! எனவே இன்று குர்ஆன் பள்ளிக் கூடங்களில் தமிழ் மொழி பெயர்ப்புடன் குர்ஆன் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும். குர் ஆனைத் தாய்ப் பாஷையாகிய தமிழில் மொழி பெயர்த்துச் சொல்லிக் கொடுப்பதும் நலம். அதுவன்றி ஒருவன் அரபிப் பாஷையை மாத்திரம் வாசிப்பவனாக இருந்தால் அந்தக் குர்ஆனை அவன் எழுத்துப் பார்த்து ஓதி விட்டாலும் அவன் அதனால் அறிந்து கொள்வதற்கு ஒன்றுமில்லை. ஏதோ கண்டதே காட்சி கொண்டதே கோலமாக அது அவனுக்கு அமையும். இன்று இலங்கையில் முற்றாக இந்நிலையே கடைப்பிடிக்கப் படுகின்றது. இந் நிலையைத் தளர்த்தியாக வேண்டும். இன்று இலங்கையைப் பொறுத்தவரை யில் தகுந்த ஆலிம்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களைக் கொண்டு இக்காரியத்தை நிறைவேற்றலாம்.

அத்துடன் மார்க்க, சமயானுஷ்டானங்கள் பற்றியும் மதக்கல்வி புகட் டப்பட வேண்டும். இத்துறையிலும் இன்றைய சிறார்கள் பின் தங்கியிருப் பது கவலைக்கிடமானதாகும். இதற்கும் ஒரு வழி முறை காண வேண்டியது அவசியமாகின்றது.

ஆனால் அந்தக் காலத்தில் மார்க்கத்தைப் பற்றிய அறிவு சரியான முறையில் போதிக்கப்பட்டு வந்தது. முஸ்லிம் மக்கள் குர்ஆன், ஹதீஸ் என்ப வற்றைக் கடைப்பிடித்து வாழ்ந்தார்கள். குர்ஆன் வேண்டிய விவகாரங் களுக்கு வழிகாட்டி நிற்கின்றது. எனவே அன்றைய முஸ்லிம்கள் உலகி லேயே முன்னோடிகளாய்த் திகழ்ந்தார்கள். நாம் பின் தங்கி விட்ட காரணம் இப்பொழுது தெட்டத் தெளிவாகி விட்டது. எனவே கூடிய விரைவில் இம்மதக் கல்வி கட்டாய பாடமாக்கப்பட வேண்டும். அப்போதுதான் புது ஒளி பிறந்து பிரகாசிக்கும்.எனவே இம்முறைகளைக் கைக்கொண்டு வெற்றி யடைய முயற்சிப்போம்.

***(''தாரகை'' மீலாத் மலர் 25-08-1961 இதழில் ''இளங் கலைஞன்'' என்ற புனைப்பெயரில் எழுதப்பட்டது.)***

# ஆற்றல் இலக்கியம் படைப்போர் இஸ்லாமியரில் உண்டு

அறிஞர் சித்திலெவ்வை விதைத்த வித்து விருட்ச மாகியது தெரியாதா? ஈழத்து இஸ்லாமிய எழுத்தாளர் மீது குறை கூறுவோருக்கு பதில்

ஆற்றல் இலக்கியம் படைக்கும் இஸ்லாமிய எழுத்தாளர்கள் ஈழத்தில் இல்லை என்று கல்முனை எழுத்தாளர் சங்கக் காரியதரிசி ஜனாப் வி.எம்.இஸ்மா யில் சுமத்திய குற்றச்சாட்டுக்களை ''கேசரி'' வாசகர் வெலிப்பன்னை அமுதன் இங்கு வன்மையாக மறுத்தி ருக்கிறார். விழாத் தினங்களையொட்டிய சரக்குகளைப் பத்திரிகையில் எழுதுவது என்ற அளவோடு ஈழத்து இஸ் லாமியரின் எழுத்துப் பணி திருப்தி கொள்கிறது என்ற கூற்றையும் அவர் ஆதாரங்களோடு ஆட்சேபித்துள்ளார்.

சென்ற 25-08-63 ஞாயிறு 'வீரகேசரி' இதழில் வெளி வந்த 'இஸ்லாமியரும் ஆற்றல் இலக்கியமும்' என்ற கட்டுரையை வாசித்தேன். அந்தக் கட்டுரை தலையங் கத்திற்கேற்ப அமையவில்லை என்பதே எனது கருத்து.

### வாசகன் நான்

எனவே வாசகனாகிய எனது சிறு கருத்தையும் தெரி விக்க விரும்புகிறேன். நான் ஒரு வாசகன் . இரசிகனும் கூட. எனவே நான் வாசித்தும் இரசித்தும் அனுபவித்த அளவில் ஈழத்து இஸ்லாமியரின் இலக்கிய ஆற்றல் பற்றித் தெரிந்த மட்டில் ஓரளவு என்னால் கூற முடியும்.

### முன்னேற்றம் பாராட்டற்குரியது

தரமான இலக்கிய கர்த்தாக்களும் எழுதக்கூடியவர் களும் இஸ்லாமியர்களிடையே இருக்கின்றனர். ஈழத்து

இஸ்லாமியர்கள் இலக்கிய ஆக்கத்துறையில் அடி எடுத்து வைத்து வெகு காலஞ் செல்லவில்லை. சில வருடங்களே ஆகின்றன. அதற்குள் அவர்கள் அடைந்த - அடைந்துள்ள குறுகியகால முன்னேற்றம் பாராட்டற்குரியது.

*விதைத்த விதை*

சித்திலெவ்வை விதைத்த இலக்கிய விதையே இன்று மரமாக வளர்ந் துள்ளது. இஸ்லாமியர்கள் தம்மதநெறி பிசகக் கூடாது . எனவே நாடக இலக்கியத்தை வெளிப்படுத்த இஸ்லாமிய நாடக இலக்கிய கர்த்தாக்கள், தமக்கேற்ற வழிவகைகளைக் கையாளுகின்றனர். அந்த வகையில் வானொலி ஒன்றே அதற்குரிய சாதனமாக விளங்குகிறது. அதுவன்றி, பகிரங்கமாக மேடையேறி மக்கள் மத்தியில் இஸ்லாமிய நாடகங்கள் நடித்துக் காட்டப்பட வேண்டுமென்று முஸ்லிம்கள் எதிர்பார்ப்பது எவ்வ ளவு பேதைமை? வானொலி நாடகங்கள் இலக்கிய அந்தஸ்துடையனவல்ல என்று கூற முடியாது. அவ்வாறாயின் இலக்கியச் சொற் பொழிவுகள் என்பதற்கே அர்த்தமில்லை. எம்.ஏ. அப்பாஸ், நாடக ஆற்றுருவங்களான துரோகி', 'கள்ளத்தோணி' ஆகிய இரண்டு நூல்களையும் வெளியிட் டுள்ளார். ஸைபுத்தீன் ஸாஹிபு கதை கவிதைகளிலும் ஆற்றலுள்ளவர்.

*கவித்திறமை*

கவிதைத் துறையில் நோக்கும் போது முஸ்லிம்களல்லாத ஏனைய கவிஞருடன் சேர்த்து மதிப்பிடத்தக்க முஸ்லிம் கவிஞர்கள் இருக்கிறார்கள். புரட்சிக்கமால், அப்துல் காதர் லெவ்வை , எம்,ஸி.எம்.ஸுபைர், அண்ணல் ஆகியோரை இத்துறையிற் சிறப்பாகக் கூறலாம். இவர்களுக்கு பிறபட்ட வழித் தோன்றலில் வழுத்தூர் ஒளியேந்தி, ஏ,இக்பால், பஸீல் காரியப்பர், யூ.எல்.தாவூது ஆகியோர் கவிதை புனைவதில் சிறப்பிடம் பெறுகின்றனர்.

ஏ.இக்பால், பஸீல் காரியப்பர் ஆகியோர்களின் கவிதைகளில் நல்ல விறுவிறுப்பு இருக்கிறது. பொருள் பொதிந்தவைகளாக அவை மிளிர் கின்றன. பஸீல் காரியப்பர் கவிதைத் துறையில் ஈடுபட்டுப் பரிசில்களையும் தட்டிக் கொண்டிருக்கிறார்.

*நாவல் சகாப்தம்*

நாவல் படைப்பதில் இலங்கையிலே இஸ்லாமியரான சுபைர் இளங் கீரன் தான் ஒப்பற்றவராக விளங்குகின்றார். அந்த வகையில் நமக்குப் பெருமையுண்டு. சிறுகதைத் துறையில் ஏறக்குறைய 35, 40 சிறுகதைகளைப் படைத்த அ.ஸ.அப்துஸ்ஸமது முன்னணியில் திகழ்கின்றார். பித்தனையும் சிறப்பாகக் கொள்ளலாம். எச்.எம்.பி.மொஹிதீனையும் மருதூர்க் கொத்த னையும் அடுத்ததாகக் கூறலாம். கிண்ணியா சாலிஹ , அபூதாலிப் - அப்துல் லதீப் ஆகியோரும் சிறுகதைகளைப் படைக்கக்கூடியவர்களே! இந்த வரிசை யில் நிஸாரையும் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

உருவகக் கதை

எம்.ஏ.றஹ்மான் உருவகக் கதைகள் எழுதியுள்ளார். அவர் குழந்தை இலக்கியத்தையும் வெளியிட்டிருக்கிறார்.

பெண்களும்

பெண்மணிகளில் எழுத்தாற்றலுள்ளவர்களாகப் பேராதனை சர்புன் னிஸா, நயீமா ஏ.பஷீர், செல்வி லைலா மொஹிதீன் ஆகியோர் திகழ்கின் றனர். இவர்களுள் பின்னையவர் மொழி பெயர்ப்புத் துறையில் ஈடுபட்டுள் ளார். இவர்களைத் தவிர எழுத்தாற்றல் துறையில் பழைமையானவர்களும் இருக்கின்றார்கள். அவர்களுள் கட்டுரைத் துறையில் ஜனாப்களான மஷ்ஹூர், றாஜி, உவைஸ் ஆகியோர் ஆற்றலுள்ள எழுத்தாளர்களாகத் திகழ்கின்றனர்.

கட்டுரை

கட்டுரை எழுதுவதில் ஜனாப் சமீம் பிரதான இடத்தை வகிக்கின்றார். ஏ.எம்.ஏ.அஸீஸ், பக்கீர்த்தம்பி, சமீம், உவைஸ் ஆகியோர் சொற்பொழிவுத் துறையில் அனேகமாக ஈடுபட்டிருக்கிறார்கள். பின்னைய இருவரும் நூல் களும் வெளியிட்டிருக்கிறார்கள்.

எனக்குத் தெரிந்த அளவில் இன்றைய இஸ்லாமியரின் இலக்கிய ஆற்றல் பற்றியே தான் இங்கு குறிப்பிட்டுள்ளேன். இன்னும் பல எழுத்தாளர் களும் அவர் தம் படைப்புக்களும் இருக்கலாம். எனக்குத் தெரிந்த அளவில் தான் நோக்கினேன். இந்த அளவில் வைத்துப் பார்க்கும் போது கூட அநேக மாக இஸ்லாமியரும் ஆற்றல் இலக்கியமும் எனும் கட்டுரை விடயங்கள் மறைக்கப்பட்டு எழுதப்பட்டுள்ளது.

எனவே ஈழத்தில் இஸ்லாமியரின் இலக்கிய ஆற்றலை நோக்கும் போது, எதிர்காலத்தில் இலக்கி யவுலகில் நல்லதொரு இடத்தை முஸ்லிம் கள் பிடித்துக் கொள்ள முடியும் என்பதை உறுதியாக நம்பலாம்.

எமது அடுத்த பரம்பரை கண்ணுங்கருத்துமாயிருந்து இலக்கியம் படைப்பார்களாயின் நாம் முன்னணியில் திகழவும் வழியுண்டு.

*('வீரகேசரி' 1963 செப்டெம்பர் 14இல் ''வெலிப்பன்னை அமுதன்'' என்ற பெயரில் எழுதிய கட்டுரை)*

# மாணவர்களின் கல்வித் தரம் குன்றக் காரணங்கள் யாவை?

சில தினங்களுக்கும் முன் தினகரன் நாளிதழில் இதே தலையங்கத்துடன் அன்பரொருவர் கட்டுரை யொன்று வரைந்திருந்தார். இன்றைய கல்வியுலக நிலையையிட்டு அவர் கூறிய காரணங்கள் வரவேற் கத்தக்கனவாகும். அத்துடன் மாணவரிடையே கல்வித் தரம் குன்ற மேலும் சில காரணங்களைக் கூறலாம்.

மாணவர்கள் பாடசாலையிற் படித்தவைகளை வீட்டில் திருப்பிப் படித்தாற்றான் அவர்களுக்குக் கல்வி யில் முன்னேற்றம் காணமுடியும் என்பதை யாவரும் ஒப் புக் கொள்வர். நன் மாணாக்கரின் இயல்புகளிலேயே இதுவுமொன்று என இலக்கண நூலும் பறை சாற்று கின்றது. இந்த இயல்பைத் தாமாக எல்லா மாணவரும் பெற்றிருப்பர் எனக் கூற முடியாது.

எனவே அந்த இயல்பைப் பெற்றோரே மாணவர் களுக்கு ஏற்படுத்த வேண்டும். ஆகவே மாணவர்கள் வீட்டிலிருக்கும் நேரத்தில் ஐந்து மணித்தியால நேரத் தையாவது நாளாந்தம் படிப்பில் அவர்கள் செலுத்தச் செய்வது பெற்றோரின் கடமையாகிறது. அப்போதே பிள்ளைகள் கல்வியில் முன்னேற வழி பிறக்கிறது. எனவே பெற்றோர்கள் தம் பிள்ளையின் கல்வியில் அதிக கரிசனையுடையவராயிருந்தால் பிள்ளைகளும் அவ்வாறே இருப்பர் என்பது பெறப்படுகிறது.

## பெற்றோரின் உதாசீனம்

நிலைமை இவ்வாறிருக்க, இன்றைய பெற்றோர்கள் பாடசாலைக்குத் தம் பிள்ளையை அனுப்புவதோடு மாத்திரம் தம் கடமை முடிந்து விட்டது என்று நினைக்கின்றனர். இந்த மனப்பான்மை பெற்றோரிடமிருந்து அகல வேண்டும். சில பெற்றார் பிள்ளைகளுக்குப் பாடசாலைக்குத் தேவையான கற்பலகை, புத்தகம் போன்றவற்றை ஒழுங்காக வாங்கிக் கொடுப்பதிலும் பின் நிற்கின்றனர். ஏழைப் பெற்றோர் தம் இயலாமையால் அவ்வாறு செய்கின்றனரெனின் அதனை ஒருவாறு பொறுக்க முடியும். ஆனால் வசதி படைத்த பெற்றோரும் இப்படிச் செய்கின்றனரெனின் அதைப்பற்றி என்ன சொல்வது?

உண்மையிலேயே பொறுப்புணர்ச்சியற்ற சில பெற்றாரின் தன்மையே இப்படிப் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பச் செய்கிறது என்று சொல்ல வேண்டியிருக்கிறது.

''வீட்டில் வீணே பொழுது போக்காது பாடசாலையிற் படித்த பாடங்களை எடுத்துப் படியுங்கள், அப்போதுதான் படித்தவை மனதில் நன்கு பதியும் நீங்கள் படிப்பில் முன்னேறுவீர்கள்,'' என்று ஆசிரியர் வற்புறுத்தி மாணாக்கருக்குச் சொல்லி விடாமலிருக்க மாட்டார். எனினும் ஒரு நாளில் அதிக நேரத்தை வீட்டில் செலவிடும் மாணவருக்குப் பெற்றார் படிப்பில் கவனஞ் செலுத்துமாறு அவர்களைத் தூண்டாவிட்டால் அவ்வாசிரியரின் எச்சரிக்கையினாலோ, வற்புறுத்தலினாலோ யாது பயன் விளையப் போகிறது?

## வேலை வாங்கும் படலம்

''இன்று பாடசாலையில் ஆசிரியர் என்ன கற்பித்தார்? அந்தப் பாடத்தை எடுத்துப் பாடம் பண்ணு!'' என்று பிள்ளைக்குத் தம் வாயால் கூறும் பெற்றார் எத்தனைப் பேர்தான் இருப்பர் என்று கேட்குமளவிற்கு நிலைமை வந்துவிட்டது. இனி எங்கே மாணவர்களின் கல்வி அறிவு உயர்வடைய வழியிருக்கிறது? படிக்கும் பிள்ளைகளுடன் பேசும் பேச்சுக்கு எதிர்மாறான பேச்சையே இன்று பெற்றார் அவர்களுடன் பேசுகின்றனர். ''பாடசாலையில்தான் நீ படிக்கிறாயே? என்னதான் படிப்பு இங்கே வேண்டிக் கிடக்குது? படிப்பாம் படிப்பு சரியாக ஒரு வார்த்தை எழுதத் தெரியாது. 3ம், 4ம் வகுப்பு படிக்கிறானாம்!'' இப்படிப் போகிறது இன்றைய பிள்ளையின் தாய் தந்தையரின் பேச்சு.

உண்மையிலேயே நாகரிக யுகம் என்று சொல்லும் இன்றைய யுகத்தில் இதனை எடுத்து எழுதுவது கூட வெட்கக் கேடான விடயமாயிருக்கிறது. அத்துடன் முடிகிறதா? அந்த வேலையைச் செய், இந்த வேலையைச் செய், அங்கே போய் வா என்ற அதட்டல் மிரட்டல்களால் பிள்ளையிடம் வேலை வாங்கும் படலமே வீட்டில் நடக்கிறது. தம் பிள்ளையிடத்தில் இரக்கமுள்ள

அவர்களின் எதிர்காலத்தில் நம்பிக்கை வைத்துச் செயலாற்றுகிற பெற்றாரின் தன்மையா இது? என்று கேட்கத் தோன்றுகிறது. எனவே இந்தவித காரணங் களாற் தான் பிள்ளைகள் கல்வியில் பின் தங்குகின்றனர் என்பதில் பிழை யில்லையல்லவா?

அடுத்ததாக இன்றைய மாணவர்கள் அதிகமானோர் ஒழுக்கக் கேடா னவர்களாகவே இருக்கின்றனர். நல்லொழுக்கமில்லாத பிள்ளைகள் கல்வியில் முன்னேறுவர் என்று சொல்ல முடியாது. மாணவர்களின் இந்த ஒழுக்கக் குறைவுக்கு ஆசிரியர்தான் காரணமென்று சொல்ல முடியாது. ஏனெனில் நாளாந்தம் ஆசிரியரிடத்தில் மாணவர் இருப்பதோ ஒரு சொற்ப நேரம்தான். ஆனால் நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி வீட்டில் பெற்றார்கள் மத்தியிலேயே பிள்ளைகள் அதிக நேரத்தைச் செலவிடுகின்றனர். எனவே பெற்றார் தம் பிள்ளைகளின் நடத்தையை அதிகமாகக் கவனிப்பவராயிருக்க வேண்டும். ஒழுங்கான முறையில் அவர்கள் நடக்கப் பெற்றார் புத்திமதி கூறி வழிகாட்ட வேண்டும். இன்று உண்மையில் நடக்கிறதென்னவென்றால் பெரும்பாலான பெற்றோர் பிள்ளைகளின் ஒழுக்கம், நடத்தை என்பன வற்றில் கவனஞ் செலுத்துவதாகத் தோன்றவில்லை. இதனாலேயே ஆசிரி யர்கள் திருத்தி நல்லலொழுக்கமுள்ள பிள்ளைகளாக மாற்ற முற்பட்டாலும் அப்பிள்ளைகள் திருந்துவதாகக் காணோம். பாடசாலையில் திருத்தி விட் டால் வீட்டில் அப்பிள்ளைகள் பழைய படியாகவே மாறுகின்றனர். இந்த நிலையே அவர்களின் கல்வித் தரம் குன்ற முழு முதற் காரணம் என்றும் சொல்ல முடியும்.

### பொறுப்பு உணர்ச்சியின்மை

''மாணவர்களின் முன்னேற்றத்தில் பெற்றோரும் ஆசிரியரும் ஒன்றா யிணைந்து செயலாற்ற வேண்டும்'' என்பது கல்விப் பகுதியின் கொள்கை யாகும். அதற்காகவே பெற்றார் -ஆசிரியர் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுச் செயல்பட வேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. அப்போதுதான் மாணவர்களின் இயல்பு, திறமை, தேவை என்பவற்றையிட்டு அறிந்து இரு சாராரும் தேவைக்கேற்ற விதமாகச் செயலாற்ற முடியும். ஆனால் இன்று அதற்காகப் பெற்றார் -ஆசிரியர் சங்கக் கூட்டத்துக்கு- பெற்றாரை வர வழைப்பது என்பது கல்லில் நார் உரிக்கும் செயலிலும் கடினமாகவே இருக்கிறது. இதற்கும் காரணம் பெற்றாரின் பொறுப்புணர்ச்சியற்ற தன் மையே ஆகும். எனவே இவற்றைப் பார்க்கும் போது மாணவர்களின் கல்வித் தரம் குன்ற ஆசிரியர்களே காரணம் என்று சொல்வதற்கில்லையல்லவா?

கல்வித் தரம் குன்ற மற்றொரு காரணம், மாணவர்கள் ஆசிரியர்களை மதித்து நடக்காமையேயாகும். ஆசிரியரை மதித்து நடக்காத மாணவர்கள் அவர் படிப்பிப்பவற்றையும் மதிக்க மாட்டார்கள் என்பது வெள்ளிடைமலை.

இதனை டாக்டர் சுவாமிநாதையர் அவர்களின் கூற்றும் உறுதிப்படுத்துகிறது. குருவிடம் மதிப்பு வைக்காத மாணவன் அவர் கூறும் வாசகத்திலும் மதிப்பு வைப்பதில்லை எனக் குரு பக்தி பற்றிக் கூறுகையில் அவர் குறிப்பிடுகிறார். முற்காலத்தில் மாணவர்கள் ஆசிரியர்களைக் கௌரவப்படுத்தி அவர் கூறுவனவற்றுக்கு மதிப்புக் கொடுத்து நடந்ததாலேயே அக்கால மாணவர்கள் கல்வியில் முன்னேறினார்கள். ஆனால் இன்று அதற்கெதிர் மாறாக நடக்கும் போது மாணவர் கல்வியில் எவ்வாறுதான் முன்னேற முடியும்? இவ்விடத்தில் மாணவர்கள் ஆசிரியர்களை மதித்து நடக்காமைக்குக் காரணம் என்ன என்ற கேள்வியும் எழும்பச் செய்கின்றது. தம் கௌரவத்தை வைத்துக் கொண்டு செயலாற்றத் தெரியாத ஆசிரியர்கள் சிலரும் இதற்குக் காரணம் எனலாம். ஆசிரியர்களுக்குரிய விதிமுறைகளைப் பின்பற்றி நடவாது சமூகத்தின் முன்னிலையில் ஒழுக்கமற்ற முறையில் ஆசிரியர்கள் நடந்து கொள்வதினால் தம் கௌரவத்தையிழந்து மதிப்பற்றவராகின்றனர்.

சமூகம் ஆசிரியர்களை மதிப்பற்றவர்களாகக் கருதுமிடத்து அச்சமூ கத்தின் பிள்ளைகளிடமும் அந்நிலை பிரதி பலிக்கிறது. சில சில சந்தர்ப் பங்களில் பெற்றார் பலர் தம் பிள்ளைகளின் மத்தியில் அவ்வாசிரியர்களைத் தூற்றிப் பேசவும் தவறுவதில்லை. இவற்றையெல்லாம் கவனிக்கும் பிள்ளை யும் ஆசிரியரிடத்தில் மதிப்பு வைத்து நடக்கப் பின்வாங்குவது தவிர்க்க முடியாதது. ஒரு சில ஆசிரியர்கள் இவ்விதமாகக் கௌரவமற்ற முறையில் நடக்கப் போய் ஈற்றில் முழு ஆசிரியர் சமூகத்தையும் இன்று இந்நிலை பாதிக்கச் செய்து விட்டது என்று சொல்லலாம். ஆசிரியர்களிடத்து மாண வர்கள் மதிப்பு வைத்து நடக்காததற்கு இன்னும் ஓரிரண்டு காரணங்களையும் கூற முடியும். ஆசிரிய சேவைக்கு ஆற்றலில்லாத ஒரு சில அப்பாவி ஆசிரி யர்களைப் பார்த்தவுடன் நிதானித்துக் கொள்ளும் மாணவர் அவ்வாசிரியரைக் கிண்டல் செய்யப் பின்வாங்குவதில்லை.

இந்நிலையில் அவ்வாசிரியர் தனக்குத் தெரிந்த ஒரு சில விடயங் களையாவது மாணவர்களுக்குப் படிப்பிக்க முடியாத நிலைக்குள்ளா கின்றார். மாணவர்களுக்கு அதிகம் முகம் கொடுத்து அளவுக்கதிகமாக (நண்பர்களுடன் அளவளாவுவது போல்) பேசிப் பழகுவதனாலும், ஆசிரியர்கள் மாணவர்களைக் கட்டுப்படுத்தி வைக்க முடியாதும் திண்டாடு கின்றனர். இவையெல்லாம் மாணவர்களின் கல்வித் தரத்தைக் குறைக்க வழிகோலுங் காரணங்களாகும். இவற்றையெல்லாம் ஆசிரியர்கள் உணர்ந்து கொண்டும். தம்மைத் திருத்திக் கொண்டும் செயலாற்றுவாராயிருந்தால் இந்நிலையை மாற்றியமைக்க முடியும். மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தவும் முடியும். ஆசிரிய சமூகமும் இழந்த கௌரவத்தைத் திரும்பவும் நிலைநாட்டிக் கொள்ளவும் முடியும்.

ஆசிரியர்களின் போக்கு

கடமையைக் கண்ணெனப் போற்றிச் செயலாற்றாத ஆசிரியர் சிலரும் மாணவர்களின் கல்வித் தரம் குன்றக் காரணகர்த்தராயிருக்கின்றனர். அதிகமாக லீவெடுக்கும் பாடசாலைகளில் பராமுகமாயிருக்கும் ஆசிரியர்கள் ஆகியோரே அவர்களாவர். இவர்களாலும் மாணவர்களின் கல்வி முயற்சி பாதிக்கப்படுகிறது என்பதைச் சொல்லித்தான் ஆக வேண்டும். மற்றொரு காரணம் அரசியல் தலையீட்டின் காரணமாக நடைபெறும் ஆசிரியர் இடமாற்றக் குழறுபடிகள். இச்செயலால் அன்றும்- இன்றும்- எப்பொழுதும் பாடசாலைக் கல்வித் தரம் பாதிக்கப்படுகிறது என்பதை யாராலும் மறுக்க முடியாது.

இன்று அதிகமான பாடசாலைகள் கலவன் பாடசாலைகளாகவே இயங்குகின்றன. இதுவும் கல்வியில் மாணவர் முன்னேறுவதைப் பாதிக்கும் ஒரு காரணமாகும். அதிகமாக மேல் வகுப்பு மாணவர்கள் வயதடைந்த வாலிபப் பருவத்தினராகவே இருப்பர். அவர்கள் மனதில் பருவ உணர்வுகள் எழும்புவது இயல்பு. வயது வந்த ஆண், பெண் மாணவர்கள் ஒன்றாயிருந்து ஒரு வகுப்பில் படிக்கும் போது மாணவர்களின் முழுக் கவனமும் படிப்பில் செலுத்தப்படுவதில்லை. இந்நிலையில் மாணவர்கள் குறிப்பிட்ட பரீட்சைக் குரிய பாடத்தைச் சரியான முறையில் கற்றுத் தேற வழியில்லை. ஆகவே பரீட்சைக்குத் தோற்றிய அவர்களில் அதிகமானோர் சித்தியடையாமலிருப்பதில் ஆச்சரியமில்லை. இன்றைய கல்வி மந்திரி அவர்கள் கலவன் பாடசாலைகள் நீக்கப்பட்டு ஆண் பெண் பிள்ளைகளுக்குத் தனித்தனியாகப் பாடசாலைகள் இயங்க வேண்டுமென்ற கொள்கையுடையோராக விளங்குகிறார் என அறிகிறோம். அக் கொள்கையைச் செயல்படுத்துபவராயிருந்தால் அது மதித்துப் போற்றற்குரியதாகும்.

இவ்விதமாக இடையூறுகள் நீக்கப்பட்டு விடுமாயின் பாடசாலைகளில் கல்வி முன்னேற்றத்துக்கு வழியுண்டு என்பதை ஐயமின்றிக் கூறலாம். எனவே மாணவர்களின் கல்வித் தரத்தைக் குறைக்கும் இந்த இடையூறுகளை நீக்க அரசாங்கமும் ஆசிரியர்களும் பெற்றோரும் முன்வரவேண்டும். அப்போது உரிய பயன் விளையும் எனலாம்.

**(*''தினகரன் 1965 யூலை 06''*)**

# வெலிப்பன்னை "மஸ்ஜிதுந் நூர்" பள்ளிவாசல் வக்புவும் ஸாஹுல் ஹமீது (ஒலி) கந்தூரியும்

வெலிப்பன்னை எனும் கிராமம் களுத்துறை மாவட்டத்தில் அளுத்தகமை - மத்துகமை வீதியில் எட்டாம் மைல் கல்லில் அமைந்திருக்கிறது. இந்தக் கிராமத்தில் முஸ்லிம்களே பெரும்பான்மையினராக வசிக்கின்றனர். இங்கு முஸ்லிம் குடியேற்றம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இங்கு குடியேறிய மக்கள் ஒன்று கூடிச் சங்கம் அமைத்துத் தம் வழிபாட்டுக்கு என ஒரு பள்ளி வாசல் அமைப்பதற்கு முனைந்தனர்.

இந்த முயற்சி நான்கு வருடங்களின் பின் இப்போது நிறைவு பெறுகிறது. தயாள சிந்தை படைத்த பல முஸ்லிம் கொடை வள்ளல்கள் இக்கைங்காரியத்துக்கு உதவி புரிந்தனர்.

இப்புதுப்பள்ளிவாசல் ''மஸ்ஜிதுந் நூர்'' என்ற நாமம் சூட்டப்பட்டு வக்பு செய்யும் வைபவம் 20.08.1969 அஸர் தொழுகையின் பின் நிறைவேற்றப்பட்டது.

பல மார்க்க அறிஞர்களும் கொடை வள்ளல்களும் முஸ்லிம் அரசியற் பிரமுகர்களும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர்.

இதே வைபவத்தின் பின்னால் மேற்படி ''மஸ்ஜீ துந் நூர்'' பள்ளிவாசலில் நாகூர் ஆண்டகை ஷாகுல் ஹமீது ஒலியுல்லாஹ் அவர்களின் கந்தூரி வைபவமும் நடைபெற இருக்கின்றது.

ஜனாப் எச்.எல்.எம்.புஹாரி என்பவரால் இக்கந்தூரி பதினெட்டு வருடங்களாக அவர் இல்லத்தில் நடத்தப்பட்டு வந்தது. சென்ற வருடம் முதல் இப்பள்ளிவாசலில் கந்தூரி நடாத்த ஒழுங்கு செய்யப்பட்டது.

பள்ளிவாசல் கட்டிட வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையிலே சென்ற வருடம் இக்கந்தூரி வைபவம் இனிது நடந்தேறியது. இந்த முறையும் மிக விமரிசையான வகையில் ''மஸ்ஜிதுந்நூர்'' பள்ளிவாசல் வக்பு வைபவத்துடன் மாலை மஃரிபுத் தொழுகையின் பின் பெரிய கந்தூரியாகத் தமாம் செய்யப்பட்டது.

இக்கந்தூரி வைபவம் பத்து நாட்கள் ஓதிவரப்பட்டுப் பத்தாம் நாள் பெரிய கத்தூரியாக நடைபெறும்.

இந்த மகத்தான வைபவத்தில் பல்வேறு இடங்களைச் சேர்ந்த முஸ்லிம் பெருமக்களும் கலந்து கொள்வது குறிப்பிடத்தக்கது.

''மஸ்ஜிதுந்நூர்'' பள்ளிவாசல் வக்பு வைபவமும் ஷாகுல் ஹமீது ஒலியுல்லாஹ் அவர்களின்கத்தூரி வைபவமும் வெலிப்பன்னைக் கிராமத்தின் சரித்திரத்தில் மிகவும் முக்கியம் வாய்ந்த இரு நிகழ்ச்சிகளாகும்.

*தினபதி - 22-08-1969*

# மஹான் செய்கு அப்துஸ் ஸமீஉ ஆலிம் அவர்களின் வாழ்வும் மறைவும்

22-09-1971 ந் திகதி புதன்கிழமை பிற்பகல் 12.45 மணி இருக்கும் 91ம் வருட புஹாரிக் கந்தூரி வைபவம் நடந்து முடிந்து அன்னதானம் நடந்து கொண்டிருக்கும் வேளை. அன்னதான வைபவத்தை ஒழுங்குற நடாத்தப் பக்கத் துணையாக அமைந்திருந்த ஒலிபெருக்கியிலே பின்வரும் அறிவிப்புச் செய்யப்பட்டது எல்லோரையும் நிலைதடுமாறச் செய்து செயலிழக்க வைத்து விட்டது:

''நமது ஷெய்கு நாயகம் அவர்கள் காலஞ் சென்று விட்டார்கள். ஒழுங்காகவும் துரிதமாகவும் வேலைகளைக் கவனியுங்கள். யாரும் மையித்தைப் பார்ப்பதற்கு அவசரப்பட வேண்டாம். 3.00 மணிக்கு எல்லோருக்கும் காட்டப்படும். இரவு 7.00 மணிக்கு அடக்கம் செய்யப்படும்.''

வயது முதிர்வினால் தளர்ச்சியடைந்து அடிக்கடி நோய் வாய்ப்பட்டுக் கொண்டிருந்த செய்கு நாயகம் அப்துஸ்ஸமி ஆலிம் அவர்களின் மறைவு வானொலியில் ஒலிபரப்பப்படவில்லை. பத்திரிகையில் வெளிவரவில்லை. மறைவுச் செய்தி கூறி ஊர் ஊராக யாரும் பயணஞ் செல்லவில்லை. எனினும் அவர்களின் மையித்துத் தொழுகைக்கு ஆயிரக்கணக்கானோர் சமுகமளித்திருந்தார்கள் என்பதையிட்டு யாரும் ஆச்சரியப் படாமலிருக்க முடியவில்லை.

தந்தையின் பிரார்த்தனை.

இன்றைய ஸமானில் இலங்கை முழுவதற்கும் ஓர் உயரிய ஷெய்காக' இஸ்லாம் மார்க்கத்தை நிலை நிறுத்திய மதத் தலைவராக அவர்கள் விளங்கினார்கள்.

மகான் ஷெய்கு அப்துஸ்ஸமி ஆலிம் அவர்கள் ஆன்றவிந்தடங்கிய பெரியாராக விளங்கினார்கள். இவர்கள் சிறுவயதில் கூட ''அப்பாவி'' போல் ஒதுங்கி இருப்பதைக் கண்டு இவர்களின் தகப்பனார் காதிரிய்யதுந் நபவிய்யாத் தரீக்காவின் ஷெய்காக அப்போது விளங்கிய செய்கு முஹம்மது ஹாஜியார் அவர்கள் மன வேதனைப்பட்டு அடிக்கடி இறைவனை இறைஞ்சி துஆப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தார்களாம். ''இறைவா! என்மகன் பொறுப்புக்களை ஏற்று முஸ்லிம் சமூகத்தை வழி நடாத்தும் ஆற்றல் இழந்தவராக ஆகிவிடுவாரோ? எமது வழிமுறைகளையும், சட்ட திட்டங்களையும் ஒழுங்குறப்பேணி மக்களுக்கு எடுத்துக் காட்டும் சக்தியை அவருக்குக் கொடுத்து ஜெயம் பெறவைப்பாயாக! யா அல்லாஹ்!'' என்று அவர்கள் பிரார்த்தனை புரிந்தவர்களாக இருந்திருக்கிறார்கள்.

இதிலிருந்து செய்கு அப்துஸ்ஸமீ ஆலிம் அவர்களின் இளமைக்கால நிலைமையை உற்றுணர்ந்து கொள்ளலாம். எனினும் அவர்கள் அறிவில் தேர்ச்சியுற்றவர்களாக அமைதியாக விளங்கி வெளியில் பிரகாசிக்க விரும் பாத குணத்தையுடையவர்களாகப் பிற்காலத்தில் பரிணமிக்கத் தொடங்கி னார்கள். தவிர இவர்களின் சிறு பிராயத்திலிருந்த உடற்பலமின்மை மற்றும் பலவீனமான குணவியல்புகளைப் பொறுத்து இவர்களின் தகப்பனார் முஹம்மது ஹாஜியார் அவர்கள் சில கட்டுப்பாடுகளை விதித்திருந்தார்கள். அவற்றை மீறாது நடந்து பழக்கப்பட்ட செய்கு நாயகம் அவர்கள் பிற் காலத்தில் அதே முறையில் ஒதுங்கி வாழ்ந்தமை பலரைச் சர்ச்சை பண்ணிக் கொள்ள வைத்ததோடு பாமர மக்களுக்கு அவர்களைப் புரிந்து கொள்ள முடியாத நிலைமையையும் ஏற்படுத்தி விட்டது.

கட்டுப்பாடான வாழ்க்கை

செய்கு நாயகம் அவர்கள் தம் நடைமுறை மூலமாக ஒருமக்கள் கூட்டத்தை மார்க்க வழியில் கட்டுப்படுத்தி வைத்துக் கொண்டிருந்தார்கள், என்பது சாலப் பொருந்தும்- மற்றவர்களுக்கு வழிமுறை கூறிக் கொண்டி ருக்கவில்லை. நடந்து காட்டினார்கள். உலகாயத நோக்குகளிலிருந்து தம்மை மிகத் தூரத்திற்கு விலக்கிக் கொண்டு மார்க்கச் சட்டதிட்டங்களை அனுஷ் டிப்பதன் மூலம் மற்றவர்களை வழி நடாத்தினார்கள். ''நாம் இன்னவிதம் செய்வோம்'' என்று கூறுவார்களேயல்லாமல், மற்றவர்களுக்கு ''இன்னவிதம் செய்யுங்கள்'' என்று கட்டளையிடாத வாழ்வு முறையின் தாற்பரியத்தை உற்று நோக்குங்கள் இந்த வழியை அவர்கள் பின்பற்றி வாழ்ந்தார்கள்.

இந்தக் காலத்தில் மக்களுக்கு எவ்வளவு போதனைகளும் உபந்நியாசங் களும் ஊட்டினாலும் அவர்கள் வழிப்படாதவர்களாக இருக்கிறார்களே! என்று பலமுறை அவர்கள் மனம் நொந்து கூறிக் கொள்வதை அவர்களுடன் பழகிய பலரிடமிருந்தும் நாம் அறியவருகிறோம். இந்த அபிப்பிராயம் அவர்கள் மனதில் ஊறியிருந்தமையே அவர்கள் பெரிதும் மார்க்க வழியை அனுஷ்டிப்பதில் தம்மை அர்ப்பணித்திருந்தமைக்கு ஒரு காரணம் ஆகும்.

இவர்கள் ஹிஜ்ரி 1310ல் பிறந்தார்கள். பல ஆலிம்களிடம் மார்க்கக் கல்வியைக் கற்றுக் கொண்டு தகப்பனார் முஹம்மது ஹாஜியார் அவர்களின் மறைவின் பின் அவர்கள் பொறுப்புக்களை ஏற்று நடாத்த வேண்டியவர் களானார்கள். காதிரிய்யதுந் நபவிய்யாத் தரீக்காவின் செய்காகத் திகழ்ந்த இவர்களின் தகப்பனார் முஹம்மது ஹாஜியார் அவர்களுக்குப்பின் அத்தரீக் கத்தின் தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்க வேண்டியவர்களானார்கள்.

ஈழத்திலே, கீர்த்தி பெற்றிலங்கும் நபி பெருமானார் (ஸல்) அவர்களின் தூய ஹதீஸ்களை விளம்பும் வேர்விலை ஸஹீஹ் புஹாரி வைபவம் ஆரம்பமானதிலிருந்து 30 வருடங்களின் பின் நீண்ட காலமாக செய்கு அப்துஸ்ஸமி ஆலிம் அவர்கள் பொறுப்பிலேயே நடந்தேறியிருப்பதைக் காண்கிறோம். ஹிஜ்ரி 1331 லிருந்து ஹிஜ்ரி 1389 வரை இவர்களே பொறுப் பேற்று புஹாரி வைபவத்தை நடாத்தி வந்தார்கள்.

எளிமையான வாழ்க்கை

தமது பாட்டானாரான ஷெய்கு முஸ்தபா நாயகம் அவர்களை இயன்ற ளவு பின்பற்ற முனைந்திருந்த செய்கு நாயகம் அவர்கள் புகழ்ச்சி விரும்பா தவர்கள். எளிமை வாழ்வு நடாத்தியவர்கள். அதன் மூலம் எளிமை வாழ்வை மக்களுக்கு வற்புறுத்தினார்கள். பயபக்தி மிக நிறைந்த அன்னார் எப்போதும் தம் பாட்டானார் மேல் பிரியம் வைத்துப் பேசுவார்கள். அந்த ஏற்பாடு களைப் பின்பற்றி அவ்வழியில் ஒழுகிய செய்குனா அவர்களின் கண்ணிய வாழ்வு அவர்கள் அண்மையில் செல்ல எம்மையே அச்சப்படுத்தக் கூடிய தான நிலைமையிலிருந்தது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

சென்ற 22ம் திகதி புஹாரி மஜ்லிஸ் ஓதி முடித்து துஆப் பிரார்த்தனை முடிந்த அவ்வேளையில் தமது இல்லத்தில் அவர்களின் றூஹ¬ அடங்கப் பட்டாலும் மக்கள் குழப்பமடைவார்கள் என்பதற்காகச் சிறிது காலந் தாழ்த்தியே அறிவிப்புச் செய்தார்கள்.

அவர்களின் வாழ்வு போலவே அவர்களின் அந்திமக் கிரியைகளும் எளிமையான முறையிலேயே நடந்தேறின. எவ்வித படாடோபமுமிருக்க வில்லை. பழைய கட்டிலொன்றில் சாதாரண நிலையில் இத்தகைய மகான் ஒருவரின் ''மையித்து'' வைக்கப்பட்டிருந்தமை எல்லோருக்கும் அறிவுறுத் தும் ஒரு பாடமாக அமைந்திருந்தது. 81 வயதை அடைந்திருந்த அவர்கள் தோற்றம் மரணத்தின் பின் பார்வைக்கு அவ்வளவு வயதுடையவர்களைப் போலக் காட்டவில்லை என்பதைப் பலரும் அவதானித்திருப்பர்.

இத்தகைய பெரியாரவர்களின் மறைவு ஈழம் வாழ் முஸ்லிம் சமூகத்தின ருக்கு ஈடு செய்ய முடியாத ஒரு நஷ்டமாகும். அன்னாருக்கு மறுமையில் இறைவன் மேலான பதவியைக் கொடுத்தருள்வானாக!

''தினகரன்'' ஞாயிறு இதழ் 1971 -10-10

# உலக மகா கவி இக்பால்

வங்கக் கவியரசர் தாகூர் அவர்கள் இக்பாலின் மரணம் குறித்துப் பின்வருமாறு குறிப்பிட்டார்:

''சர் முஹம்மது இக்பால் அவர்களின் மரணம் இலக்கியத்திலே ஒரு நிரப்ப முடியாத இடைவெளியை உண்டாக்கி விட்டது. அது, குணமடைய நெடுநாட் செல்லும் புண்ணைப் போன்றது. உலகில் இந்தியா பெற்றுள்ள, ஸ்தானமோ மிகச் சிறியது. அதிலும் உலகம் முழுவதும் போற்றும் கவிதைகள் எழுதிய கவிஞரின் மறைவு இந்தியாவுக்கு ஈடு செய்ய முடியாத பெரு நஷ்டமாகும்.''

மகாகவி அல்லாமா இக்பாலை ஒரு மகாகவியாக வும் இலட்சியவாதியாகவும் தத்துவ ஞானியாகவும் வழக்கறிஞராகவும் சிந்தனைச் சிற்பியாகவும் காண் கிறோம். இத்தகைய பல்துறைத் திறம் பூண்டவர்களாக வரலாற்றில் விரல்விட்டு எண்ணக் கூடிய சிலரையே காணக் கிடைக்கிறது. அவ்வாறான ஒரு மதிப்பு வாய்ந்த ஸ்தானத்தில் திகழ்ந்து நின்று மறைந்தவர் தாம் கவிஞர் அல்லாமா இக்பால் அவர்கள்.

அத்தகைய ஓர் உயர்ந்த அந்தஸ்தை மகாகவி இக் பால் அடைய அவரது வளர்ச்சியோடொன்றிய சூழ் நிலையே வாய்ப்பாக அமைந்தது எனலாம். இல்லா விடில் வெறும் மார்க்கக் கல்வி பெற அனுப்பப்பட விருந்த இக்பால் அவர்கள் அரேபிய மொழி, பாரசீகம், உர்து போன்ற மொழித் திறமையும் தத்துவ சாத்திரம், சட்டத்துறை அறிவு, கவித்துவ ஆற்றல் என்பன பெற்ற

ஞானியாக, அறிஞராக தத்துவாதியாக, ஆசிரியராக, வழக்கறிஞராக, அரசியல்வாதியாக அவர் எங்ஙனம் திகழ்ந்திருக்க முடியும்? இப்படியான பல, துறைகளில் ஆற்றல் பெற்றுப் பதவி வகித்துச் சேவையாற்றிய அல்லாமா இக்பால் அவர்களை நாம் ஒரு மாபெரும் கவிஞராக முன்வைக்கிறோம்.

பஞ்சாபி, உர்து, பாரசீகம் என்ற மும்மொழிகளிலும் இவர் கவிகள் யாத்துள்ளார். கீழைத்தேய மேலைத்தேய வாழ்க்கை முறைகளை நன்கு ஒப்புநோக்கி உணர்வு பூர்வமாக நடுநிலை நின்று வாழ்வின் எல்லைகளைத் தெளிவுபடுத்தி விளக்கியவர் இக் கவிஞர். மேல் நாட்டில் விளங்குவ தென்ன,கீழ் நாட்டின் பகைப்புலம் எது, என அவர் தெளிவுறக் கண்டார். இவ்வாறு கண்டு கொண்டு தம் இனிய கவிகள் மூலமாக நாட்டு மக்கள் எவ்வாறான வாழ்வைப் பின்பற்ற வேண்டும் என்று தேசிய ரீதியில் அவர் எடுத்தோதினார். எனவேதான் இக்பால் ஒரு முஸ்லிம் கவிஞர் என்று அழைக்கப்படுவதை மறுத்துரைக்க முனைந்த ஹிந்து அறிஞர் சர் தேஜ் பஹதூர் ஸப்ரூ ''இக்பால் முஸ்லிம் தத்துவத்தையும் முஸ்லிம் கலாசாரத்தையும், முஸ்லிம் வீரச்செயல்களையும் பற்றி அதிகம் எழுதியுள்ளார் என்பது உண்மைதான். ஆனால் மில்ட்டனைக் கிறிஸ்தவக் கவிஞன் என்று கூறி அவர் கவிதைகளைக் கட்டுப்படுத்தவோ காளிதாசனை ஹிந்து சமயக் கவி என்று கூறி அவர் கவிதை விலாசத்துக்கு வேலியிடவோ யாரும் முயன்றதில்லை. மற்ற மதத்தினரும் இதே காரணத்துக்காக இக்கவிஞர்களின் பெருமையைக் குறைத்துக் கூறியதுமில்லை. இக்பால் முஸ்லிம் சரித்திர வெற்றிகளையும் கலாசார போதனைகளையும் குறித்து எழுதினால் அதற்காக முஸ்லிம் அல்லாதார் அவரைக் குறைவாக மதிப்பிட்டு விடமுடியாது'' என்று எழுதியுள்ளார்.

இக்பாலின் ஆரம்பகாலக் கவிதைகள் பொது நோக்கில் எழுந்து பலர் மனதை ஈர்ப்பனவாகி இருந்தன. அஸ்ராரே குத் இ, ரமூஸிபேகுத் இ என்ற தத்துவமொழி நூல்களுக்கு முன்னுற்ற காலக் கவிதைகட்கும் பின்னுற்ற காலக் கவிதைகட்கும் இடையில் கவிதைப் போக்கில் பெரும் வேறுபாட்டைக் காணக்கூடியதாக இருக்கிறது. வாழ்க்கையின் சகல அம்சங்களையும் பிரச்சினைகளையும் பிற்பட்டகாலக் கவிதைகளிலே அவர் திறம்பட விளக்குகிறார் எனலாம். ஜாவீது நாமா, ஜவாபே ஷிக்வா போன்ற கவிதை நூல்களில் வாழ்வு முறைகளும் வாழ்க்கைப் பிரச்சினைகளும் விளக்கப்பட்டுள்ளன. பிற்காலக் கவிதைகள் அதிகமும் இஸ்லாமியக் கொள்கைகளைப் பகைப்புலமாகக் கொண்டு அவற்றை விளக்குவனவாக அமைந்தன. அதற்குக் காரணம் குர்ஆனையும் இஸ்லாமியக் கொள்கைகளையும் முஸ்லிம்களின் வாழ்க்கை, உலக மக்கள் வாழ்க்கை முறைகளுடன் ஒப்பிட்டாய்ந்த அவரை இஸ்லாத்தின் உண்மைகள் மனத்தைக் கவர்ந்து அவற்றில் நிலைபெறுவாராயினார். அவரது அந்திமக் காலங்களில் அவர் இஸ்லாம் மதத் தீவிரவாதியாக விளங்கினார். இத்தகைய ஒரு புலமை

பெற்றவராகத் திகழ்ந்து அவர் யாத்த பாடல்கள் சிறப்பான முறையில் முஸ்லிம் சமூகத்துக்கு விழிப்புணர்ச்சியூட்டின என்பது உண்மையே!

ஆனாலும் ஆரம்பக் காலத்திலிருந்து சர் இக்பால் அவர்கள் யாத்த பாடல்களைப் பொதுவான முறையில் நோக்கினால், அவர் உலகம் முழுவதற்கும் பாடினார் என்பதை உணரலாம். ஆகவே அவர் முஸ்லிம் கவிஞர் மாத்திரமல்ல. உலக மகாகவி என்பதை தேஜ் பகதூர் ஸப்ரூ என்ற ஹிந்து- உர்து மொழி அறிஞருடன் நாமும் சேர்ந்து ஒப்புக் கொண்டே ஆக வேண்டும். இதனையே பாரதப் பிரதமர் காலஞ் சென்ற ஜவஹர்லால் நேரு, கவி இக்பால் அவர்களின் ஆசிரியர் சர் தோமஸ் ஆர்னால்ட் ஆகியோர்களின் கூற்றுக்களும் உறுதிப்படுத்துகின்றன.

இத்தகைய மகாகவி இக்பால் அவர்கள் 1873 ல் சியால்கோட் நகரில் பிறந்தார்கள். சியால்கோட் கல்லூரியில் ஆரம்பக் கல்வி பயின்ற அவரை மதக்கல்வி பெற அனுப்ப அவரது குடும்பத்தார் விழைந்தனர். எனினும் மீர் ஹஸன் எனும் அவரது ஆசிரியரின் அருமுயற்சியால் அவரது கல்வித்துறை மாற்றம் பெற்று லாகூர் சென்று கற்கத் தொடங்கினார். அங்கு சர் தோமஸ் ஆர்னால்ட் ஆசிரியராக இருந்தார். அவரும் கவிஞர் இக்பால் அவர்களைத் தட்டிக் கொடுத்து அவரது கவித்துவ ஆற்றலை வளப்படுத்தலானார்.

இவ்வாறாக அவரது சூழ்நிலை அவரைப் பெருமுயற்சி பண்ணச் செய்து பெருங்கவிஞராக மாற்றியது என்பதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. ஆசிரியரின் ஆலோசனைப் படி லாகூரிலிருந்து லண்டன் சென்ற இக்பால் அவர்கள் கேம்பிரிஜ் டிரினிடி கல்லூரியில் தத்துவ சாஸ்திரம் பி.எச்.டி.பட்டம் பெற்றார். ஜெர்மன் சென்று மூனிச் சர்வகலாசாலையில் டாக்டர் பட்டம் பெற்றார். இதே காலத்தில் பாரிஸ்டராகவும் தேறி சட்டத் துறை வக்கீலாகவும் மாற முடிந்தது. இவர் தனது வாழ்க்கைச் செலவுக்காக வக்கீல் தொழிலையே மேற்கொண்டார். சிறிது காலம் ஆசிரியராகவும் சேவை புரிந்துள்ளார். அரசியல்வாதியாகவும் திகழ்ந்தார். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இவரது கவிதைகளில் ஈர்ப்புண்ட லண்டன் பிரமுகர் ஒருவரினதும், இந்திய கவர்னரினதும் சிபாரிசின் பேரில் எதிர்பாராத விதமாக கவி இக்பால் அவர்களுக்கு 'ஸர்' பட்டமும் கிடைப்பதாயிற்று.

இத்தகைய பல பட்டங்கள் பெற்ற இக்பால் அவர்கள் ஐரோப்பிய நாடெங்கும் சுற்றுப் பயணம் செய்துள்ளார். பல இடங்களிலும் சொற் பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார். எனினும் இவரது சகல ஆற்றல்களும் இவரது கவிதா மேதாவிலாசத்தின் மூலமே வெளிப்படுத்தப்பட்டு இவரை உலகம் முழுவதும் பிரபலமான இக்பாலாக மாற்றியது என்பது சாலப் பொருந்தும்.

1947ம் ஆண்டு ஆகஸ்ட் 15ந் திகதி புதுடில்லி பாராளுமன்றத்தில் சுதந்திரம் கண்ட இந்தியா இக்பால் அவர்களின் தேசிய கீதத்தையே முதலில் பாடியது.

''ஹிந்து நமது ஜென்மபூமி
ஹிந்துஸ்தான் நம்முடையது''

என்று கவிஞர் அப்பாடலில் வலியுறுத்துகிறார்.

உலகிலுள்ள பல தீர்த்தக்கரைகளுக்குச் செல்கிறீர்களே! அவைகளைக் காட்டிலும் சிறந்த தீர்த்தம் உங்கள் நாடென்ற உணர்விலையோ? நாட்டுப் பற்றைக் காட்டிலும் சிறந்த பற்று வேறிலை என அறியீரோ? -என்று கவி மூலம் தட்டிக் கேட்கிறார் கவிஞர். இத்தகைய தேசப்பற்று மிக்க நம் கவிஞரின் பாடலொன்றை மேற்கோள்காட்டி ஆரம்பித்து ஜவஹர்லால் நேரு அவர்கள் 1957ம் ஆண்டு ஜனவரி முதல் வாரத்தில் இந்தூரில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் தேர்தல் விஞ்ஞாபனம் பற்றி எடுத்துக் கூறிய சம்பவம் பிரசித்தமானது.

இப்படியான தேசியப் பாடல்களைப் பாடி உணர்வூட்டிய கவிஞர் அவர்கள் நிரந்தரமான பாகிஸ்தான் பிரிவினை கோரினார் என்று சொல்வதற்கில்லை. அவர் இந்தியாவுடனிணைந்த முஸ்லிம் இராஜ்யத்தை அவாவியிருக்கலாம். எனினும் அவரது கருத்தால் ஈர்க்கப்பட்டுச் செயல்பட்ட ஜின்னா போன்ற அரசியல் தலைவர்கள் பாக்கிஸ்தானைப் பிரித்துத் தனி முஸ்லிம் நாடாக்க முனைந்து வெற்றிபெற்றனர். இந்தப் பிரிவினை நடக்கும் போது மகாகவி இக்பால் அவர்கள் உயிருடனில்லை. எனவே இது பற்றிய தீர்க்கமான முடிவு ஒன்றும் சொல்வதற்கில்லை. எனினும் கவிஞர் ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற பொதுமை விரும்பிப் பாடல்கள் யாத்துள்ளமையை நாம் காண்கிறோம்.

தனிப்பட முஸ்லிம் சமுதாயத்தை அவர் தட்டி எழுப்பி இஸ்லாத்தின் வழியில் நடாத்தினார் என்பதும் உண்மையே! முஸ்லிம் சகோதரர்களே! 'உங்களை நீங்கள் உயர்த்திக் கொள்வீர்களாக!', என்று முஸ்லிம் சமூகத்தைப் பார்த்து வேண்டுகோள் விடுக்கிறார்.

''நாட்டை வணங்குகிறீர்கள். ஜாதியைப் போற்றுகிறீர்கள். பணத்தைக் கும்பிடுகிறீர்கள். சமாதிகளைச் சுற்றுகிறீர்கள். இயற்கையை அஞ்சலி செய்கிறீர்கள். விதியைக் கண்டு தலை கவிழ்கிறீர்கள். இறைவனில் உங்களுக்கு நம்பிக்கையில்லை. உறுதியில்லை. தியாகமில்லை. இதனால் முஸ்லிம் என்று காட்டிக் கொள்ள உங்களுக்கு அவ்வளவு வெட்கம்,'' என்று தன் மனவேதனையை எல்லாம் சமூகத்தை நோக்கிக் கொட்டுகிறார்.

'பேசிப் பேசி இராதே! ஏதாவது செய்! விதி உன் காலடியில்....' என்று மனித குலத்துக்குப் போதனை செய்யும் கவி இக்பால் அவர்கள் தரும் அறிவுக் கருவூலங்கள் அனந்தம். ஜாவீது நாமா, ஷிக்வா, ஜவாபே ஷிக்வா, அஸ்ராரே குத்இ, ரமூஸிபேகுத்இ, ஸர்பி கலீம் என்ற நூல்கள் பிரபல்யமானவை. வேறு பல கவிதைகளும், வசன நடைநூல்களும் எழுதியுள்ளார்.

தினகரன் 1973 - 05-18

# ஸக்காத் பற்றிய சிந்தனைகள்

புனித ரம்ழானிலே புண்ணிய கருமங்கள் மேற் கொள்ளப்படுகின்றன. ரம்ழான் மாதத்தில் செய்யப் படும் நற் கருமங்களுக்கு அதிக நன்மைகளை அருளு வதாக அல்லாஹ் வாக்களித்துள்ளான். இதனாலன்றோ முஸ்லிம்கள் இம்மாதத்தில் அதிகமதிகமான நன்மை களைச் செய்து வாழ முற்படுகின்றனர்! விசேடமாக வசதி படைத்த முஸ்லிம் தனவந்தர்கள் ஸக்காத், ஸதகா போன்ற கொடைகளை ஏழை எளியவர்களுக்கும் வசதி யற்றோருக்கும் வழங்கி இறை சந்நிதானத்தில் இன்பம் பெறுகின்றனர். புனித ரம்ழான் மாதத்தில் ஸக்காத் கொடைகளை வழங்குவதால்இறைவனின் வாக்குறு திப்படி பன்மடங்கு நன்மை பெறலாம்- என்ற நன் னோக்குடனன்றி அம்மாதத்தில்தான் ''ஸக்காத்'' செலுத்த வேண்டும் என்ற கட்டாயமன்று. தன் பொருள் செல்வம் ஆகியவற்றுக்கு ஒரு வருடம் பூர்த்தியாகும் போது கணக்கிட்டு அதற்குரிய ''ஸக்காத்''தை அவ்வப் போது செலுத்தி விடலாம். இந்த ''ஸக்காத்து பற்றிய சிந்தனைகள்'' ஒவ்வொரு முஸ்லிம்களது உள்ளத்தி லும் உதிக்கச் செய்வது பயனுடையதாகும்.

ஈமான் கொண்டு கலிமாச் சொல்லி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட ஒருவன் நாளொன்றுக்கு ஐந்து விடுத் தம் இறைவனைத் தொழுதாக வேண்டும். இதற்கு அடுத்ததாகத் தத்தமது செல்வம், பொருள் என்பவற்றி லிருந்து இறைவனுக்குரிய பங்கைக் கணக்கிட்டு ஸக் காத்தாகக் கொடுக்க வேண்டியது கட்டாயக்

கடமையாகும். தொழுகைக்கு அடுத்ததாக ''ஸக்காத்'' கடமையாக்கி வைக்கப்பட்டுள்ளது. என்பதைத் திருக்குர்ஆன் மூலம் நாம் தெரிந்து கொள்ளலாம். திருக்குர் ஆனுக்கு முன்னுள்ள வேதங்களிலும் தொழுகை, ஸக்காத் என்னும் இரு கடமைகளும் வலியுறுத்தப்பட்டுள்ளன. ஏனைய நோன்பு, ஹஜ் கடமைகளுக்கு முன்பதாகத் திருக்குர்ஆன் தொழுகைக்கு அடுத்து ஸக்காத்தையே வற்புறுத்திச் சொல்வதை அவதானிக்கலாம். எனவே சிந்தித்துப் பார்க்கும் போது தொழுகை, ஸக்காத் என்பன இஸ்லாத்தின் பிரதான கடமைகள் என்று கூறலாம். இஸ்லாத்தை நிலை நாட்டும் பிரதான தூண்கள்தாம் இவை. இந்த இரு கடமைகளும் இல்லையேல் இஸ்லாமே இல்லை என்ற முடிவுக்கு வரலாம்.

ஒரு மாபெரும் சக்தி

ஏனெனில் குறிப்பாக ''ஸக்காத்'' பற்றி நாம் சிந்தித்துப் பார்க்கும் போது அது இஸ்லாத்தை வளர்க்கும் ஒரு சக்தியாக நமக்குத் தோற்றுகிறது. ஒரு குறிப்பிட்ட சாராரிடம் செல்வம், பொருள் என்பன தேங்கி நிற்காமல் பலர் மத்தியிலும் பங்கிடப்பட ஏதுவாகிறது. ஸக்காத் மூலம் ஏழை எளியவர்- தனவந்தர் தொடர்பு நெருக்கமுறுகிறது. இதனால் சகோதர பாசம் இரு சாராருக்கிடையிலும் நெருக்கமுற உருவாகி உதவி உபகாரங்கள் மேலும் மேலும் மேற்கொள்ளப்படக் காரணமாகிறது.

இந்த ''ஸக்காத்'' ஆனது சமூகத்தைச் செயற்பட வைக்கிறது எனலாம். செல்வம் ஒரு சிலரிடம் ஒதுங்கி இருப்பது அந்நாட்டு முன்னேற்றத்தைத் தடுக்கவல்லது. இதனாலன்றோ உலகாயத அரசியற் பொருளாதாரக் கொள்கை செல்வத்தைப் பலரிடமும் பிரித்து விடுவதில் கருத்துக் கொண்டு சட்டங்கள் ஆக்குகின்றன. நமது இஸ்லாம் மதமோ இதனை அடிப்படைக் கடமையாக அமைத்து இந்நிலைமையை மதரீதியில் கட்டாயப்படுத்துகிறது எனலாம்.

'ஸக்காத்' எனுஞ் சொல் தூய்மை எனும் கருத்தைத் தருகிறது. ஒருவரின் செல்வத்தைத் தூய்மைப்படுத்துவதுதான் ஸக்காத். செல்வம், மனித வளம் என்பன ஸக்காத் மூலம் தூய்மைப் படுத்தப்படுகின்றன. இதனால் இப்பெயர் வழங்கப்படுகிறது. தனது பொருளிலிருந்து தேவையானவர்களுக்கும் எளியவர்க்கும் வழங்குவதுதான் ஸக்காத். இந்த ''ஸக்காத்'' கடமையை நிறைவேற்ற ஒருவர் மறுப்பாரேயானால் அவர் இறைவனின் அருட் கொடையைப் பெற்றுப் பிரதி உபகாரம் செய்யாத, செய்நன்றியில்லாத, துரோகி என்று கருதலாம். ஏனெனில் ஒருவனுக்கு அபரிமிதமான செல்வத்தை அளிப்பது இறைவனின் நாட்டத்தைப் பொறுத்தது. அவன் அப்படி இறைவன் அளித்த செல்வத்தைப் பெற்று இறைவனின் வேண்டுகோளுக் கேற்ப உதவி புரிய மறுப்பானேயானால் அவன் எவ்விதமான கஞ்சனத்தனம் உடையவன், எந்த அளவிலும் பிறர் நலனிலும் அக்கறையில்லாத சுயநல

வாதக் கருமி என்பதை உணர்தல் கூடும். தன் மதத்திற்காகவோ இறைவனுக் காகவோ, தன் முஸ்லிம் சகோதரனுக்காகவோ சமுதாயத்திற்காகவோ அவனிடமிருந்து இம்மியும் உதவி எதிர்பார்க்க முடியாது என்பது தெட்டத் தெளிவாகிறது.

இறைவன் கூறுகிறான். ''**நீங்கள்** அறிந்து வைத்துக் கொள்ளுங்கள் இறைவழியில் செலவிடுவதற்கு உங்களை அழைக்கப்படும் போது உங்களிற் சிலர் கஞ்சத்தனம் புரிகின்றனர். கஞ்சத்தனம் காட்டுகிறவர்கள் தம் மனத்துக்குத் தான் கஞ்சத்தனம் காட்டுகிறார்கள். இறைவன் தேவையற்ற வன். நீங்களோ அவனைச் சார்ந்திருப்பவர்கள். இறைவழியில் செலவு செய்வதிலிருந்து நீங்கள் மறுத்து நின்றால் உங்களுக்குப் பதிலாக வேறொரு சமுதாயத்தைக் கொண்டு வந்து விடுவான். அவர்கள் உங்களைப் போல் இருக்க மாட்டார்கள். ***(48:38.அல்குர் ஆன்)***

மேலும் கூறுகிறான்.

''இறை வழியில் செலவு செய்யாமல் தங்கத்தையும் வெள்ளியையும் சேர்த்து வைக்கிறார்களே! அவர்களுக்குக் கொடிய தண்டனையுண்டு, என்று கூறுவீராக! (தங்கம் வெள்ளி ஆகிய) அவற்றை நெருப்பில் பழுக்கக் காய்ச்சி அவற்றைக் கொண்டு அவர்களுடைய நெற்றிகளிலும் விலாக்களிலும் அவர்களுடைய முதுகுகளிலும் சூடிட்டு ''உங்களுக்காக நீங்கள் சேகரித்து வைத்திருந்த இவைகளைச் சுவையுங்கள்'' என்று கூறப்படும் நாள் பற்றி அவர்களுக்கு அறிவிப்பீராக! ''***(8.34 35 குர்ஆன்)*** என்றெல்லாம் இறைவன் கட்டளை இடுகிறான். இவற்றிலிருந்து கட்டாயமாகச் செலவு செய்யப்பட வேண்டிய செலவைச் செய்யாது கருமியாய் இருப்பவனை இறைவன் தண்டனைக்காட்படுத்துவான் என்பது சொல்லி வைக்கப்படுகிறது.

எனவே முஸ்லிம் ஒருவன் தனது செல்வம், பொருள் என்பவற்றி லிருந்து உரிய பகுதியை அல்லாஹ்வுக்காக ஏழை எளியவர்களுக்குக் கொடுக்காது வைத்திருக்க இஸ்லாத்தில் எவ்வித இடமுமில்லை என்பது தெட்டத் தெளிவாகிறது. இவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து செல்வம் பங்கிடப்படுவதை வற்புறுத்துவதன் மூலம் இவ்வாறு செய்வது சமூக வாழ்வில் மிக அவசியம் என்பது சிந்திக்கப்புகின் தெளிவாகும்.

வாழ வழி வகுக்கிறது.

இத்தகைய பல கொடுமைகளைத் தவிர்த்து நாட்டில் சகஜ நிலை உருவாகி மனித சமூகம் மகிழ்ச்சியுடன் வாழ வழி செய்வதே ஸக்காத்தின் நோக்கம் எனலாம்.

இவ்விடத்தில் சிலர் கேட்கலாம், இரண்டரை விகிதத்தை செலவிட்ட தில் இத்தகைய பயன்களை எதிர்பார்க்கலாமா? ஆம்; நியாயமான கேள் வியே! எனினும் இஸ்லாம் மதம் இரண்டரை விகிதத்தைக் கணக்கிட்டுக்

கொடுக்கும்படி வற்புறுத்திச் சொல்வதுடன் நின்றுவிடவில்லை. மேலும் மேலும் ஸதகாவெனும் தான தர்மங்களைச் செய்யும்படி எடுத்தியம்பு கின்றது. குறைந்த பட்சம் இரண்டரை வீதத்தையாவது கருமித்தனம் காட்டாது செலவிட்டு விட்டு மேலும் மேலும் உதவி புரியுங்கள் என்று கூறுகிறது இஸ்லாம்.

இப்படியாகச் செல்வந்தர் கொடுக்கும் பொருள், செல்வம் என்பன எவ்வாறானவர்களுக்கிடையில் பங்கிடப்பட வேண்டும என்றும் வற் புறுத்துகிறது,

**'ஸக்காத்' ஏழைகளுக்கும் ஸக்காத் வசூலிக்கும் அதிகாரிகட்கும் புதிதாக இஸ்லாத்தில் சேர்ந்தவர்கட்கும் அடிமைகளை விடுதலை செய்வ தற்கும் கடனில் மூழ்கியவர்களுக்கும் வழிபோக்கர்களுக்கும் (பீஸ் பீலில்லாஹ்) இறைதுறையில் எல்லா வகைகட்கும் உரித்தானதாகும். இது அல்லாஹ் ஏற்படுத்திய கடமையாகும். அல்லாஹ் மிகப் பேரறிஞனாகவும் விவேகமுள்ள வனாகவு மிருக்கிறான்.'** *(9-69 அல்குர்ஆன்)*

இத்தகையவர்கட்கிடையில் ஸக்காத்தைக் கொடுத்து விட்டு அதனால் பெயர் புகழ், பெற நோக்கங் கொள்வது இஸ்லாத்தின் பாற்பட்டதல்ல. இன்று பல செல்வந்தர்களிடம் இப்படி ஒருமுறை இருந்து வருகின்றது. பணத்தை வாரி வாரி இறைத்துச் செலவு செய்வார்கள். அவர்களின் ஒரே நோக்கம் மனிதர்களிடம் பெயர் வாங்கிப் புகழ் அடைதலே ஆகும்.

இந்தப் புகழ் வழியாக அனுசரணை பெற்று அதிகாரங்களையும் பட்டங் களையும் கைப்பற்றுவதே குறிக்கோளாக இருக்கிறது. இப்படியான பட்டங் களைப் பெற்று ஊரிலும் நாட்டிலும் அதிகாரம் செலுத்துவதுடன் தன்னைப் பற்றிப் பெருமையாகக் காட்டிக் கொள்ளவும் முற்படுகிறான். இத்தகைய நோக்கங்களுடன் செலவிடப்படும் பணம், பொருள்களுக்காக இறைவ னிடத்தில் நற்கூலி இல்லை. இதனை இறைவனே வற்புறுத்திச் சொல்கி றான். மறுமை நாளில் இறைவன் சந்நிதானத்தில் விசாரணைக்கு எடுக்கப் படும் போது இத்தகையவர்களை நோக்கி உமக்குரிய கூலியை உலகத்தில் நீர் பெற்றுக் கொண்டீர், இங்கு எவ்வித நன்மையும் கிடைக்க மாட்டாது என்று இறைவன் கூறுவான். எனவே ஸக்காத் மற்றும் தானதர்மங்கள் வழங்குதலில் உலகத்தில் பிரதிபலன் எதிர்பாராது இறைவனுக்காக என்ற நல்ல எண்ணத்துடன் செய்யப்பட வேண்டும்.

இப்படியான நல்ல எண்ணத்துடன் செய்யப்படும் 'ஸக்காத்'திற்குப் பிரதி பலனாக இறைவன் அள்ள அள்ளக் குறையாத செல்வத்தை வழங்கிக் கொண்டிருக்கிறான். இறைத்த கிணறு ஊறும் என்பதுபோல இன்று நம் சமூகத்தில் இத்தகைய நல்லெண்ணம் படைத்த செல்வந்தர்களின் செல்வம் கொடுக்குந்தோறும் வளர்ந்து வருவதையும் அவர்கள் எதிர்பாராத புகழும்

பாராட்டும் நாலா பக்கங்களிலிருந்தும் வந்து சேர்வதையும் நிதர்சனமாகக் காணக்கூடியதாயுள்ளது.

பலவித பயன்கள்

எனவே உற்று நோக்குவோமானால் 'ஸக்காத்' எனும் கட்டாயக் கடமையானது பலவித பயன்களை ஏற்படுத்துகிறது என்பதை அறிதல் சாலும்.

ஸக்காத் கொடுப்போரின் செல்வம், மனம் தூய்மையடைகின்றன. தற்பெருமை, அகங்காரம் குறைந்து மனிதன் என்ற நினைப்பில் அவர் வாழக்கூடியதாக அமைகிறது. ஏழை எளியவர்களின் துயர் தீர்கிறது. செல்வம் குறிப்பிட்ட இடத்தில் தேங்கி நிற்காது பல்வேறிடங்களிலும் பரந்து செல்கிறது. இதனால் தொழிற்பாடுகள் அதிகரித்து நாட்டின் பொருளாதார வளர்ச்சி பெருகுகின்றது. வசதியற்றவன் தொழில் செய்து வாழ வழியமைக்கிறது. கடன் தொல்லைகளிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள உபகாரமாகின்றது. மனிதர்களுக்கிடையில் பரஸ்பர ஒற்றுமையும் ஒத்தாசை உபகாரங்கள் செய்து கொள்ளும் மனோபாவமுமேற்படுகின்றது. பணக்காரன், ஏழை என்ற வேறுபாடு சமூகத்திலிருந்து களையப்பட்டு எல்லோரும் மனிதர் என்ற சமத்துவநிலை பேணப்படுகிறது. சமூகத்தில் மற்றும் பலரும் வசதியுடையோராகவும், செல்வநிலை எய்தப் பெறுதலும் சாலும்.

இத்தகைய பல உயரிய நோக்கங்களைக் கொண்ட ஸக்காத்தின் உரிய பலனைப் பெற வேண்டுமானால் அது உரிய முறையில் விநியோகிக்கப்பட வேண்டும். நமது இலங்கை முஸ்லிம் சமுதாயத்தைப் பொறுத்தவரையில் உள்ள பெருங்குறை யாதெனில் ஸக்காத் விநியோகிக்கும் சீரிய முறை ஒன்று உருவாக்கப்படாமையே. இஸ்லாமிய ராஜ்யங்களில் அரசாங்கத்தின் மூலம் 'ஸக்காத்' அறவிடப்பட்டு ஏழைகள் மத்தியில் பங்கிடப்பட்டதாகச் சரித்திரம் கூறுகிறது. ''உங்களைச் சேர்ந்த செல்வந்தர்களிடம் இருந்து 'ஸக்காத்' வசூலித்து உங்களைச் சேர்ந்த ஏழைகட்குப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும், எனறு நான் கட்டளையிடப்பட்டு இருக்கிறேன்'' என்ற பெருமானார் (ஸல்) அவர்களின் திவ்விய மொழி, இதனையே வற்புறுத்திக் காட்டுகிறது.

நமது ஈழநாட்டிலும் இது சம்பந்தமானதொரு பொது இயக்கமேனும் தோன்றிச் செயற்படுமாயின் ''ஸக்காத்'' தின் உயரிய பயனை நம் சமூகம் அனுபவிக்கும் என்பதிற் கிஞ்சித்தும் சந்தேகமில்லை.

**20.09.73 தினகரன்**

# களுத்துறை மாவட்ட தமிழ் மொழி மூலக் கல்வி வளர்ச்சி - ஒரு நோக்கு

ஒரு கிராமத்தையோ ஒரு நாட்டையோ மேல் நிலைப்படுத்த அல்லது சகல துறையிலும் முன்னேற்ற மடையச் செய்யத் தூண்டுகோலாகவும் மூலகமாகவும் அமைவது அங்கே உள்ள கல்வி வளர்ச்சி நிலைய மாகும். இதே கருத்தை மையமாக வைத்துக் களுத்துறை மாவட்டத்தில் தமிழ் பேசும் முஸ்லிம் , தமிழ் மக்களின் தாய்மொழி. மூலக்கல்வி வளர்ச்சி யை உற்று நோக்கும் போது அவர்களின் ஏனைய துறை வளர்ச்சி பற்றியும் ஊகித்துக் கொள்ளலாம்.

களுத்துறைக் கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த தமிழ்க் கல்வி வட்டாரங்கள் இரண்டு உள்ளன. களுத் துறை, மத்துகம என்ற இவ்விரு வட்டாரங்களிலும் சுமார் 75 தமிழ் மொழி மூல அரசாங்கப் பாடசாலைகள் உள்ளன. இவற்றில் களுத்துறை வட்டாரத்தில் சுமார் 30 பாடசாலைகளும் மத்துகம வட்டாரத்தில் சுமார் 45 பாடசாலைகளும் நடந்து வருகின்றன.

ஏற்கனவே இங்கு களுத்துறை தமிழ் வட்டாரம் மட்டுமே இடம் பெற்றிருந்தாலும் மாண்புமிகு அமைச் சர் திரு. எஸ் தொண்டமான் அவர்களின் முயற்சியால் தோட்டப் பாடசாலை சுவீகாரம் பரந்த அளவில் மேற் கொள்ளப்பட்டதன் விளைவே இவ்வாறு இரண்டு தமிழ்க் கல்வி வட்டாரங்கள் தோன்றக் காரணமாயின. மத்துகம, அகலவத்தை, புலத்சிங்கள, ஹொரண ஆகிய தேர்தல் தொகுதிகளிலேயே இவ்வாறு தோட்டப் பாட சாலைகள் அதிகமாக சுவீகரிக்கப்பட்டன. இப்பாட சாலைகளைச் சேர்த்தே மத்துகம தமிழ் வட்டாரம் இயங்குகிறது.

இதுவரையில் மத்துகம தமிழ் வட்டாரத்தில் ஒரு மஹா வித்தியால யம்தானும் இல்லையே என்பது கவலையுடன் நோக்கற்பாலது. சுமார் 700 மாணவர்களைக் கொண்ட வெலிப்பன்னை முஸ்லிம் வித்தியாலயம் மகாவித்தியாலயம் ஒன்றிற்காகச் சிபார்சு செய்யப்பட்டுள்ளது. வியங்கல்ல முஸ்லிம் வித்தியாலயம் மாணவர் தொகை கூடிய அடுத்த பாடசாலை யாகும். மத்துகம புனித மரிய நாயகி கல்லூரி, மத்துகம சி.டபிள்யூ கன்னங் கரா மத்திய மகாவித்தியாலயம் ஆகிய சிங்கள வித்தியாலங்களில் தமிழ்ப் பிரிவுகள் இயங்குகின்றன. இங்கு க.பொ.த. (சா/த) வகுப்பு வரை வகுப்பு கள் நடக்கின்றன. இவ்விரண்டு தமிழ்ப்பிரிவுகளையும் ஒன்றிணைத்து மத்துகம தமிழ் மகாவித்தியாலயம் உருவாக்கப்பட வேண்டும். என்று தற்போதைய மத்துகம பாராளுமன்ற உறுப்பினர் முயன்று வருவது சுட்டிக் காட்டக்கூடிய ஒரு நிகழ்ச்சியாகும். இதனைத் துரிதப்படுத்தும் நோக்கில் செயல்பட்டு வரும் மத்துகம தமிழ் வட்டாரக்கல்வி அதிகாரி ஜனாப் ஏ.எஸ்.எம்.நவ்பர் பாராட்டப்பட வேண்டியவராவார். இவை தவிர குறிப்பிட்டுக்காட்டக்கூடிய வளர்ச்சியை நோக்கி நடைபயிலும் பாடசாலை குளோடன் தமிழ் வித்தியாலயமே. பலாந்தை முஸ்லிம் வித்தியாலயம் ஒன்றுடன் ஏனையவை பெரும்பாலும் 5ம் தரத்துடன் நிற்கும் தோட்டப் பாடசாலைகளே! மத்துகம தமிழ் வட்டார கல்வி வளர்ச்சி நிலை இந்த அளவில் இருந்து கொண்டிருக்கும் இதேவேளை, கூடிய கெதியில் கல்வித் துறை வளர்ச்சி இங்கு ஏற்படும் என்று நம்பக்கூடிய சூழ்நிலை ஒன்று உருவாகி வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இதற்கு மாறாக விரைவான முன்னேற்றப் பாதையில் சென்று தற்போது மந்தகதியில் இருக்கின்ற களுத்துறை தமிழ் வட்டாரப் பாடசாலைகளை நோக்குவோம். களுத்துறை மாவட்டத் தமிழ் மொழி மூல மகா வித்தியா லயங்கள் அனைத்தும் இங்குதான் உண்டு.எகொட உயனை, தொட்டவத்தை ஆகிய இடங்களில் தொடங்கி தர்கா நகர் ஸாஹிரா மகாவித்தியாலயம், அளுத்கமவீதி பெண்கள் மத்திய கல்லூரி வரை, வேர்விலை, களுத்துறை எலுவில, மக்கொன, அட்டுலுகம நகரங்கள் உள்ளிட்டதாகப் பல மகாவித்தி யாலயங்கள் உண்டு. எனினும் இவை எல்லாவற்றுள்ளும் இன்றைய நிலைக்கேற்ப முதன்மை ஸ்தானம் வேர்விலை சீனங்கோட்டை அல் ஹுமைஸரா மத்திய கல்லூரிக்குக் கொடுக்கலாம். ஏனைய பாடசாலை களைப் போல் வளர்ச்சியுற்றுத் தேக்கம் காணாதமை ஒரு காரணம். தற்போது எழுச்சியுடன் முன்னேற்றம் காணத் துடிப்பது மறு காரணம். தமிழ் மொழி மூல ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஒன்றும் சுமார் 12 மகாவித்தியாலயங் களும் களுத்துறை தமிழ் வட்டாரத்தில் இருப்பினும் தொழிற் பயிற்சிக்கூடம் உள்ளிட்ட அங்க சம்பூர்ணமான மகாவித்தியாலயம் ஒன்றுதானும் இல் லையே என்ற ஏக்கம் எம்மனத்தில் நிலை கொள்ளாமல் இல்லை. இந்த ஏக் கத்தைப் போக்கும் ஒரு ஸ்தானமாக சீனன்கோட்டை அல் - ஹுன்மைஸரா மகாவித்தியாலயம் பரிணமிக்குமா என்று கேட்டு வைக்கத் தோன்றுகிறது.

சமூக ரீதியாகவும் சமய ரீதியாகவும் அகில இலங்கைக்கும் அறிவொளி பரப்பிச் செயல்பட்டு வரும் தனிப்பட்ட ஸ்தாபனமாக இயங்கும் ஜாமிஆ நழீமிய்யா, கல்வி வளர்ச்சித் துறையில் முக்கிய பங்கு கொள்கிறது என்பதை யும் சுட்டித்தான் ஆகவேண்டும். இலங்கையைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாணம் மட்டக்களப்பு, கல்முனை, மாவனல்ல ஆகிய பிரதேசங் களில் சிறந்த கல்விச் சூழல் நிலவுகிறது. கொழும்பு மாநகரிலும் சிறந்த தமிழ் கல்விச் சூழல் ஒன்று இருந்து கடந்த வருட இனக்கலவரத்தின் விளைவாகத் தேக்கம் கண்டுள்ளதையும் காண்கிறோம். இவ்விதமான ஒரு கல்விச் சூழலைக்களுத்துறை மாவட்டத் தமிழ் வட்டாரங்கள் இரண்டிலும் உருவா கச் செய்ய வேண்டும். கிராமத்துக்கு ஒரு மஹா வித்தியாலயம் அமைத்து இதனைச் செய்ய முடியாது.

கல்வித் துறை வளர்ச்சியில் அக்கறை காட்டும் வேர்விலை முதல்வர் மாண்பு மிகு அமைச்சர் அல்ஹாஜ் பாக்கீர் மாக்கார் அவர்கள் இத்துறையில் மேலும் ஆர்வம் காட்டுவார் என எதிர்பார்க்கின்றோம்.

களுத்துறை மாவட்டத்தில் குறிப்பிட்ட சில பாடசாலைகளை இதற் கெனத் தெரிவு செய்து குறிப்பிட்ட தூரத்துக்கு ஒரு மத்திய பாடசாலையாகக் கொண்டு செயல்பட வைத்து இந்நிலைமையை உருவாக்கலாம். கொத்தணிப் பாடசாலை முறை செயல்படத் தொடங்கினால் ஒருவேளை இச்சூழல் உரு வாகக் கூடும். எது எப்படியாயினும் இப்பொழுது களுத்துறை மாவட்டக் கல்வி வளர்ச்சியில் அடுத்தபடியாகக் கல்விச் சூழல் உருவாக்கப்படுவதையும் ஆக்கபூர்வமான நானாவித பாடத்துறைகளிலும் தொழிற்பயிற்சி உட்படப் போதனை பெறக் கூடிய மகாவித்தியாலயமும் எதிர்பார்க்கப்படுகிறது.

களுத்துறை மாவட்டத் தமிழ் வட்டாரப் பிரிவுகளின் அமைப்புப் பற்றி ஓர் அபிப்பிராயம் கூறப்பட வேண்டியுள்ளது. மேலே விளக்கிக் காட்டப்பட்ட விதம் ஓரிரு முஸ்லிம் வித்தியாலயமும் அதிகமான தோட்டப் பாடசாலை களையும் கொண்டதாக மத்துகம தமிழ் வட்டாரம் பிரிக்கப்பட்டுள்ளமை பொருத்தமற்றது. ஏனெனில் களுத்துறை தமிழ் வட்டாரம் சில தோட்டப் பாடசாலைகளும் களுத்துறை மாவட்ட தமிழ் மொழிமூல எல்லா மகா வித்தியாலங்களையும் கொண்டதாக வகுக்கப்பட்டுள்ளது. வட்டார விளை யாட்டுப் போட்டி நடைபெறும் போதுகூட விறுவிறுப்பான நிலை காண முடியாத சூழ்நிலை மத்துகம தமிழ் வட்டாரத்தில் இருப்பது சுட்டிக் காட்டப்பட வேண்டும். எனவே பல்வேறு காரணிகளை முன்னிட்டு இவ்விரு வட்டாரப்பிரிவுகளும் புனரமைப்புச் செய்யப்பட்டு வகுக்கப்பட வேண்டும்.

களுத்துறை மாவட்டத்தில் தமிழர் சமூகத்துக்கென ஒரு தனித் தமிழ் மகாவித்தியாலயம் இல்லாமை மற்றுமொரு பெருங்குறைபாடாகும். பெருந்தொகையான தோட்டத்தமிழர் வாழும் பிரதேசமாகக் களுத்துறைப் பிரதேசம் இருப்பதுடன் இலங்கைத் தமிழர் குறிப்பிட்ட விகிதாசாரத்தினர் இருந்தும் இக்குறைபாடு நிலவுவது வருந்தக்கூடிய விடயமே! 10ம் வகுப்பு

வரை படிக்க வசதியுள்ள களுத்துறை சென்.ஜோன்ஸ் வித்தியாலயம், மத்துகம மரிய நாயகி கல்லூரி, மத்துகம ஸி டப்ளியூ. ஸீ. கன்னங்கரா மத்திய மகா வித்தியாலயம் ஆகியவற்றின் தமிழ்ப்பிரிவுகள் மாத்திரமே பின்னேரப் பாடசாலைகளாக வசதி குறைந்த நிலையில் இயங்குகின்றன. எனவே தமிழர் சமூகத்திற்கென ஒரு தனி மஹா வித்தியாலயம் அவசியமாகும்.

மத்துகம நகரில் இவ்வாறு ஒரு தமிழ் மஹா வித்தியாலயம் உருவாக் கப்படுவது உசிதமானது என்று மத்துகம எம்.பி.திரு அனில் முனசிங்க மேற்கொண்டுள்ள முயற்சிக்குத்[2] தமிழ் தலைவர்களின் ஆதரவு கிடைக்கு மாயின் கூடிய கெதியில் இது நிறைவேறலாம். மாண்புமிகு அமைச்சர்களான திரு.எஸ்.தொண்டமான், திரு எஸ்.இராசதுரை, திரு,கே.டபிள்யூ தேவ நாயகம் ஆகியோர் இவ்விடயத்தில் கவனஞ்செலுத்துவது சமூக ரீதியில் செய்யும் மாபெரும் தொண்டாக அமையலாம். களுத்துறை மாவட்டக் கல்வித்துறை முன்னேற்றத்துக்குப் பெரும் தடைக்கல்லாக உள்ளது ஆசிரியர் பற்றாக்குறை ஆகும். கணித, விஞ்ஞான ஆசிரியர்கள் முற்றாகச் சில பாட சாலைகளில் இல்லை. இதே போல் தொழில் பாடங்களுக்குப் போதிய ஆசிரி யர் இல்லை. தோட்டப் பாடசாலைகளில் ஆசிரியர் தட்டுப்பாடு மாத்திர மல்ல, கட்டிட, மலசலகூட வசதிகள் இல்லை. தோட்டப் பாடசாலைகள் சுவீகரிக்கப்பட்டாலும் அப்பாடசாலைகளுக்குக் காணிகள் வழங்கப்பட் டில்லை. சில பாடசாலைகளுக்கு நிரந்தரக் கட்டிடமுமில்லை. இதேபோல் தமிழ் மொழிமூல பாடசாலைகள் இடவசதி குறைவு, தளபாட உபகரணம் இல்லாமை என்பவற்றால் முட்டுக்கட்டைகளை எதிர்நோக்கி நிற்கின்றன.

இவ்வாறான பல்வேறு குறைபாடுகளின் மத்தியில் கல்வி வளர்ச்சியை உயர்த்த வேண்டும் என்ற நோக்கில் பல்வேறு பிரமுகர்களும் இயக்கங்களும் செயல்பட்டு வருகின்றன. பல்கலைக்கழகப் பிரவேசத்தில் களுத்துறை மாவட்டத்தைப் பொறுத்துக் கல்வியில் பின் தங்கிய பகுதியாகக் கணித்து மாணவர் சேர்க்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முதன்மையாகக் கொண்டு பல நோக்கங்களையும் முன்வைத்துக் களுத்துறை மாவட்ட பாடசாலைகளின் அபிவிருத்தி சங்கப் பிரதிநிதிகளைக் கொண்ட ஓர் அமைப்பை உருவாக்குவதில் கல்வி வல்லுநர் சிலர் முயற்சிகள் மேற் கொண்டு வருவதை இச்சந்தர்ப்பத்தில் வரவேற்க வேண்டி உள்ளது.

களுத்துறை கல்வித் திணைக்களம் தமிழ்ப்பிரிவுக்கென சகல வகையிலும் ஆற்றல் வாய்ந்த கல்வி அதிகாரி ஒருவரைப் பெற்றிருக்கிறது. தமிழ்ப் பிரிவு கல்வி அதிகாரியாக ஜனாப் எம்.எச்.எம் ஜவ்பர் அவர்கள் கடமை புரிகிறார்.

இவரின் ஆலோசனைகளைப் பெற்றுச் செயலாற்றக்கூடிய ஒரு ஸ்திர மான கல்விக் குழுக்கல்வி வல்லாரைக் கொண்டு அமைத்துத் திட்டம் வகுத்துச் செயலாற்ற முன் வருமாயின் களுத்துறை மாவட்ட தமிழ் முஸ்லிம் சமூகத்தின் கல்வி நிலை உயர்ச்சி வெகுதூரத்தில் இல்லை என்பதை அழுத் தம் திருத்தமாகக் கூறி வைக்கலாம்.

*(தினகரன் ஒக்டோபர் 25-1984)*

# பெருமானாரின் கருணை மாட்சி

## சீறாப் புராணத்தில் உமறுப் புலவர் காட்டும் ஒரு சம்பவம்

சீறாப் புராணம், தாத்துற் - றஹாக்குப் படலத்தில் ஒரு பகுதி. கத்துபான் கூட்டத்தினருடன் போர் தொடுக்கப் பெருமானார் தலைமையில் ஸஹாபாக்கள், வீரர்கள் அணிதிரண்டு சென்றனர். யுத்தமுனையில் எதிரிகள் புறமுதுகிட்டோடவே, பெருமானார் தம் படையுடன் திரும்பி வரும் வேளையில் இடையிலே இராத் தரித்தனர்.

இச்சந்தர்ப்பத்தில் கொடிய காபிர் ஒருவன் நபிகள் பெருமானார் அவர்களைக் கொன்றுவிடத் திட்டம் தீட்டிக்கொண்டு வருகிறான். பெருமானார் துயிலும் இடத்தே வந்து அவர்களின் பக்கத்திலே கிடக்கும் வாளை எடுத்து அந்த வாளினாலே பெருமானாரை வெட்டும் தீய நினைப்பைக் கருதுகிறான். அவ் வேளையில் பெருமானார் (ஸல்) அவர்கள் திடீரென விழித்துக் கொள்கிறார்கள். எனினும் தன்னந்தனியாய்த் துயில் நீங்கி நிற்கும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் கொன்று விடுவது மிக இலகுவான செயல் என்று நினைத்த அக்கொடிய காபிர் கையிலெடுத்த பெருமானாரின் வாளை உறையினின்று, உருவி இந்த வாளிலிருந்து உம்மைக் காப்பவன் யார்? என்று மமதையுடன் கேட்கிறான்.

இறைவனே என்னைக் காப்பவன் என்று நபிகள் பெருமானார் அளித்த பதில் அவனைத் திகிலுற வைத்தது மட்டமல்ல, அவன் கையிலிருந்த வாளையும் கீழே நழுவி விழச் செய்து விட்டது. உடனே நபிகள் கோமான்

அந்த வாளைத் தன்கையிலே எடுத்துக் கொள்கின்றார்கள். திருப்பி அதே கேள்வியை அவனது பான்மையிலேயே கேட்டு வைக்கிறார்கள்.

**விடுத்த மண்ணிடை வீழ்ந்தவை வாளினை**
**யெடுத்து வள்ள லினியுன தாருயிர்**
**படுத்து விண்ணுல கேற்றுவன் பாரினிற்**
**றடுத்து நிற்பவர் யாரெனச் சாற்றினார்.**

''இப்பொழுது இவ்வாளால் உம்மை விண்ணுலகனுப்புவேன் அதைத் தடுத்து நிறுத்தக் கூடியவர் யார் உலகில் இருக்கின்றார்'' என்று கேட்ட நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் தனக்கு உயிர்ப் பிச்சை கேட்டு மன்றாடத்தான் முடிந்ததேயொழிய, வேறு பதில் அக்காபிரால் கூற முடியவில்லை. பல வாறு காரணம் கூறித்தன்னை மன்னித்து விடுமாறு இரந்து நிற்கிறான அக்கொடிய காபிர்.

**பிறர்க்கடாத பெரும் பிழை நெஞ்சினிற்**
**குறிக்கு நீர்மையன் செய்தவிக் குற்றமே**
**மறைக்கணின்று வளரிறைக்காகநீர்**
**பொறுக்க வேண்டு மெனச்சரண் பூண்டனன்.**

அடுத்தவனுக்குத் தீங்கு செய்யும் கொடிய எண்ணத்துடன் வந்த கொடிய வனான நான் செய்த குற்றத்தை இறைவன் பேரால் மன்னிக்க வேண்டுமென மன்றாடுகிறான்.

இதனையே மேலுள்ள பாடல் கூறுகிறது.

அத்துடன் சுறாக்கத்தை முன்பொரு கால் மன்னித்த தயாள குணத் தையும் ஞாபகம் காட்டுகிறான். அக்காபிர். இதோ அப்பாடல்:

**படி பிடித்திடப் பாய்பரியேவிழு**
**னிடர் விளைத்த சுறாக்கத் தெனுமக்**
**கொடியன்றீமை பொறுத்தருள் கொற்றவ**
**அடியன் செய் பிழையும் பொறுத்தாட் கொள்வாய்**

தங்களைக் கொல்ல வந்த சுறாக்கத் எனும் கொடியவனின் தீமையை மன்னித்து அருள்புரிந்த தாங்கள் அடியேன் பிழையை மன்னிப்பீர்களா? என்கின்றான். சுறாக்கத் பெருமானாரை எங்கிருந்தாலும் தேடிச் சென்று வெட்டி வருவேன் என அபூஜஹிலுக்கு வாக்குப் பண்ணிக் குதிரை ஏறி வந்து பெருமானரை வெட்ட நெருங்கினவன் பெருமானாரின் ஏவலால் அவனது குதிரையின் கால்களைப் பூமி பற்றிக் கொண்டு அசைய விடாது தடுத்தது. பெருமானாரிடம் மன்னிப்புக் கேட்கவே அவர்கள் மன்னித்தருளினர். எனினும் மீண்டும் மீண்டும் வெட்ட வந்தான். அப்படி வந்தவனையும் நபிகள் கோமான் மன்னித்து விட்ட செய்தி அவன் அறிந்து வைத்திருந்த

தானாதலால் அதனை ஞாபகம் காட்டி இங்கே மன்னிப்பு இரக்கிறான் இக் கொடிய காபிர்.

இச்சந்தர்ப்பத்திலே துயின்று கொண்டிருந்த தோழர்களை அழைக் கிறார்கள் நபிகள் கோமான் (ஸல்) அவர்கள். நடந்த நிகழ்வுகளை எடுத் தோதுகிறார்கள். அப்போது இக்கொடிய பாதகனை மன்னிக்கவே முடியாது என்று கொதித்தெழுகிறார்கள் தோழர்களான முஸ்லிம் வீரர்கள். பல்வேறு காரணங்களையும் எடுத்துக் கூறுகிறார்கள்.

''பெருமானே! மதத்தை வெளிப்படுத்திக் கொண்டு வரும் யானையை யும் நஞ்சைத் தன்னகத்தே வைத்திருக்கும் பாம்பினையும் பெண்களுக்குத் துன்பமிழைத்த பகைவர்களையும் நல்லவர்கள் என்று தெளிய முடியுமா? என்று கேட்கின்றனர் தோழர்கள். தவிர அடைக்கலம் என்று தங்கள் காலில் விழுந்த கஃபு பின் முழுமையாகக் குற்றம் செய்ததையும் அதிக தீங்கு செய்த அபிறாபிஃ இகழ்ச்சிகள் செய்து கொண்டிருந் ததையும் இவ்வுலகில் மறந்து விட்டீர்களா? என்கின்றனர் ஸஹாபாக்கள். துணிவாகப் போர் செய்ய வந்த காபிர்கள் அகப்பட்டுக் கொண்டாற் பணிந்து சரணடைவார்கள். இவை பகைவர் செயல். அழகு, அன்பு, இரக்கம் , நீக்க முடியா இறையச்சம் நிலத்தில் வீழ்ந்து வணங்கும் தொழுகை இவை இல்லாதவர்கள் நஞ்சை ஒத்தவர்கள். (இந்தக் கொலை) பாதகன் இப்படிப்பட்டவன் ஆகவே இவனை எங்கும் விடாமல் இங்கேயே நமது பெரிய வாளால் வெட்டி விடுவதுதான் மகிழ்ச்சியான செயல்'' என்று உறுதியாக கூறி நிற்கின்றனர் ஸஹாபா வீரர்கள்.

இவ்வாறு தமது சகாக்கள் உறுதியுடன் நின்றபோதும் தம்மைக் கொல்ல வந்து வீறாப்புப் பேசி எதிர்த்தவனாயிருந்தும் நபி பெருமானார் என்ன பதில் கூறுகிறார்கள் தெரியுமா? பெருமானாரின் கருணை இங்கே தெளிவாகப் பேசப்படுகிறது. புலவர் உமறு இக்கூற்றை இவ்வாறு எடுத்தாள்கிறார்:

**கொலையில் வஞ்சமும் கொண்டு வெங்கோறலி**
**னிலையி னின்றவர் நின்ன பயமென**
**வலிதின் வந்து வணங்கினரேயெனி**
**னவிலிவாதவர்க் காக்கவு நன்றரோ**
**காட்டுதிண் மறனுங்கதிர் வாளையும்**
**போட்டு விட்டெதிர் நின்று புலம்பியே**
**தாட்டுணைத் தவஞ் சார்ந்தவிவ் வேழையை**
**வீட்டி னாலதில் வெற்றியுண் டாகுமோ?**

கொல்லத் துணிந்து வந்தவனாயிலும் 'உன்அபயம்' என வந்து வணங்கி நின்றால் அவனுக்குத் துன்பம் ஏற்படாது காப்பது நல்லதாகும். தனது வலிய வீரத்தையும் கையிலெடுத்த வாளையும் கீழே போட்டுப் புலம்பியபடி

காலில் வீழ்ந்து கிடக்கும் ஏழையைக் கொல்வதால் நமக்குப் பயன் உண்டாகுமோ? ஜாஹிலியாக்கள் காலத்தில் எதிரிகள் சிக்கினால் அவஸ்தைப் படுத்தி அதில் இன்பம் காணும் நிலை இருந்தது. இக்காலத்துக்கு இது தகுமா? என்றெல்லாம் கேட்டு ஸஹாபாக்களை ஆற்றிய பெருமானார் - வாள் பொறை மாட்சி அதிஉயர்ந்ததெனக் கூறித் திறமான வீரன் ஒருவன் நல்மனத்தனாகி உடல், உள்ளம் குறுகி நிற்கும் போது அவர் குறை தீர நன்மை செய்தால் அன்பு பெரிதாக வளரும் என்று தோழர்களான வீரர்களுக்கு மனதை ஆற்றி அமைதிப்படுத்தினார்கள்.

இறைவனின் வேத நெறி முறைக்குப் பணிந்து இத்தீயவன் செய்த குற்றத்தை மன்னித்து இவனை விட்டால் இவனது ''தீயமனம் தூய்மையாகி நன்மை சேர்ந்து விடும்'' -என்று கூறினார் பெருமானார் அவர்கள்.

**என்று நன்மொழியின்னன பன்னியே**
**யன்னவன் றுயராற்றிச் செலவிடுத்**
**துன்னு தோழருடனெழுந் தொல்லையின்**
**மன்னு கானக நீங்கி வழிக் கொண்டார்.**

பகைவனைப் போக விட்டுத் தம் பயணத்தைத் தொடர்ந்து மேற்கொண்டார். என்னே பெருமானாரின் கருணை மாட்சி!

***(கலைச்சுடர் - சுற்று - 06 -1985 செப்டம்பர்)***

# கல்விக்காக உழைத்த மர்ஹூம் எம்.எம்.எம் யூசுப்

இரண்டு ஆறுகள் இரு பக்கமாக ஓடிக் கொண்டிருக்க சுமார் 4 ஏக்கர் தாழ்ந்த நிலப்பரப்பில் ஒரு பாடசாலைக் கட்டிடம் அமைக்கப்பட்டிருந்தது. இங்கு அதிபராகக் கடமை ஏற்றுக் கொண்டார் ஜனாப் எம்.எம்.எம்.யூசுப் அவர்கள்.

வேர்விலையைப் பிறப்பிடமாகவும் வெலிப்பன்னையைப் புகுந்தகமாகவும் அமைத்துக் கொண்ட அன்னார் அதே புகுந்தகமான ஊரில் அதிபராக மேற்குறிப்பிட்ட விதமாகப் பதவி ஏற்றுக் கொண்ட பின் எவ்வளவு பெரிய இடர்ப்பாடுகளைத் தான் கடக்க வேண்டும் என்பதனை உணரத் தலைப்பட்டார். 1957ம் ஆண்டளவில் இளமைத்துடிப்புடனும் சேவை ஆர்வத்துடனும் காணப்பட்ட ஜனாப் யூசுப் அவர்கள் மலை போன்ற பிரச்சினைகளையும் பனித்துளி போற் கருதிச் செயற்பட்டவர். எனவே தன் முன்னால் இருந்த இடர்ப்பாடுகளைக் கண்டு அவர் மலைத்து விடவில்லை.

ஆம், தான் அதிபராகி வெலிப்பன்னை முஸ்லிம் வித்தியாலயத்தில் பதவியேற்றுக் கொண்டாலும் பாடசாலையை ஒழுங்காக நடாத்திக் கொள்ள முடியாத துர்ப்பாக்கிய நிலை அவரை முதன் முதலாக எதிர் கொண்டது. காரணம் பக்கத்தில் ஓடிய இரண்டு ஆறுகளும் அடிக்கடி வெள்ளத்தை ஏற்படுத்திப் பாடசாலையை மூழ்கடித்துக் கொண்டிருந்தன. அத்திவாரம் உயர்த்தப்பட்டுத் தளம் அமைக்கப்பட்டிருந்ததனால் சிறு வெள்ளப் பெருக்கில் பாடசாலைக் கட்டிடம் நீரில்

மூழ்காவிடினும் பாடசாலையைச் சுற்றி மாதத்துக்கு இரண்டு மூன்று முறையாதல் நீரில் மூழ்கும் நிலை இருந்தது. இதனால் மாணவர் ஒழுங்காகப் பாடசாலைக்கு வந்து கற்க முடியாமல் தவித்தனர். தவிர 8 ஆம் வகுப்பு வரை மாத்திரம் வகுப்புகள் நடந்தன. ஏற்கனவே இருந்த அதிபரும் எந்த முன் னேற்ற நடவடிக்கையும் மேற்கொள்ளாமையால் ஏனோதானோ என்ற போக்கில் பாடசாலை நடைபெற்றிருந்தது.

இவ்வாறான சூழ்நிலையில் பாடசாலை ஒழுங்காக நடந்து மாணவர் திறம்படப் போதனை பெற வேண்டுமானால் உடனடியாக வேறோர் இடத்துக்குப் பாடசாலை மாற வேண்டும் என்பதனை உணர்ந்து கொண்ட அதிபர் யூசுப் அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளின் பயனாக 1958 ம் வருடம் கலாநிதி டப்ளியூ தஹநாயக்கா அவர்கள் கல்வியமைச்சராக இருந்த கால கட்டத்தில் பிரதான பாதையருகில் காணி ஒதுக்கப்பட்டுப் பாடசாலைக் கட்டிடம் ஒன்று முதன் முதல் உருவாகியது.

1958இல் புதிய இடத்துக்குப் பாடசாலைக் கட்டிடத்தைக் கொண்டு வந்த ஜனாப் யூசுப் அவர்கள், 1961ம் வருடம் க.பொ.த. (சா/த) பரீட்சைக்கு மாணவர்களை முதன் முதலாக ஆயத்தப்படுத்தி ஐம்பது வீதம் வெற்றி கரமான பெறுபேற்றைக் கண்டு சிந்தை மகிழ்ந்தார்.

1966-1970கால கட்டம், வியங்கல்லை முஸ்லிம் வித்தியாலயம் இவரது சேவையைப் பெற்று உயர்வு கண்டது என்பதும் குறிப்பிட்டுக் காட்டப்பட வேண்டிய நிகழ்ச்சி. 1970 தொடக்கம் 1978ல் ஓய்வு பெறும் வரையும் வெலிப்பன்னை முஸ்லிம் வித்தியாலத்திலேயே சேவையாற்றினார். கல்வித் தரத்தைக் கீழே போக விடாது கட்டிக் காத்து உயர்ந்த பெறுபேற்றைக் க.பொ.த. (சா/த)தில் எப்போதும் பெற்றுக் கொண்டே வந்தார். அதேபோல் விளையாட்டு, சாரணீயம், தோட்ட வேலை போன்றவற்றை வித்தியா லயத்தில் ஏற்படுத்தி வெற்றி கண்டார். தான் ஓய்வு பெறும் காலத்தில் மகா வித்தியாலயத் தரத்துக்குப் பாடசாலையைத் தரம் உயர்த்தப் பாடுபட் டாரெனினும் கைகூட முன் ஓய்வு பெறும் நிர்ப்பந்த நிலை ஏற்பட்டது. சுருங்கக்கூறின் அரசியல் மாற்றம் அவருடைய செயற்பாட்டுக்குச் சாதகமாக இல்லாமையால் இம்முயற்சி கைகூடவில்லை.

அவர் உயிர் நீக்க ஒரு வாரத்துக்கு முன் இது பற்றி என்னுடன் கதைத்துப் பாடசாலை சம்பந்தமாகத் தாம் வெளியில் இருந்து எடுக்கும் முயற்சி எந்த அளவு கைகூடிக் கொண்டிருக்கிறது. மஹாவித்தியாலயம் என்ற தரம் ஏற்பட்டு க.பொ.த (உ/த) வகுப்பு வைப்பதற்கு வழிவகை யாது? என ஆராய்ந்தார் என்பதையும் எடுத்துக் கூற வேண்டும். 1986இல் பாடசாலை தரம் உயர்வதை உறுதியாய் நிச்சயப்படுத்திக்கொண்டிருந்தார். 1957முதல் இறக்கும் தறுவாய் வரையும் தான் குடிபதியாய் உள்ள ஊரில் கல்வி

முன்னேற்றம் ஏற்பட்டு மக்கள் விழிப்புணர்ச்சி பெற வேண்டும் என்ற அவாவுடனேயே அவர் திகழ்ந்தார்.

தன் பிள்ளைகளின் முன்னேற்றத்திலும் பார்க்க ஊர் முன்னேற்றத்தைப் பெரிதெனக் கண்டு கல்வித் துறை, சமூகப் பொதுத் தொண்டு என்பவற்றில் அதிக காலத்தைக் கடத்தியவர் ஜனாப் எம். எம்.எம்.யூசுப் அவர்கள் என்பதை நாம் அங்கீகரித்துத்தான் ஆக வேண்டும்.

வெலிப்பன்னை முஸ்லிம் வித்தியாலயம் இவரது கல்விச் சேவைக்குச் சான்றாய் அமைவது போல் வெலிப்பன்னை இஸ்லாமிய பொது நலசேவா சங்கம் ஒன்றே இவருடைய பொதுத் தொண்டுக்குச் சான்றாக அமைகிறது. இச்சங்கத்தை ஆரம்பித்து கடந்த 10 வருடமாகப் பெரும் வெற்றி கண்டார். இலவச கத்னா வசதிகள் தொட்டு ஏழை அனாதை மையித்துக்களுக்குச் செலவு செய்வது வரை இச்சங்கத்தால் வசதிகள் செய்து கொடுக்கப்படுகிறது. மையித்து வசதிகளுக்குக் கடன் பெறும் நடைமுறையும் இச்சங்கத்தில் உண்டு. இன்னும் சிரமதானம், புலமைப்பரிசில் வழங்கல் ஆகிய சேவைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. மர்ஹூம் யூசுப் அவர்களின் தூரதரிசனத் திட்டத்தில் உருவான இ.பொ.ந.சே. சங்கம் தனது ஆயுட் காலத் தலைவராக அவரை வைத்திருந்தது என்பது குறிப்பிட்டுக் காட்டப்பட வேண்டிய மற்றொரு நிகழ்ச்சியாகும்.

கடைசி சந்தர்ப்பம் வரையும் வெலிப்பன்னை ஹொலிங்போன் தோட்டம் அரசாங்கத்தால் பங்கிடப்போவது முஸ்லிம்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று அயராது பாடுபட்டார். இந்த நடவடிக்கைகளில் தேவையான ஆலோசனைகளைத் தந்து இ.பொ.ந.சேவா சங்கத்தின் நடவடிக்கைகளுக்கு ஆணிவேராகத் திகழ்ந்தார். இதன் பலாபலன்களைக் காணாத ஏக்கத்துடனேயே அவர் மறைந்து விட்டார்.

**(தினகரன் 2-10-85)**

# வேர்விலை புஹாரிக் கந்தூரி வைபவம்

'பர்பலி' என்ற அரபுப் பதமே இன்று வேர் விலை எனத் திரிபுற்றது என்பது வரலாற்று ரீதியான உண்மை. இது அரபுச் சொல் என்பதிலிருந்து அராபியர். இப்பெயரை வைத்தனர் என்பதும் வெள்ளிடைமலை ஆம், ஈழவள நாட்டிலே முதன் முதலில் அரேபியர் கால் வைத்த இடங்களில் மிக முக்கியத்துவம் பெறும் இடமே வேர்விலை. அரேபிய நாட்டு முஸ்லிம்களும், தென்னிந்திய முஸ்லிம்களும் மரக்கலமேறி இங்கு வந்து தரித்ததனால் இவ்விடம் முஸ்லிம்கள் மத்தியில் மிகப் பிரபல்யம் பெற்றிருப்பதும் உண்மை.

இத்தகைய பழம்பெரும் பதியில் முஸ்லிம் மக்களை ஒன்று கூட்டி ஒரு பாங்கில் வழி நடாத்தும் சிரமமான பணியொன்றைச் செவ்வையாக நிலை நாட்டி வரும் ஒரு புனித தலமும் இங்குள்ளது என்றால் அது புகழ்ச்சியன்று. இவ்வாறான மேம்பாடான உணர்வுக்குரிய இடம்தான் வேர்விலை பைத்துல் முபாரக் புஹாரித் தக்கியாவாகும். இத் தலம் சார்ந்த வரலாற்றை அங்கு நடைபெறும் புஹாரி கந்தூரி வைபவத்துடன் உற்று நோக்குதல் இச்சந்தர்ப்பத்தில் சாலப் பொருந்தும்.

முன்கூறிய விதமாக யெமன் தேசத்திலிருந்து அஷ்ஷெய்கு முபாரக் மௌலானா அவர்கள் வருகை தந்து வேர்விலை மாளிகா சேனை எனுமிடத்தில் தங்கி இஸ்லாமிய சன்மார்க்கம் தழைத்தோங்கச் செய்யும் அரும்பணிகளை மேற்கொண்டார்கள். புஹாரித்

தக்கியா அமையப் பெற்றிருக்கும் இக்காணியைப் பெற்று தியான மடம் எனும் திருத்தலமான தக்கியாவை அமைத்தனர். இங்குப் புனித ஹதீஸ் கிரந்தமான புஹாரி கிரந்தத்தை வாசிக்கும் பெரும் பணி ஹிஜ்ரி 1301ல் முதன் முதல் ஆரம்பிக்கப்பட்டது.

தற்போது நடைபெறும் கந்தூரி வைபவம் 116ம் வருடம் நடைபெறும் புஹாரி மஜ்லிஸ் வைபவம் என்பது குறிப்பிடத்தக்கது. திருக்குர்ஆன் இறைவனுடைய 'கலாம்' எனும் மொழிதலைக் கொண்டது. பெருமானார் (ஸல்) அவர்களுக்கு வஹி மூலம் அருளப்பட்டு மக்களுக்கு எடுத்துக் கூறப்பட்ட செய்திகள் அல்குர்ஆனில் வாழ்க்கை வழிகாட்டல்களாக அமைகின்றன. முஸ்லிம்களால் இத்தகைய திருக்குர்ஆனுக்கு அடுத்துப் போற்றப்படும் மிக உன்னதமான ஒரு கிரந்தமே புஹாரி கிரந்தம். முஹம்மது நபி (ஸல்) அவர்களை இறைத் தூதராக தேர்ந்தெடுத்த அல்லாஹ் முன்மாதிரி வாழ்க்கையை முஸ்லிம்களுக்கு அன்னார் மூலம் அமைத்துக் கொடுத்தான். அத்தகைய வாழ்ந்து காட்டிய - மொழிந்து காட்டிய வாழ்க்கை முன் மாதிரிகள் இந்தப் புனித கிரந்தமான 'புஹாரி' எனும் கிரந்தத்தில் தொகுக்கப்பட்டுள்ளன.

'புஹாரா' நகரத்தில் உதித்த புஹாரி இமாம் அவர்கள் மிகவும் அர்ப்பணிப்புடன் உண்மைச் செய்திகள் என்ற முறையில் நபி பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கைச் சம்பவங்களை ஒன்று திரட்டியுள்ளனர். இத்தகைய கிரந்தம் பூரணமாக வாசித்து தமிழ் விளக்கம் வழங்கும் ஒரு புண்ணிய வைபவமே வேர்விலை மாளிகாச் சேனை பைத்துல் முபாரக் முஸ்தபவிய்யா தக்கியாவில் நடைபெறும் புஹாரி மஜ்லிஸ் வைபவமாகும்.

ஏனைய சமயாசாரச் செயற்பாடுகள் இங்கு நுழைக்கப்படவில்லை. கூடு, தோரணம் இல்லை. பணம் , ரசீட் - எந்த விளையாட்டும் கிடையாது. வியாபாரம் என்ற போர்வையல் நடைபெறும் விந்தைகள் இங்கு இல்லை. எனினும் இலங்கையில் ஆகப் பெரிய கந்தூரி வைபவம் இதுவென்னும் போது அதனை யாராலும் மறுத்துரைக்க முடியாது.

இவ்வாறான ஓர் அமைப்பில் இதனை முதன் முதலில் நடத்திக் காட்டி வைத்தவர்கள் அஷ்ஷெய்கு முஸ்தபா இப்னு பாவா ஆதம் (ரஹ்) அவர்களாவர். இவர்கள் ஷெய்கு முபாரக் மௌலானா அவர்களின் சீடராக இயங்கி அவர்களின் தரீக்காவான காதிரிய்யதுந் நபவிய்யாவை இங்கு நிலை நாட்டியவர்கள். அன்னார் செயல் நெறி முறைகளை ஒழுங்குற வகுத்துச் சென்றுள்ளதால் இன்னும் இத்தரீக்கா நடைமுறைகள் உறுதியாகப் பின்பற்றப்படுகின்றன.

ஷெய்கு முஸ்தபா இப்னு பாவா ஆதம் (றஹ்) அவர்கள் குழந்தை மரைக்கார் என்ற புனைப்பெயராலும் அழைக்கப்பட்டவர்கள். இவர்கள்

அரபுத் தமிழில் பாடல்களை யாத்துள்ளனர். இதன் மூலம் மட்டுமல்ல அரபியிலும் கிரந்தங்கள் எழுதியுள்ளார்கள். அத்துடன் புனித குர்ஆனுக்கு இலங்கையில் தமிழ் மூலம் உரைநடை எழுதியவர்கள் இவர்கள் மாத்திரமே உளர். இத்தகைய எழுத்துத்துறை வல்லமையும் மார்க்க ஞானமும் உள்ள ஷெய்கு முஸ்தபா நாயகம் அவர்கள். வேர்விலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள். இவர்கள் இமாமுஸ் ஸைலான் என அக்காலத்தில் சவூதி மக்கமா நகரில் நாமஞ் சூட்டி அழைக்கப்பட்டவர்கள்.

கேளிக்கைகளுக்கு இடமேயில்லாது நடைபெறும் ''புஹாரி'' மஜ்லிஸ் கந்தூரி வைபவம் இம்முறை 1995 டிசம்பர் 24ம் திகதி நடைபெறுகிறது. இலங்கை அரசாங்க ரயில்வே, தபால், பொலிஸ் திணைக்களங்கள் மிகப் பெரும் ஒத்துழைப்பு இதற்கு வழங்கி நிற்கின்றன. வருடாந்தம் மக்கள் கூட்டம் இவ்வைபவத்தில் அதிகரித்த வண்ணமுள்ளதால் தக்கியா புனர் நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது. முஸ்லிம்களது பண்பாட்டு பாரம்பரியத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாக இக்கந்தூரி வைபவம் திகழ்கிறது.

***(தினகரன் 22 டிசம்பர் 1995)***

# சுகவாழ்வுக்குச் சில போதனைகள்

புனித இஸ்லாம் மார்க்கம் என்பது ஒரு பரிபூரண வாழ்க்கைத் திட்டமாகும். இவ்வுலகில் மனிதனாகப் பிறந்தவன் இங்கு வாழ்ந்து மறுமையிலும் நல்வாழ்வை நிரந்தரமாக அனுபவிக்க இஸ்லாம் வழிகாட்டுகிறது. இஸ்லாம் மார்க்கம் ஒரு சிலருக்கோ ஒரு சாராருக்கோ இறைவனால் அருளப்பட்டதல்ல. உலகில் தோன்றிய அனைத்து மக்களுக்கும் அது வழிகாட்டுகின்றது.

இத்தகைய இஸ்லாம் மார்க்கம் மனிதனவன் இறைவனை நம்பி வணங்கி வழிபடுவதற்காக நீண்ட ஆயுளையும் சுக வாழ்வையும் பெறுவதற்காக இறைவனிடம் பிராத்திக்குமாறு வலியுறுத்துகின்றது. எனவே மனிதன் உண்பதும் சுகத்துடன் வாழ முயற்சிப்பதும் இறைவனை வணங்குவதற்கேயொழிய வேறில்லை. வாழ்க்கைத் திட்டம் என ஏற்கனவே குறிப்பிட்ட இஸ்லாத்தில் சுகவாழ்வுக்கான போதனைகள் நிறைய உள்ளன என்பதை நாம் கண்டு கொள்ளலாம்.

இத்தகைய போதனைகளைப் பின்பற்றியே இஸ்லாமியப் பெரியார்கள் வாழ்ந்து மறைந்திருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையில் சுகவாழ்வுக்காக இஸ்லாம் போதிப்பதனை அவர்களின் சீரிய நடைமுறையில் கண்டு கொள்ளலாம். பெருமானார் (ஸல்) அவர்கள் தொட்டு ஸஹாபாக்கள் தாபிஈன்கள், தபஉத் தாபிஈன்கள், ஹதீஸ் கிரந்தங்கள் தந்த இமாம்கள். இமாம் கஸ்ஸாலி (றஹ்) போன்ற அறிஞர்கள் இன்னோரன்ன

பெரியார்களின் வாழ்வு சுக வாழ்வுக்கு இஸ்லாம் சொன்னவற்றை அடிப் படையாகக் கொண்டு வாழ்ந்ததற்கு ஆதார்சமமாகத் திகழ்கிறது.

எவ்வாறு சாப்பிட வேண்டும் எவற்றைச் சாப்பிட வேண்டும், எவ்வாறு எக்காலத்தில் தூங்குவது எவ்வாறு உடலைச் சுத்தம் செய்வது உளச்சுத்தம் ஏன் அவசியம் ஆடைகள் உடைகளை நாம் எவ்வாறு, சுத்தப்படுத்துவது, என்பன போன்ற வினாக்களை நாம் ஆராயும் போது இஸ்லாத்தின் அடிப் படையில் சுக வாழ்வுப் போதனைகளைத் தெரிந்து கொள்ளுதல் சாலும்.

**நாம் பசிக்காமல் புசிக்காத கூட்டம். புசித்தாலும் வயிறு நிறையப் புசிக்க மாட்டோம்.** இத்தகைய நபி மொழி வலியுறுத்துவது தற்கால விஞ்ஞான சுகாதார நெறி முறையே என்பதை நாம் காண்கின்றோம். சாப்பிட்டு இடைவெளி இருக்கத்தக்கதாக முடிக்க வேண்டும், மீதியை நீரைக் குடித்து நிரப்ப வேண்டும், எனும் சுகாதார விதியை இது காட்டு கின்றதல்லவா?

**''நம்பிக்கை கொண்டாரே! மதுபானமும் சூதாட்டமும் கற்சிலை களை வழிபடுதலும் அம்பெறிந்து குறி கேட்டலும் ஷைத்தானின் அரு வருக்கத்தக்க செயல்களில் உள்ளவையாகும். ஆகவே நீங்கள் இவற்றைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். அதனால் நீங்கள் வெற்றி பெறுவீர்கள்.''**

இந்தக் குர்ஆன் வாக்கியம் மதுபானத்தைத் தடை செய்வதைச் சுட்டிக் காட்டுகிறது. இதேபோல் போதை தரும் யாவும் இஸ்லாத்தில் தடுக்கப்பட வேண்டியவை என இமாம்கள் ஏகோபித்து வற்புறுத்துகிறார்கள். இத்தகைய போதைப் பொருட்கள் சுக வாழ்வுக்குக் கேடு தருவன என்று சுகாதார விதிகள் கூறுபவற்றை என்றோ இஸ்லாம் மக்களுக்குப் போதித்திருப்பதை இது காட்டுகின்றதல்லவா?

**''எனது உம்மத்தினருக்குக் கஷ்டமான செயலாக இல்லாதிருந்தால் சகல தொழுகையின் ஆரம்பத்திலும் பல்துலக்கும்படி கட்டளை பிறப் பித்திருப்பேன்.''**

பல்துலக்குதல் சுகாதார வழிமுறை. இதனை இஸ்லாம் வற்புறுத்து வதை நபிமொழி பகர்ந்து கொண்டிருக்கிறது.

**''உங்கள் ஆத்மாக்களை நீங்கள் கொலை செய்ய வேண்டாம்''** எனத் திருக்குர்ஆன் அறைகூவுவது தடைபண்ணப்பட்ட மது, கஞ்சா, அபின் ஹசீஸ் இன்னோரன்ன போதைப் பொருட்களால் மனிதன் ஆழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறான் என்பதினாலேயாகும். **''உங்கள் கரங்களை அழிவின் பால் நீட்ட வேண்டாம்''** என்ற அல்குர்ஆன் போதனையும் இத்தகைய அழிவுப் பொருட்களை நாட வேண்டாம் என்ற அறிவுரையேயாகும்.

''ஓடாமல் தேங்கி நிற்கும் நீரில் உங்களில் எவரும் சிறுநீர் கழித்து விட்டு அதில் குளிக்க வேண்டாம்''

''நீங்கள் குளிப்புக் கடமை உள்ளவராக இருந்தால் குளித்து உடல் முழுவதையும் சுத்தம் செய்து கொள்ளுங்கள்''

இவை சுகம்பேணும் அறிவுரைகளாக இஸ்லாம் தந்த வழி காட்ட லாகும்.

தேன் ,சுகவாழ்வுக்கு இன்று முக்கியமாய்ப் பாவிக்கப்படும் ஒரு மருந்துப் பொருளாகும். அல்குர்ஆன் **''அதில் (தேன்) மனிதனுக்கு நிவாரணம் உண்டு''** என்று போதனை செய்து கொண்டிருக்கிறது. தேனில் காபோவைதரேற்று, புரதம், விட்டமின்கள் என்னும் உடலுக்குத் தேவையான முக்கிய சத்துக்கள் உண்டு என வைத்திய உலகம் சொல்கிறது. இதனை இஸ்லாம் எப்போதோ குர்ஆன் மூலம் வற்புறுத்திவிட்டது.

இத்தகைய பல்வேறு ஹதீஸ்கள் மூலமும் அல்ஆர்ஆன் வாக்கியங்கள் மூலமும் சுகவாழ்வை இஸ்லாம் போதிக்கின்ற அதேவேளை நோய்களி லிருந்து மீட்சி பெற வைத்திய முறைகளையும் போதித்துள்ளது.

''அல்லாஹ் நோயையும் மருந்தையும் நிச்சயமாக இறக்கி ஒவ்வொரு நோய்க்கு ஒரு மருந்தை உண்டு பண்ணியுள்ளான். எனவே நீங்கள் மருத் துவம் செய்யுங்கள் .ஆனால் விலக்கப்பட்ட ஹராமானவற்றைக் கொண்டு மருத்துவம் செய்யாதீர்கள் ''(அபூதாவூது)

உஸாமா (றலி) தெரிவிப்பதாவது ''நான் ஒரு சமயம் நபி பெருமானார் (ஸல்) அவர்களின் சமுகம் சென்ற போது, ஸஹாபிகள் சிலர் கூடியிருந்து 'பெருமானே! நாங்கள் பிணியுற்று விட்டால் மருந்துகளைக் கொண்டு சிகிச்சை செய்து கொள்ளலாமா? அதனால் பாதகமில்லையா?, என்று வினவினர். பெருமானார் (ஸல்) அவர்களும், 'அல்லாஹ்வின் அடியார்களே! நீங்கள் மருந்துகளைக் கொண்டு பரிகாரம் தேடிக் கொள்ளுங்கள் மரணத் தைத் தவிர மற்றெல்லா நோய்களுக்கும் அல்லாஹ் மருந்தையும் படைத்துள் ளான். ஆனால் மனிதர்கள் அந்த மருந்துகளை அறியாமல் இருப்பதுமுண்டு' என்று கூறினார்கள். ஒரு ஸஹாபி, 'மருந்துகள் அல்லாஹ¬வின் விதியை மாற்றுமா?' எனக் கேட்கவே, 'இவையும் அல்லாஹ¬வின் விதியில் சேர்ந்தவை' தாம் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள்.

சில சமயங்களில் சிறு சிறு பிணிகள் நம்மைப் பீடிப்பதுண்டு. அப்போ தெல்லாம் அவை நம்மை அதிகம் கஷ்டப்படுத்துகின்றன என்று சலித்துக் கொள்வதுண்டு. இவ்விதம் சிலருக்கு அடிக்கடி தும்மலும் ஜலதோசமும் வருவதுண்டு. சிலருக்கு இருமல் வருவதுண்டு. உண்மையில் இவை பெரிய வியாதிகள் வராமல் தடுக்கும் முன்னோடிகளான சிறிய வியாதிகள் தாம்

என்பதை இன்றைய வைத்திய ஆராய்ச்சிகள் பறைசாற்றுகின்றன. அன்று நபி பெருமானார் (ஸல்) அவர்கள் அருளியுள்ளதைப் பாருங்கள்: ''கண்வலி, ஜல தோஷம் ,இருமல், சொறி, சிரங்கு ஆகிய நான்கையும் கெட்டவை என்று நினைக்கவேண்டாம். ஏனெனில் கண்வலி வந்து நீங்குவதால் கண்பார்வை மங்குதல் ஏற்படாமலும், ஜலதோஷம், குஷ்டம் உண்டாகாமலும் இருமல் பாரிசவாதம் பீடிக்காமலும் கட்டி முதலிய வியாதிகள் வராமலும் தடுக்கின்றன. இந்த ஹதீஸ்ஜாமிஃ கபீரில் தரப்பட்டுள்ளது. எனவே இந்தச் சிறிய நோய்களால் பெரிய வியாதிகள் பீடியாமல் தடுக்கும் எதிர்ப்புச் சக்தியை நமது உடல் அடைவதை நாம் உணர வேண்டும்.

இஸ்லாமிய நடைமுறைகள் கூட சுகவாழ்வுக்கு உறுதுணை புரிகின்றன. 'கத்னா' செய்தல் இன்று வைத்திய உலகம் விதந்து பாராட்டும் ஒரு செயலாக உள்ளது. முஸ்லிமல்லாதவர்களும் இன்று டாக்டர்களை அணுகிக் 'கத்னா' செய்கின்ற நிலைமை சுகவாழ்வுக்கு அவசியம் என்பதனாலேயாகும்.

திருமணம் முடிப்பது ஒரு சிகிச்சை என இஸ்லாம் வற்புறுத்துகிறது. திருமணம் முடிக்காது இருப்பது சில உடற் கோளாறுகளையும் கெட்ட நடத் தைகளையும் ஏற்படுத்துகின்றது என்று உலகம் இன்று ஏற்றுக் கொண்டுள் ளது. எனவேதான் திருமணம் செய்து வாழும் எனது சுன்னத்தைப் பின்பற்றி நடவுங்கள் எனப் பெருமானார் (ஸல்) அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

தொழுகை போன்ற இஸ்லாமிய வணக்க வழிபாடுகளை உற்சாகத்து டன் செய்யுமாறு இஸ்லாம் வற்புறுத்துகின்றது. தொழுகைக்கு முன் உடல், ஆடை, இடம் என்பன சுத்தமாயிருக்க வேண்டும் என்ற நிபந்தனையை இஸ்லாம் விதித்துள்ளது. தினந்தோறும் ஐந்து முறை இவ்விதம் கட்டாயம் தொழுதாக வேண்டும். இப்படிச் செய்யும்போது உடற்பயிற்சியாக இச் செயற்பாடு மறைமுகமாக அமைவதை நாம் காண்கிறோம். நோன்புகூட சுக வாழ்வுக்கு அத்தியாவசியம் என வைத்திய உலகம் இன்று ஏற்றுக் கொள் கிறது. எந்நேரமும் செயல்படும் உள்ளுறுப்புக்கள் ஓய்வு கொள்ள இது அவகாசம் தருகின்றது. முக்கியமாக இரத்த அழுத்தம், இருதய அடைப்பு போன்ற நோய்கள் நோன்பாளிகளிடம் குறைவாக இருப்பது கண்டறியப் பட்டுள்ளது.

எனவே இத்தகைய இஸ்லாமிய விளக்கங்கள் கூட சுகவாழ்வுக்கு வழிகோலுவன என்பதை அறிந்து கொள்ளலாம். அழுத்தமாகக் கூறினால் இஸ்லாமியனாக வாழும் போது சுகவாழ்வு அவனது செயற்பாட்டிலே துலங்குகிறது.

***( மீலாதுந்- நபி- நினைவு மலர் 1422- 2001 நபவிய்யா இஸ்லாமிய இளைஞர் இயக்கம் - வேர்விலை)***

# தமிழகத்தில் ஏழு நாட்கள்...

(தொடர் கட்டுரையில் ஒரு பகுதி)

தங்கியிருந்த அறை முன்னிலே பாதை மறு பக்கம் பஸ் நிலையத்தில் உடனடியாக பஸ் கிடைத்தது. திருச்சிக்கு பஸ் எடுத்தேன். திருச்சியை அடையும் போது காலை 8.00 மணி. அங்கே பஸ் பிடித்து முசிறி வந்தடைந்தேன். முசிறியில் குறிப்பிட்ட இடத்தை (வெலிப்பன்னை மனோகரன் ஸிஸ்டர் லதா வீடு) வந்தடைய 10.00 மணி ஆகிவிட்டது. குறிப்பிட்ட இடத்தில் என்னை எதிர்பார்த்து இருந்துள்ளார்கள். எனினும் டெலிபோன் எடுத்து விட்டு வருவேன் என் றும் பஸ் ஹோல்ட்டில் என்னை வரவேற்கவும் எதிர் பார்ப்புடன் இருந்துள்ளார்கள். நான் அங்கே போய் அடைந்ததும் அதிர்ச்சிக்குள்ளாகி விட்டார்கள். அதி காலையில் நாக பட்டினத்தில் இருந்து பஸ் எடுத்ததால் போன் பண்ண வாய்ப்பேற்படவில்லை என கூறிச் சமாளித்தேன்.

உண்மையில் அங்கே குறிப்பிட்ட வீட்டை அடைந் ததும் நான் எனது வீட்டில் இருக்கின்ற ஓர் உணர்வு ஏற்பட்டது. போனவுடன் குளித்து ''றெஸ்ட்'' எடுக்கக் கிடைத்தது. பகல் சாப்பாடு சாப்பிட்டு விட்டு மீண்டும் அவர்களுடைய கடைக்குத் திரும்பினேன். தமிழ் நாட் டில் (இந்தியாவில்) 5ம் நாள் வீட்டுச் சாப்பாடு சாப் பிட்டது அன்றுதான். அது ஒரு மனநிறைவைத் தந்தது.

இன்னொரு ஆச்சரியம் நிகழ்ந்தது. நான் எதிர் பாராத சிலரை அங்கு சந்தித்தேன். மாத்தளை ஜனாப் ஹிதாயத்துள்ளா என்பவர் சந்தித்துப் பேசினார். 1944ல்

இலங்கையிலிருந்து சென்றவர். தவிர, மத்துகம - அஸீஸ் காங்கிரஸ் காரியாலயப் பொறுப்பாளர் திரு தயாளனுடைய மனைவியின் சகோதரியும் அங்குதான் இருக்கிறார். மனோகரன் சிஸ்டர் லதாஉடைய புருஷனின் அண்ணனைத் திருமணம் முடித்து உள்ளார். அவரும் ஜுவலரி கடை பங்கில் இன்னொருவருடன் சேர்ந்து நடாத்தி வருகிறார். நான் சந்திக்கச் சென்ற லதா உடைய புருஷன் ''பென்சி மஹால்'' நடாத்துகின்றார். இவர்களுடன் கதைத்துப் பேசி விடைபெறும் போது பி.ப.4.00 மணி அங்கிருந்து பஸ் எடுத்துச் சேலம் வரும் போது மாலை 6.30 ஆகிவிட்டது. பஸ்ஸில் வரும் போது முசிறி - சேலம் இடைப்பட்ட பகுதி சிறந்த விவசாயப் பகுதி என்பதைக் கண்டேன்.

முக்கியமாக வாழைத் தோட்டங்கள் பாதை மருங்கில் விசாலமாகத் தென்பட்டன. சில இடங்களில் புதிதாக வாழைக்குட்டிகள் முழுதாக நடப்பட்டிருந்தன. இன்னும் சில காணிகள் வாழை நட முற்றாகத் துப்பரவு செய்யப்பட்டிருந்தன.

வெற்றிலைச் செய்கை இடையிடையே தென்பட்டது. வெற்றிலைக் கொடி படரவென வெறொரு செடி நடப்பட்டிருந்தது. நமது நாட்டில் போல பரண் அமைக்கப்பட்டில்லை. மரவள்ளி, சோளம், கரும்பு போன்ற பயிர்களும் தென்பட்டன.

பயிர்ச்செய்கை பற்றிக் கூறும் போது நாகை பிரதேசங்களில் (நாகபட்டினம்) கடும் வரட்சியால் வயல்கள் காய்ந்து தீய்ந்து போயிருந்த நிலையைக் கண்டேன். விவசாயிகளுக்குப் பெருத்த நட்டமேற்பட்டிருக்கலாம். தினசரி பத்திரிகைகளில் வயற்செய்கை நாசமாகியமை, கொட்டை எழுத்துக்களில் பிரசுரிக்கப்பட்டிருந்தன. அமைச்சர்கள் பார்வையிட்டமை, அமைச்சர் வழி மறிக்கப்பட்டு முறைப்பாடு போன்ற செய்திகள் தினந்தந்தி, தினமணி, முரசொலி போன்ற பத்திரிகைகளில் வாசிக்கக்கிடைத்தது.

நாகை - திருச்சி - சேலம் வீதியில் நீண்ட பாலங்கள் தென்பட்டன. இலங்கையில் இந்தளவு நீண்ட பாலங்களை நான் இதுவரை கண்டதில்லை. மட்டக்களப்பு - காத்தான்குடி பாதையிலுள்ள பாலம் நீண்டதெனக் கண்டுள்ளேன். அதிலும் மிக நீண்ட பாலங்கள் இங்கே அமைந்துள்ளன. சேலம் ரயில்வே நிலையத்தின் பாரிய அமைப்பு மிக விசேடமானது. இலங்கையில் அனுராதபுரம் ரயில் நிலையத்தில் உள்ளிறங்கி ப்ளட்போம் மாறுவது போல் மிக விசேடமாக இங்கே விசாலமாக அமைந்திருந்தமை குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியதொன்று. சேலம் புதிய பஸ் நிலையத்தில் உடனடியாக முருகன் லொட்ஜில் அறை ஒன்றை 'புக்' பண்ணினேன். பிற்பாடு கருங்கல் பட்டியில் தெரிந்த ஒருவரைச் (திரு.எம்.லட்சுமணன்) சந்திக்கச் சென்றேன். இரவு 7.30 மணியளவில் அவரைச் சந்திக்கக் கிடைத்தது. இலங்கையில்

இங்கே பக்கத்து ஊரில் மத்துகம - மத்தெகொ தோட்டத்தைச் சேர்ந்தவர். 1983ல் இலங்கையிலிருந்து வந்துள்ளார். மிக விசேடமாக மொரட்டுவ கட்டுபத்தையில் வியாபாரம் நடத்தினார். அதற்கு முன் மத்துகம - நேபட வீதியில் ''லஷிமி ஸ்டோர்ஸ்'' புடைவைக் கடை செய்தவர். அவர் இராச் சாப்பாடு ஒழுங்குகளைச் செய்து இரவு 10.15 அளவில் லொட்ஜில் கொண்டு வந்து விட்டு 11.30 மணி வரை கதைத்திருந்து விட்டுச் சென்றார்.

காலையில் 6.00 மணிக்கு லொட்ஜிலிருந்து வெளியேறி பஸ் பிடித்து சேலம் ரயில்வே ஸ்டேஷனை வந்தடைந்தேன். 8.30 மணிக்கு மெட்ராஸ் எக்ஸ்பிரஸ் என அறிந்து அதற்காகத் தாமதித்தேன். இங்கிருந்து வீட்டுக்கு டெலிபோன் எடுத்துப் பேசிக் கொள்ள வசதியானது குறிப்பிட்ட நேரத்தில் புகையிரதம் வந்தது, ஏறிக் கொண்டேன். மற்றொரு அன்பர் தமிழில் என்னுடன் சேர்ந்து கதைத்திருந்து அதே புகையிரதத்தில் மெட்ராஸ் போய் வடநாடு செல்லச் சென்றார். தனது அரசாங்க அலுவலக ஐ.டி.காட்டித் - தன்னை அறிமுகம் செய்து கொண்டார். அவருடன் கதைத்ததில் சில தகவல்களைப் பெற்றுக் கொள்ளக் கிடைத்தது. தமிழர். அரசாங்கத் தொழில் புரியும் நபர். எஞ்சினியர் பாஸ் பண்ணி ஓர் அரசாங்க தொழில்நுட்ப நிறுவனத்தில் பொறியியல் துறையில் சேவையாற்றுபவர். மத்திய அரசாங் கத்தின் கீழ் இவரது பணியகம் அமைந்துள்ளது. இலங்கையில் தொழில் வாய்ப்புப் பெறுவது பற்றி விசாரித்தார். இலங்கை நாட்டு நிலைமையை அவருக்கு விளக்கினேன். வெளிநாட்டுத் தொழில் மத்திய கிழக்கு அல்லது ஐரோப்பிய நாடுகளே வாய்ப்பானது எனக் காட்டினேன். தமது சகோதரர் ஒருவர் விடயமாகத் தொழில் வாய்ப்புப்பெற முயற்சிப்பதாகக் கூறினார்.

மற்றுமொரு நபர் இந்தியன் ரயில்வேயில் வேலை செய்து ஓய்வு பெற்றவர் . தனது மகள், மகன் இருவரும் கலியாணம் கட்டி மெட்ராஸில் இருப்பவர்களைப் பார்க்கவெனச் செல்கின்றார். அவரும் சேலத்தில் ரயில் ஏறியவர். என்னை அறிமுகமாகிக் கொண்டு நிறையக் கதைத்தார். மேற்படி இருவரது தகவல்களும் நான் நேரடியாகக் கண்டவைகளும் வாசகர்களுக்குப் பயன் தரக்கூடியன என்பதால் எழுதுகின்றேன்.

நான் வந்த வழியில் பல மாவட்டத் தலைநகரங்களைக் கடந்தேன். நாகப்பட்டினம், திருச்சி, நாமக்கல், சேலம், வேலூர் , மெட்ராஸ் என்று வரும். தற்போது ஜோலார் பேட் சந்தி ரயில்வே ஸ்டேசனைக் கடந்த பிறகு வாணியம் பாடி வருகிறது. வாணியம் பாடியும் அடுத்துவரும் ஆம்பூரும் முஸ்லிம்கள் அதிகமானோர் வாழும் இடங்கள் என்பது மட்டுமல்ல இந்த ஊர்களைக் கவனிக்கும் போது இலங்கையில் அக்குறணை, காத்தான்குடி, வேர்விலை போன்ற இடங்கள் நினைவு வந்தன. அங்கும் பணக்காரர்கள். முஸ்லிம்கள் வாழ்கிறார்கள். வாணியம் பாடி, ஆம்பூர் என்பனவும் இவ்

வாறே. இலங்கையில் ஹோட்டல், தொழில், றைஸ்மில் அக்குறனைக் காரர்களிடம். இலங்கையில் விஷேடம் காத்தான்குடி புடைவை, சாரன் வியாபாரம் வேர்விலை மாணிக்க வியாபாரம். அதேபோல வாணியம்பாடி, ஆம்பூர் என்பன இந்தியா - தமிழ் நாட்டில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் தோல் வியாபாரத்துக்கு விசேட இடமாகத் திகழ்கின்றன. தோல் பதனிடுவது தொட்டு இத்துறையில் சகல வர்த்தக நடைமுறைகளும் இங்குண்டு. வர்த்தகத் துறையில் மிக விசே டதபதி எனும்போது இந்தியா கீழக்கரைதான் முதலிடம் வகிக்கிறது. ஏற்றிறக்குமதி வர்த்தகமும் கீழக்கரையில் முதலிடம் வகிக்கிறது. ஏற்றுமதி வர்த்தகமும் கீழக்கரை முஸ்லிம்கள் ஆதிக்கத்தில் இருந்துள்ளது. எனினும் இதனையடுத்த வர்த்தகத்தலம் மேற்கூறப்பட்ட இடங்கள் என்பதில் பிழை இருக்காது.

இங்கு மற்றுமொரு விசேடமான இடத்தைக் கடந்து ரயிலில் பிரயாணம் செய்தேன். ''அப்பலோ'' ஆஸ்பத்திரி இப்போதெல்லாம் மிக விசேடம் தான். எனினும் வேலூர் ஆஸ்பத்திரி, தமிழ் நாட்டில் மிகவும் பிரபல்யமான ஆஸ்பத்திரியாகும். இலங்கையிலிருந்துகூடப் பலர் சென்று வைத்தியம் செய்து கொண்ட ஓர் இடம் இது. வேலூரில் பெரிய ரயில்வே ஸ்டேஷன் இல்லை. காட்பாடி புகையிரத நிலையத்தில் இறங்கிச் செல்லலாம். இன்னொரு முக்கியமான விடயம். இவ்விடத்தில் ரயிலில் கடக்கும் போது கொழும்பு பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் பஸ்ஸில் செல்லும் பிரமை ஏற்பட்டது. ஆம்; உயர் நிலைப்பள்ளி முடித்துத் தேர்ச்சி கண்ட பொறியியல் மாணவர்களுக்கான தொழில்நுட்பக் கல்லூரி இங்கு இரு பக்கத்திலும் அமைந்திருக்கிறது. பகல் 12.30 அளவில் ட்ரைனில் அவ்விடத்தைக் கடக்கும் போது மாணவர்கள் சாப்பாட்டுக்காக வரிசையாக வெளியே வந்துகொண்டிருப்பதைக் காணமுடிந்தது. இவ்விடத்தில் இலங்கை இந்திய கல்வித் துறையைச் சிறிது ஒப்புநோக்குவது சாலச் சிறந்தது என நினைக்கின்றேன். பெரும்பாலும் ஆங்கிலேயர்களைப் பின்பற்றி நடைமுறைக்கு வந்த, கல்வி முறையே ஆங்கிலேயர் காலத்தில் இங்கு ஏற்பட்டது. எனினும் மகாத்மா காந்தி போன்ற தேசபக்தர்கள் வார்தா கல்வித்திட்டம் போன்றவற்றை ஏற்படுத்தித் தொழிற் கல்வியை இந்தியாவில் புகுத்தினார்கள். இதனால் இந்தியா கைத்தொழில் முன்னேற்றம் கண்ட ஒரு நாடு என்ற சிறப்பைப் பெற்றுள்ளது. சுமார் 112 கோடி மக்கள் இங்கு வாழ்கின்றனர்.

ஆரம்பக்கல்வி தமிழ்ப் பிரிவு பாடசாலையாக இயங்குகிறது. 6-12 வகுப்பு வரை உயர்நிலைப் பள்ளி எனப் பாடசாலைகள் இயங்குகின்றன. 12ம் வகுப்புத் தேறியபின் அவர்களுக்காகத் தொழில்நுட்பக் கல்லூரிகள் இங்கு இயங்குகின்றன. 12ம் வகுப்பு எல்லாப் பாடங்களும், தேர்ச்சியடைந் தால்தான் தொழில் நுட்பக் கல்லூரிக்கு நுழையத் தகுதி பெறுகிறார்கள்.

இங்குள்ள பாடசாலைகள், காலை 8.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 4.30 மணிக்கு விடுகிறார்கள். இடையில் 12.30 - 2.00 வரை சாப்பாட்டு இடை வேளை வருகிறது. ஆசிரியர்கள் காலையில் சென்றால் மாலையில் வீடு திரும்ப வேண்டிய நிலை. இப்படியான ஒரு நடைமுறையை இலங்கையில் திரு.லலித் அத்துலத் முதலி அவர்கள் கல்வியமைச்சராக இருந்த போது நடைமுறைப்படுத்தும்படி வெள்ளை அறிக்கை மூலம் சிபாரிசு செய்திருந் தார். ஆசிரியருக்கான உயர்ந்த சம்பளத் திட்டமும், இந்த அடிப்படையி லேயே சிபாரிசு செய்யப்பட்டிருந்தது. தற்போதைய அரசாங்கம் சம்பளத் தைக் கூட்டி வழங்கியுள்ளது. பாடசாலை நேரம் நீடிக்கப்படவில்லை. மாணவர்களும் ஆசிரியர்களும் 2.00 மணியுடன் வீட்டை அடைந்து விடு கின்றனர்.

தவிர இந்தியாவில் நிறையத் தொழில் முறைக்கல்லூரிகள் உள. உ+ம் நடனக் கல்லூரிகள், சங்கீதக் கல்லூரிகள் பாடசாலைகள் அதிபர் ஒருவரின் கீழ் இயங்குகின்றன. அத்துடன் பாடத்திற்கான தலைவர்களாக ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தியா தமிழ் நாட்டில் சி.பி.ஆதித்தனார் தோற்றுவித்த **தினத்தந்தி** இன்றும் பிரபல்யமான தமிழ் பத்திரிகையாக வெளிவந்து கொண்டிருப்பது மட்டுமல்ல. வாசகர் வட்டத்தில் முதல் இடத்தைப் பெற்றிருக்கிறது என்று ஒரு கணிப்பீடு தெரிவிக்கிறது. இம்முறை பத்திரிகைமூலம் வழங்கும் விருது ஓர் இலட்சம் ரூபா நீதிபதி இஸ்மாயில் அவர்களுக்கும் 50000/= ரூபா. கவிஞர் வைரமுத்துக்கும் வழங்குவதான செய்தி. 22.9.99 இல் மாலை டி.வியில் ஒளிபரப்பாகியது. இத்தகைய ''தினத்தந்தி'' சேலம் நகரில் ஒரு பதிப்பாக வெளியிட்டு விநியோகிக்கிறார்கள். அதில் ஒரு பிரதி 22ம் திகதி வாங்கிக் கொண்டேன். ஏக காலத்தில் 6 அல்லது 7 இடங்களில் ''தினத்தந்தி'' அச்சிட்டு வெளியிடுகின்றார்கள். இந்தியாவில் செய்தித்துறை முன்னேற்றம் தமிழ் நாட்டிலும் பிரதிபலிப்பதை இது காட்டுகிறது.

பி.ப.2.45 அளவில் (இந்திய நேரம்) ட்ரெயின் மெட்ராஸை அடைந்தது. நேரடியாகக் கடையில் சென்று தேநீர் அருந்தி விட்டு மண்ணடித் தெருவிற் குச் செல்ல பஸ் எடுத்தேன். பாரிஸ் சந்தியில் இறங்கி வேறு பஸ் எடுக்க வேண்டும் என்றார்கள். 1 கி.மீ.தூரம் என்பதால் நடந்தே செல்லலாம் என்று நடக்க முற்பட்டேன். சரியாக 4.00 மணி அளவில் குறிப்பிட்ட இடத்தை அடைந்தேன். இங்கு அவசர அவசரமாகப் பேசி நாளை வருவதாகக் கூறிவிட்டு மீனம் பாக்கம் செல்ல ''ட்ரெயின்'' எடுத்தேன். 5/= டிக்கெட். பழைய மாணவர் அருச்சுனன் வீட்டை அடைய 6.00 மணி. அர்ச்சுனனோ, அண்ணனோ வீட்டில் இல்லை. வரும் வரை காத்திருந்தேன். 8.00 மணி 8.50க்கு இருவரும் வந்தார்கள். தகவல்களைப் பரிமாறி விட்டு அங்கு

விஷ்ணு பவன் லொட்ஜில் தங்கினேன். லொட்ஜ் வரை வந்த அர்ச்சுனன் வீடு திரும்பினார். நாளை மறுநாள் இலங்கை செல்ல மீனம் பாக்கம் விமான நிலையத்துக்குச் செல்லும் போது வருவதாகக் கூறி விடை கொடுத்து அனுப்பினேன்.

காலையில் சென்னை திரும்பி அங்கு ஆகவேண்டிய கருமங்களை மேற்கொண்டேன். சந்திக்க வேண்டிய சிலரைச் சந்தித்து அளவளாவக் கிடைத்தது. பழைய மாணவர்கள் (தமிழர்) அங்குக் கடை வைத்திருக் கிறார்கள். மாணவி ஒருத்தி திருமதி.விக்னேஸ்வரி கல்யாணம் கட்டி அங்கு வாழ்கிறாள். அவளது புருஷன் (திரு.பரமசிவம்) புடவைக் கடை ராதாஸ் டெக்ஸ்டைல்ஸ் (மொத்த வியாபாரம்) வைத்துள்ளார். அங்கெல்லாம் செல்ல வாய்ப்பு கிடைத்தது. பிற்பகலில் கடையில் வீட்டுக்குக் கொண்டு வரச் சில பொருட்களை வாங்கிக் கொண்டேன். பார்சல் பண்ணி டவுனில் ஒரு தெரிந்த நபரின் கடையில் வைத்தேன். அன்றிரவு சென்னையில் தங்கி அடுத்த நாள் காலை முச்சக்கர வண்டியில் மீனம்பாக்கம் விமான நிலை யத்தை நோக்கிப் புறப்பட்டேன். வரும்வழியில் திராட்சை, அப்பிள் போன்றவற்றை வாங்கிக் கொண்டேன். அர்ச்சுனன் வீட்டில் ஒரு பார்சல் தந்தார்கள். மத்தகெதரையில் அவர் உறவினருக்கு ஒப்படைக்க வெனக் கொடுத்தார்கள். எல்லாம் பெற்றுக் கொண்டு காலை 10.00 மணிக்கு 'ஏயார் இந்தியா' மூலம் இலங்கையை அடைந்தேன்.

*(வெலிப்பன்னை றஹ்மானிய்யா ம.வி.ல் வெளிவரும் காலாண்டிதழ் ''தேன்துளி'' யில் 2001ல் தொடராக வந்த கட்டுரையின் இறுதிப் பகுதி)*

# முஸ்லிம் கிராமங்கள்

## வெலிப்பன்னை - களுத்துறை மாவட்டம்

களுத்துறை மாவட்டத்தில் அளுத்கம - மத்துகம வீதி (ஹொரவல ஊடாக) ஊடறுத்துச் செல்லும் கிராமமே வெலிப்பன்னை. கிராமத்தின் மத்தியில் முஸ்லிம்கள் வசிக்கின்றனர். சுற்றிவரச் சிங்களவர் செறிந்து வாழ்கின்றனர். தோட்டங்களில் தமிழர் வசிக்கின்றனர்.

மிகவும் தொன்மை வாய்ந்த கிராமம் வெலிப் பன்னை என்பதற்கு அத்தாட்சி உண்டு. போர்த்துக்கீசர் காலத்தில் வரைந்த இலங்கைப் படத்தில் களுத்துறை இடம் பெற்றிராத காலத்தில் வெலிப்பன்னை சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(முன்னாள் உபசபாநாயகர் - மத்துகம எம்.பி.திரு அனில் முனசிங்க, பாராளுமன்ற நூலகத்திலிருந்து இந்த தகவலைப் பெற்றுத் தந்தார்)

கி.பி.1505 ல் இலங்கை வந்த போர்த்துக்கீசர் சுமார் 150 வருடங்கள் இலங்கைக் கரையோரங்களைக் கைப் பற்றி ஆட்சி புரிந்துள்ளனர். அக்காலத்திற் கூட வெலிப் பன்னை பிரபல்யம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வெலிப்பன்னை நகருக்கண்மையில் ஓடும் வெலிப் பன்னை கங்கை மேலால் தற்போது அமைந்துள்ள பாலத்திற்குக் கீழ்ப் பக்கமாக அக்காலகட்டத்தில் ஒரு வர்த்தகத் துறைமுகம் ஆற்றோரத்தில் அமைந்திருந் துள்ளது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலும் நெடுஞ் சாலை அமைத்துப் போக்குவரத்து விரிவடையும்வரை

இத் துறைமுகம் பிரசித்தமடைந்திருந்ததை முதியோர்கள் எடுத்துரைத்துள்ளனர். இன்றும் இதன் அழிபாடுகளின் சின்னங்கள் உள்ளன.

வர்த்தகத்தை நோக்காகக் கொண்டு இலங்கை வந்த அரேபிய -இந்திய முஸ்லிம்கள் அப்போது ஆழமாக இருந்த வெலிப்பன்னை ஆற்றில் படகுகளில் பொருட்களைக் கொண்டு வந்து இத்துறை முகத்தில் இறக்கி வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளனர். குறிப்பாக வேர்விலை, வெலிகம போன்ற இடங்களிலிருந்த முஸ்லிம்களின் தொடர்பு ஆரம்பத்திலேயே இங்கு இருந்ததாகவும், அவர்கள் பரம்பரையே வெலிப்பன்னையில் முதலில் குடியேறிய முஸ்லிம்கள் எனவும் கூறப்படுகிறது. வேர்விலை, மக்கொன போன்ற இடங்களில் விவாகத் தொடர்பு முதலில் இங்கு ஏற்பட்டுள்ளது.

பெந்தோட்டைக்கப்பால் ''லத்துவ'' என்ற இடத்தில் முஸ்லிம் குடும்பங்கள் வசித்து வந்ததாகவும் சிங்கள சிற்றரசன் முஸ்லிம் குமர்ப் பெண்ணை விவாகம் செய்யக் கேட்ட போது அக்குடும்பத்தினர் இஸ்லாமிய அடிப்படையில் பாவத்துக்கஞ்சி இறைவனைப் பயந்து தோணியமைத்து பெந்தரை நதிமூலம் இரவோடிரவாக வெளியேறி பெந்தரநதி தொடர்புள்ள வெலிப்பன்னை கங்கையூடாக வந்து அக்காலத்தில் வெலிப்பன்னையில் குடியேறியதாகவும் ஐதீகக் கதை ஒன்றும் உள்ளது. முஸ்லிம்கள் ஏற்கனவே இங்கு வசித்து வந்தமையால் புகலிடமாக அவர்கள் இங்கு வந்து ஒதுங்கினார்கள் என நம்ப இடமுண்டு. இதன் பின் ''லத்துவ'' என்னும் ஊர் முஸ்லிம்கள் இல்லாத ஊராக மாறிற்று என்றும் கூறப்படுகிறது. (இச்சம்பவத்தினால் அச்சமுற்று முஸ்லிம்கள் பக்கத்தில் துந்துவைக்கு இடம் பெயர்ந்திருக்கலாம் - ஆராய்ச்சிக்குரியது.)

வெலிப்பன்னையிலுள்ள **மஸ்ஜிதுந் நபவி** ஜும்மா ப் பள்ளிவாசல் கி.பி.1875 அளவில் கட்டப்பட்டதாக அறிய வருகின்றோம். (இதுவரை பலமுறை புனருத்தாரணம் செய்யப்பட்டுள்ளது.)

வேறொரு சிறிய பள்ளிவாசல் இதற்குத் தெற்குப் பக்கமாகச் சிறிது மேலாக முன்பு அமைக்கப்பட்டிருந்ததாக முதியவர்கள் கூறியுள்ளனர். 17ம் 18ம் நூற்றாண்டளவில் அஃது அமைக்கப்பட்டிருக்கலாம். அக்கால கட்டத்துக்கு முன்பே வெலிப்பன்னை ஒரு முஸ்லிம் கிராமமாகப் பரிணமித்திருக்கிறது.

வேர்விலையில் ஆட்சி செய்த வத்திமி மன்னனின் முஸ்லிம் சேனைத் தளபதி (இந்தியாவைச் சேர்ந்த ஷேக் ஸுபைர்தார்) ஒருவர் வெலிப்பன்னையில் வசித்து வந்தார் என்பது மற்றொரு வரலாறு. வத்திமி மன்னர் (கி.பி.1234-1236 எனக் கருதப்படுகிறது) ஆட்சி செய்த காலத்தில் தளபதி வெலிப்பன்னைக்குக் குதிரையில் - குதிரை வண்டியில் வந்திறங்குவார் என்றும் முள்கெட்டிய என்னும் பகுதியில் வீடமைந்திருந்தது என்றும் அவர்

அங்கு இளைப்பாறிய இடம் ஆற்றில் குளித்த இடம் எல்லாம் சுட்டிக் காட்டிப் பேசப்படுகிறது.

வெலிப்பன்னை மஸ்ஜிதுந் நபவி ஜும்மா பள்ளிவாசல் கட்டப்பட்ட காலத்தில் இதற்கென ஏற்பாட்டைச் செய்தவர்கள் காதிரிய்யதுந் நபவிய்யாத் தரீக்காவைச் சேர்ந்த ஷெய்குமார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பக்கிக் கரத்தையில் ஷெய்கு முஸ்தபா (லலி) நாயகம் அவர்கள் இங்கு வந்து கருமங்களில் கலந்து மத்துகம பாதையில் செல்லும் போது நடந்த சம்பவம் விசேடமாக விதந்தோடப்படுவதொன்று. கடைவீதிக்கப்பால் மத்துகம நோக்கிச் செல்லும் போது (முன்பு தபால் நிலையம் இருந்த இடம்) சனங்கள் நிறைந்திருந்த இடத்தைக் கண்ணுற்ற ஷெய்கு முஸ்தபா (வலி) நாயகம் அவர்கள்,ஏன் இவ்வாறு மக்கள் கூடியிருக்கறிார்கள்? என வினவ அங்கு கள்ளு கொட்டில் ஒன்றில் கள் குடிக்கிறார்கள் (சிங்களவர்கள் குடித்துக் கொண்டு இருந்துள்ளனர்) என்ற பதில் கூறப்பட்டது. ஷெய்கு முஸ்தபா (வலி) நாயகம் அவர்களை வண்டி அவ்விடத்தால் எடுத்துச் சென்ற மறு கணம் கள்கொட்டில் தீப்பற்றி முழுவதாக எரிந்து சாம்பலாகி விட்டதாகக் கூறப்படுகிறது. இச்சம்பவம் மற்றொரு உண்மையைச் சுட்டிக் காட்டுகிறது. பழங்காலத்தில் இலங்கை முழுதும் - நாடு பூராவும் தரீக்காக்களைச் சார்ந்த ஷெய்கு மார்கள் பள்ளிவாசல்களை எல்லா இடங்களிலும் அமைத்து விட்டுச் சென்றனர். மக்களை நல்வழிப்படுத்தினர் என்ற உண்மையும் வெளிப்படுவதைக் காணலாம்.

வெலிப்பன்னை இன்னும் ஒரு சிறிய கிராமமாகவே உள்ளது. சுமார் 2000 முஸ்லிம் வாக்காளர் உள்ளனர். ஒரு முஸ்லிம் மஹாவித்தியாலயம் உள்ளது. பள்ளிவாசல், தொழுகை இடங்கள், தக்கியா என்பன 6 இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. சிற்றாறுகள் இரண்டோடும் வெலிப்பன்னை வனப்புறு கிராமம் என்பது ்ாவரும் ஏற்றுக் கொள்ளும் கருத்தாகும். அடிக்கடி ஏற்படும் வெள்ளப்பெருக்கு இவ்வூர் முன்னேற்றத்துக்குத் தடைக்கல் எனக் கூறலாம்.

**(அஷ்ஷம்ஸ் - இதழ் 5)**

# புரிந்துணர்வு ஒப்பந்த அமைதி பேணலில் யாழ் நகர் விஜயம்

## (24.5 - 2002 - 29-5-2002)

இலங்கையின் வடபகுதி யாழ்ப்பாணக் குடா நாடு அடங்கலாகக் கடந்த 19 வருடங்களாக யுத்த மேகம் சூழ்ந்திருந்த பிரதேசம். 2002ல் ஆட்சிப் பீடமேறிய ஐ.தே.முன்னணி ஆட்சியினருக்கும் எல்.ரீ.ரீ.ஈ. போரா விகளுக்குமிடையில் ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் காரணமாக வெடிச்சத்தம் நீங்கி அமைதிச் சூழல் ஏற்பட் டமையால் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி யாழ்ப்பா ணம் உள்ளிட்ட பிரதேசத்தையும் அங்குள்ள நண்பர் களையும் காண வேண்டும் என்ற அவாவில் உந்தப் பட்டேன். அத்துடன் யுத்த காலத்தில் 1990 ஏப்ரலில் கௌரவ ஜனாதிபதி திரு.ஆர் பிரேமதாஸ அவர்களுக் கும் எல்.ரீ.ரீ.ஈ யினருக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடந்த சுமுகமான ஒரு சூழ்நிலையையும் பயன்படுத்திக் கொண்டு யாழ்ப்பாணம் சென்று வந்த அனுபவம் ஏற்கனவே உண்டு.

அப்போதைய சூழ்நிலைக்கும் தற்போதைய நிலை மைக்குமான வேறுபாட்டைக் காணலாம் என்ற எண்ண மும் மனதில் உதித்தது. அத்துடன் குடும்ப அங்கத் தவர்கள் யாழ்ப்பாணம் சென்றிருக்கவில்லை. அவர் களுக்கும் ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கலாம் என்ற நோக்கத்தில் இவ்வேற்பாடு.

சமாதானப் பேச்சுவார்த்தை சென்ற ஆட்சிக் காலத் தில் நோர்வே அரசாங்கத் தூதுவர்களை மத்தியஸ் தர்களாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. எனினும் அப்போதைய அரசாங்கமும் எல்.ரீ.ரீ.ஈயும் முரண்பட்ட

விடயம் எல்.ரீ.ரீ.ஈ. ஆயுதங்களைக் களைந்தே பேச்சுவார்த்தைக்கு வர வேண்டும் என்ற அரசாங்கத்தின் போக்காகும். எனினும் தற்போதைய அரசு அந்நிபந்தனையை நீக்கி விட்டதின் பேரில் புரிந்துணர்வு ஒப்பந்தம் சாத்திய மாகியுள்ளது. சமாதானப் பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலை உருவாக்கம் பெறுகிறது.

தற்போது எல்.ரீ.ரீ.ஈ யினரின் ஆட்சிப் பிரதேசம் ஏ9 பாதையில் சுமார் 75 மைல் தொலைதூரம் - முறிகண்டி புளியங்குளம் தொட்டு முகமாலை வரை - உள்ளடக்கியுள்ளது. தவிர முல்லைத்தீவு, மன்னார், மட்டக்களப்பு, வவுனியா, கிளிநொச்சியிலும் அவர்களது பிரதேசங்கள் உண்டு. கையில் ஆயுதமேந்தி நடமாடும் எல்.ரீ.ரீ.ஈ. வீரர்கள் அரசாங்கப் பிரதேசமான ஏ9 பாதையில் புளியங்குளத்துக்கு இப்பாலும் முகமாலை பளைக்கு அப்பாலும் ஆயுதமின்றிப் பிரவேசிக்கலாம். ஏனைய இலங்கை அரசாங்கப் பரிபாலனப் பகுதியிலும் நிராயுதபாணியாகவே அவர்கள் வருகை தரவேண்டும். எனினும் எல்.ரீ.ரீ.ஈ ஆட்சிப் பிரதேசங்களில் இலங்கை அரசாங்கப் படைவீரர்கள் நுழைவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

எல்.ரீ.ரீ.ஈ.யினர் அரசியல் பிரவேசம் செய்ய மேற்படி வசதி செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. எமது பயணத்தின் போது நேரடியாக இந்நடவடிக்கைச் செயற்பாட்டை அவதானிக்கக் கூடியதாயிருந்தது.

சென்ற 24.05.2002ல் அதிகாலையில் யாழ் செல்லும் பயணத்தை வெலிப் பன்னையிலிருந்து ஆரம்பித்தோம். வானில் சென்றதால் மு.ப.11.30 அளவில் வவுனியாவை அடையக் கிடைத்தது. வெள்ளிக்கிழமை குத்பாவைத் தவற விட முடியாது என்பதால் வெள்ளிக்கிழமை பள்ளிவாசல் பரிபாலனத்தி லுள்ள இஸ்லாமிய கலாசார நிலையத்தில் நேரமாகும் வரை நிலை கொண் டோம். வவுனியாவில் வெலிப்பன்னை கணாணைத் தோட்டத்தைச் சேர்ந்த திரு பாலையா குடும்ப சகிதம் குடிபதியாகியுள்ளார். நகைக் கடையில் வியாபாரம் அவரை இடையில் சந்திக்கக் கிடைத்தது.

அங்கு அப்பொழுது எமக்கிருந்த பிரச்சினை ஒன்றையும் தீர்த்துக் கொள்ள வேண்டியிருந்தது. வாகன உரிமையாளர் வாகன உரிமைப் பதி வேட்டை நாம் பயணம் செய்யும் வாகனச் சாரதியிடம் கொடுத்திருக்க வில்லை. ஜனாப் எம்.டீ.எம்.இர்பான் வாகனத்தை ஓட்டிச் சென்றார். (வாகனம் ஜனாப் எம்.எம்.எம் .அன்வருடையது) எனவே அதன் போட்டோப் பிரதி ஒன்றாயினும் பெற்றுக் கொள்ளாவிட்டால் படையினர் தமது சோத னைச் சாவடியிலிருந்து அப்பால் செல்ல விடாமல் தடுப்பதாக வவுனி யாவில் தெரிவித்தனர். எனவே அங்கிருந்தவாறு தொலைபேசியில் வாகன உரிமையாளர் ஜனாப் அன்வர் உடன் தொடர்பு கொண்டு ''பெக்ஸ்'' மூலம் பதிவேட்டுப் பிரதியை பெற்றுக் கொண்டே அங்கிருந்து கிளம்பினோம்.

பி.ப.3.30 ஆகியது. பள்ளிவாசலில் குத்பா முடிந்து சாப்பாட்டையும் முடித்து மேலும் கால தாமதத்தை ஏற்படுத்தியதால் தாண்டிக்குளம் அரசாங்கப் படைச் சோதனைச் சாவடியைத் தாண்டி புளியங்குளம் எல்.ரீ.ரீ.ஈ. சோத னைச் சாவடியைக் கடந்து முடிய மாலை 4.30 மணி பிந்திவிட்டது. இதனால் வாகனப் போக்குவரத்து இரவில் தடை பண்ணப்பட்டுள்ளதால் முகமாலை பளை எல்.ரீ.ரீ.ஈ ஈழப் போக்குவரவுக்கழக பஸ்நிலயத்தில் தங்க வேண்டி யேற்பட்டது.

இங்கு தங்கியதில் பல்வேறு விபரங்கள் தெரிந்து கொள்ளும் வாய்ப்பும் ஏற்பட்டது. இரவு முழுவதும் இவ்வாறு தங்கிச் செல்வோருக்கு விசேட ஏற்பாடுகளை எல்.ரீ.ரீ.ஈ. அணியினர் மேற்கொண்டு இருந்தனர். இரவு விடியும் வரை எல்.ரீ.ரீ.ஈ பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சாப்பாடு சமைத்துக் கொள்ள வசதி, தங்கி நிற்க வசதிகள் செய்யப்பட்டி ருந்தன. தவிர ஹோட்டல் வசதிகளும் அங்குள்ளன. எல்.ரீ.ரீ.ஈயின் விஷேட பொலிஸ் பிரிவு (காவல் நிலையம்) வங்கிகள் விசேட நிருவாக அதிகார அலகுகள், நீதிமன்றங்கள் அவர்களது அதிகாரப் பிரதேசங்களில் ஏற்படுத் தப்பட்டுள்ளன. எல்.ரீ.ரீ.ஈயினருடன் கதைத்ததில் இவற்றை அறிந்து கொண்டதுடன் பயணத்தின் போது நேரடியாக இவ்வுண்மைகளை அவ தானிக்கக் கூடியதாகவும் இருந்தது.

அடுத்த நாள் காலை 8.00 மணிக்கே பாதை திறக்கப்படும் என்றார்கள். எனவே விடிந்து நேரமான பின்பே அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டோம். ஏற்கனவே முதல் நாள் நாங்கள் 11.30 மணி பகலில் வவுனியாவை அடைய எடுத்த நேரத்திலும் மூன்று மடங்கு நேரத்தைச் செலவிட்டே (தூரத்தை ஒப்பிடும் போது) பளையை (முகமாலையை) அடையக் கிடைத்தது. கார ணம் ஏ9 பாதை திருத்தப்பட வேண்டியதான குழியும் கிடங்குமாக இருந் தமையாகும். பாதை திருத்தத்துக்கான மண்வெட்டிக் குவித்துப் பரத்திக் கொண்டிருந்தமை பாதை நீட்டத்தில் இடைக்கிடை காணக்கூடியதாக இருந்தது.

பயண வழியில் நேரடியாகக் கைதடியில் ஆசிரியர் திரு.பவள குமார னைச் சந்திக்க முயற்சித்தேன். அவர் வீட்டிலிருக்கவில்லை. அச்சுவேலி, நாவற்காடு. குறிப்பிட்ட வீட்டில் நாம் தங்குவதாக அங்கு செய்தி வைத்து விட்டு நேரடியாக அச்சுவேலிக்குச் சென்றோம்.

அச்சுவேலி வீட்டை அடைய மு.ப.11.30 மணி தாண்டி விட்டது. அன்று முழுவதும் ஓய்வு எடுக்க வேண்டிய களைப்பு எதற்கும் வேனிலேயே யாழ்ப்பாணம் சென்று வீட்டுக்கு போன் பண்ணி விட வேண்டும் என்பதால் அந்நடவடிக்கையில் ஈடுபட்டேன். வழி நெடுக முயற்சித்தும் போன் வசதி வாய்க்கவில்லை. எனவே யாழ்ப்பாணம் சென்று போன் செய்யக் கிடைத்

ததில் மன ஆறுதல். இல்லையேல் ஒரு செய்தியும் அறியவில்லையே என ஊரில் குடும்பத்தினர் தவிப்பார்கள். அப்படியொரு சூழ்நிலை ஊரில் நில வியதே காரணம். மே 29 காலையில் அங்கிருந்து (யாழ்ப்பாணத்திலிருந்து) திரும்பும் வரை அச்சுவேலியிலேயே தங்கும வசதி வாய்ப்புக் கிட்டியது. எம்முடன் வெலிப்பன்னையில் திருமணம் செய்திருக்கின்ற அச்சுவேலி யைச் சேர்ந்த திரு.தனேஷ்குமார் (பொலிஸ் உத்தியோகத்தர்) குடும்பத்துடன் சென்றிருந்தார். அவரது இல்லத்திலே தங்கிவிட்டது மாத்திரமல்ல சாப்பாடு, தேநீர் வசதிகளை எல்லாம் அவர்களே செய்து கொடுத்தார்கள். அவர்களுக்கு சிரமப்படுத்தி விட்டோமே என்ற மனத்தாங்கல்தான். ஆனால் அவர்கள் சிரமமாகக் கணிக்காது மகிழ்ச்சியாகச் செயல்பட்டார்கள். இஃது ஒரு பேருதவியாக அமைந்ததை விசேடமாக நினைவு கூர வேண்டும்.

திரு.எஸ்.பவளகுமாரன் மாலை நேரமே (25ம் திகதி) அச்சவேலிக்குத் தேடி வந்து விட்டார். செய்தி வைத்து வந்ததால் கைதடியிலிருந்து மோட் டார் சைக்கிளிலேயே நாம் தங்கி நிற்கும் குறிப்பிட்ட வீட்டிற்கே வந்து சேர்ந்தார். அத்துடன் அன்பான அழைப்பையும் விட்டுச் சென்றார். அடுத்த நாள் பகல் சாப்பாடு கண்டிப்பாக அவர்கள் வீட்டில் என்றார். வேன் நிறைய 25 பேர் வருவோம் என்றேன்,பாதகமில்லை என்றார்.

இத்தனைக்கும் மத்துகம சென்மேரீஸ் தமிழ் ம.வில் நான் அதிபராக இருக்கும் போது 5,6 வருடங்கள் உதவி ஆசிரியராக இருந்து விட்டுச் சென்றுள்ளார். 1990ல் ஏப்ரலில் நானும் ஆசிரியர் எம்.வை.கவுசுல் அமீரும் சென்று இவர் வீட்டில் 3,4 நாட்கள் தங்கிச் சென்றதையும் நினைவு கூர்ந்தார். (அப்பொழுது மத்துகம சென்மேரீஸ் ம.வில் ஆசிரியராக சேவை புரிந்தார்) இத்தகையதொரு பிணைப்பு. இனத்தால் இரண்டாயினும் யுத்தச்சூழ்நிலை பாதிக்கப்பட்ட துன்பவாழ்க்கை மத்தியிலும் இன்றும் அந்தப் பிணைப்பு இருக்கிறது என்பதை இவரது செயல் எடுத்துக்காட்டுகிறதல்லவா?

அடுத்த நாள் யாழ்ப்பாணம் முஸ்லிம் பிரதேசம் மற்றும் சாவகச்சேரி, கோப்பாய், கைதடி போன்ற இடங்களைச சுற்றிப் பார்வையிட்டோம். எல்லாம் யுத்த அழிவுகள். மனதை உலுக்கி நின்றன. சென்ற முறை சாவ கச்சேரி கோப்பாய் (1990ல்) இடங்களிலோ யாழ்ப்பாண முஸ்லிம் பகுதி யிலோ எவ்வித அழிவும் இருக்கவில்லை. இடைக்கிடை ''ஷெல்'' விழுந்த சில பாதிப்புக்களையே, அப்பொழுது காணக்கிடைத்தது. இம்முறை இவ்வழிவு நிலையைக் கண்ணுற்றபோது யுத்தக் கொடூர வெளிப்பாடு நிதர்சனமாகத் தென்பட்டது.

ஆனால் யாழ்ப்பாண முஸ்லிம் பிரதேசம் யுத்தத்தால் அழிக்கப்பட வில்லை. கொள்ளையர்களும் கள்வர்களும் அழித்து விட்டார்கள் என்பதற் கான தடயங்கள் தென்பட்டன. கிராமம் முற்று முழுதாக அழிக்கப்பட்டிருந்

தது. பள்ளிவாசல்கள் பாடசாலைகள் சிதைக்கப்பட்டிருந்தன. நகரத்தில் பள்ளிவாசல் ஒன்றும் ஊரில் குத்பா நடாத்தும் (தற்பொழுது) பள்ளிவாசலும் ஓரளவு திருத்தப்பட்டிருந்தன. முஸ்லிம் வியாபார நிலையங்கள் நகரத்தில் கைமாறி வேறு தமிழ் மக்களிடையே அதிகாரத்திற்குட்பட்டிருந்தன.

1990 பிற்பகுதியில் முஸ்லிம்கள் ஒரு சில மணித்தியாலங்களில் யாழ்ப் பாணத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். அதன் பின் கடந்த 12 வருடத் துள் மிக அண்மைக்காலத்தில் இவ்வழிவு நிலை என அங்குள்ளோர் கூறினர். எல்.ரீ.ரீ.ஈ அதிகாரத்திலும் படையினர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி அப்பிரதேசங்களில் நிலை கொண்ட பின்பும் பாதுகாக்கப்பட்டே வந்தன. எனினும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் பாதுகாப்பு தளர்ந்தமையால் இவ்வழிவுகள் மேற்கொள்ள வசதியாகிவிட்டது எனப் பலரும் கூறினர்.

அன்றைய பகல் சாப்பாடு சொன்ன விதமாகக் கைதடியில் வைத்துக் கொள்ளக் கிடைத்தது. பெரும் சிரமத்துக்கு மத்தியில் இதனைச் செய் திருக்கிறார் திரு.பவளகுமாரன் என்பதை அறிந்ததும் மனம் மிக வேதனைப் பட்டது.

அவரது தாயார் சுகவீனம் காரணமாக வயிற்றில் ஆப்பரேசன் செய்யப் பட்டுத் தனியார் ஆஸ்பத்திரி ஒன்றில் யாழ்ப்பாணத்தில் உள்ளார். காலை, பகல், மாலை என்று போய் வருவதும் கவனிப்பதும் அவர் ஒருவர்தான். அவரது அண்ணன், அக்கா, கொழும்பு மொரட்டுவையில் உள்ளனர். பிறிதொரு அண்ணன் லண்டனில் வைத்தியராக உள்ளார். சகல கருமங்களும் இவர் ஒருவரால்தான் இங்கு ஆக வேண்டும் என்ற நிலை பொறுப்புகளுக்கு மத்தியிலும் அன்று மனைவியுடன் சேர்ந்து கரிசனையுடன் கவனித்து உபசாரம் பண்ணியமை நன்றியுணர்வுடன் நினைவு கூரப்பட வேண்டும்.

அதேபோல் திரு தனேஷ் குமாரின் தாய் தந்தை (திரு/திருமதி என் அருளானந்தம்) பற்றியும் ஒரு வார்த்தை சொல்ல வேண்டும் .முன்பின் அறியாத எம்மை வரவேற்று 4,5 நாட்களும் உபசாரம் செய்து எமது தினசரித் தேவைகள் சகலதையும் சம்பூரணமாக நிறைவேற்றித் தந்தார்கள். என்றால் இவ்வுதவியை என்னென்றுரைப்பது? நிகரில்லா உதவியல்லவா? என்ப தைச் சொல்லித்தான் ஆக வேண்டும். திரு தனேஷ் குமாரின் சகோதர சகோதரிகளும் சேர்ந்து ஒத்துழைப்பு வழங்கினார்கள். அவர்களுடைய இனம் சனம் குடும்பத்தினர் இவ்வாறே வரவேற்றமையும் உபசரித்தமையும் இங்கு குறிப்பிட்டு வைக்க வேண்டும்.

யாழ் மத்திய கல்லூரிக்குச் சென்றோம். திரு இராசதுரை அதிபரைச் சந்தித்தேன். பாடசாலைகளின் விவகாரங்கள் பற்றிக் கதைக்கக் கிடைத்தது. பல்வேறு நெருக்கடிக்கிடையில் பாடசாலையைக் கொண்டு நடாத்துகிறார்

என்ற விவரமும் அறியக் கூடியதாயிருந்தது. யாழ் நூல் நிலையம்; கிழக் காசியாவில் வெகுபிரசித்தமான மிக உன்னதமான ஒரு நூல் நிலையம் என்று பிரபல்யம் பெற்றிருந்தது. அது குறிப்பாக யாழ் பிரதேச மக்களுக்கு ஒப்பற்ற ஓர் அறிவுச் சேவையை வழங்கிக் கொண்டிருந்தது. 1983இல் திட்டமிட்டு இதனைச் கொளுத்தி நாசப்படுத்தினார்கள். நூலகரும் மூர்ச்சித்து மரண மானார் என்பது வெகுபிரசித்தம்

சென்ற ஆட்சியாளர் இந்த நூலகத் திருத்த வேலைகளை ஆரம்பித்தனர். தற்போதைய அரசாங்கமும் அதனைச் செப்பஞ் செய்து முடிக்க உதவி புரிவதால் திருத்த வேலை முற்றுப் பெற இன்னும் கொஞ்சமே எஞ்சி யுள்ளது. இரண்டு மாடிகளையும் ஏறி பார்வையிட்டோம். கூடிய கெதியில் திறந்து வைக்க வழி ஆகும். எனினும் அப்பொழுதிருந்த நூல்கள் கிடைக்கப் பெறுமா? என்பது தான் கேள்வி.

யாழ் கோட்டையைச் சுற்றிப் பார்வையிட்டோம். சில பகுதிகள் காடடர்ந்து அழிவுக்கிலக்காகித் தென்பட்டன. போர்த்துக்கீச, ஒல்லாந்தக் கோட்டைகள் இலங்கை நாலா பகுதிகளிலும் இன்றும் நிலை பெற்றுப் பெயர் வழங்கிக் கொண்டிருக்கின்றன. எனினும் எல்.ரீ.ரீ.ஈ. யினர் அழிக்க முற்பட்டு எஞ்சிய பகுதிகளைப் பேணிக் கொள்ள யாழ்ப்பாணக் கோட்டை சம்பந்தமாக ஆலோசித்தல் உசிதமானது.

அச்சுவேலிக்குப் பக்கத்தூர் நவகிரி. இங்கே ஒரு கிணறு உள்ளது. நிலவரைக் கிணறு என்கிறார்கள். அதன் அடித்தளம் கண்டு பிடிக்க முடியாது என்று கூறுகின்றனர். கிட்டடியில் ரஷ்யா ஆராய்ச்சியாளர்களும் ஆய்வுகளில் ஈடுபட்டும் இஃது ஏன்? என்பது கண்டுபிடிக்கப்படவில்லை.

சிறுப்பிட்டி அறிஞரும் பழம் நூல்களின் பதிப்பாசிரியரும் எழுத்தாள ருமான திரு.சி.வை.தாமோதரம்பிள்ளை பிறந்த ஊராகும். அவரது பிறந் தகம் ஞாபகமாக நூல்நிலையம் என்பன கவனித்தோம். அஃதே போல் நல்லூர் கோயில் திருவிழா வெகுபிரசித்தம். நல்லைநகர் ஆறுமுக நாவலரை யும் ஞாபகப்படுத்தாமலில்லை. கோயிலைத் தரிசித்த, நம்முடன் சென்றவர் களுடன் அங்கு ஒரு வீட்டைத் தேடிச் சென்றோம்.

காரணம் எம்முடன் வாய் பேச முடியாத ஒருவர் (திரு. ரமேஷ்) புளியங் குளத்தில் எல்.ரீ.ரீ.ஈ.யினரால் ஒப்படைக்கப்பட்டார். அவரை அச்சுவேலிக் குப் பக்கத்தில் (ஆவரங்கால் சந்தி) ''ஆட்டோ'' ஒன்றில் ஏற்றி வீடு செல்ல விட்டிருந்தோம். அவரைச் சந்தித்து விசாரித்து வர எனச் சென்றோம். அங்கு அமோக வரவேற்புக் கிடைத்தது. வாய் பேசாத தங்கை ஒருத்தி உடனடியாக சைக்கிளில் சென்று கடையில் குளிர்பானம் ,சிற்றுண்டி எல்லாம் வாங்கி வந் தார். மற்றும் உறவினர்கள் அங்கிருந்தனர். கனடாவிலிருந்து வந்தவரையே

எங்களிடம் கூட்டிச் சென்று விடுமாறு ஒப்படைந்திருந்தனர். அவரது மனைவி கனடாவில் உள்ளார். அவர்களது கல்யாணப் புகைப்படத்தையும் காட்டினார்கள். மனைவியும் ஊமை என்பது எமக்கு பேரதிர்ச்சியைத் தந்தது. இவர்களுடன் கலந்துரையாடி விடைபெற்ற பின் மாலையாகி விட்டதால் அச்சுவேலிக்குத் திரும்பினோம்.

அளவெட்டிக்குச் சென்றதில் ஒரு நாள் கழிந்தது. உறவினரைப் பார்க்க வென திரு. தனேஷ்குமார் உடன் அவரது மனைவியும் சென்றார். இதுதான் சந்தர்ப்பம் என அளவெட்டியில் வசிக்கும் திரு. சுந்தரம்பிள்ளை (அதிபர்) யைச் சந்திக்க நாடினேன். கோயிலடியில் போய் விசாரித்த போது தற் போதைக்கு அந்த வீட்டில் இல்லை என்றும் அதிபர் சேவையில் ஓய்வு பெற்றுள்ளார் என்றும் சுன்னாகத்தில் தங்கியிருப்பதாகவும் அங்குள்ள வர்கள் கூறியமையால் சந்திக்கும் வாய்ப்பை இழந்து விட்டோம்.

எமது ஊரில் திருமணம் செய்துள்ள இஸ்லாம் மதத்தைத் தழுவிய ஜனாப் பாறூக் எனப் பெயர் மாற்றம் செய்துள்ள ஒருவரின் வீடு பண்டத்தரிப் பில் உள்ளது. அவர்களுடைய வீட்டுக்குச் சென்று மாமன்மார், சகோதரி, தாய் ஆகியோரைக் கண்டு கதைத்து அளவளாவி அங்குள்ள நிலைமைகளை அறிந்து கொள்ளக் கிடைத்தது; ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும். பக்கத்தில் சில்லாலை மாதகல் போன்ற இடங்களையும் காணக்கிடைத்தது. காலஞ் சென்ற சில்லையூர் செல்வராசன் (தான் தோன்றியக் கவிராயர்) ஒரு கணம் மனதில் தோன்றி மறைந்தார் என்பது குறித்து வைக்கப்பட வேண்டும்.

வல்வெட்டித்துறைப் பயணம் மிக முக்கிய நிகழ்ச்சி. வல்வெட்டித் துறை கோயில் தேர் எரிக்கப்பட்ட நிகழ்வு *(1983)* நினைவு கூரப்பட்டது. எல்.ரீ.ரீ.ஈ.த் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் பிறந்து வளர்ந்த வீட் டைக் கண்டு கொள்ளக்கிடைத்தமையைச் சகலரும் ஒரு பாக்கியமாகக் கருதி னர். சில சேதங்களுடன் வீடு பாதுகாக்கப்பட்டுள்ளது. இன்றும் அது கண் காணித்து கவனிக்கப்படுவது தெரியவந்தது. வீட்டைப் படம் பிடித்துக் கொண்டோம்.

யாழ்ப்பாண நாக விகாரையைப் பார்வையிட்ட நாம் நயினா தீவையும் அடைய வேண்டும் என்ற நோக்கில் ஒரு தினத்தை ஒதுக்கினோம். ஆனால் துரதிஷ்டவசமாக அன்று (உதயன், வலம்புரி) காலைப் பத்திரிகையில் தமிழ் நாட்டில் இருந்து வள்ளத்தில் வந்தவர்கள் கடல் கொந்தளிப்பில் படகு கவிழ்ந்து புங்குடுதீவுக்கருகில் சடலம் ஒதுங்கிய செய்தி பிரசுரிக்கப்பட்டி ருந்தது. கடல் கொந்தளிப்பு என்பதனால் நயினா தீவுப் பயணத்தைத் தடை செய்ய வேண்டியிருந்தது. நயினா தீவைத் தரிசிக்க முடியாமல் பயணம் கைவிடப்பட்டது. மாவிட்டபுரம், வல்லிபுரம் கோயில், கீரிமலை நீர் ஏரி என்பவற்றுக்குச் செல்வதானால் இராணுவ அனுமதியுடன்தான் செல்ல

வேண்டும். இராணுவத்தினர் இருவர் உதவிக்கு வந்தனர். 1990ம் ஆண்டில் கீரிமலை உல்லாசபுரியாக அழகாகத் தென்பட்டது. இன்று பழமையடைந்து திருத்த வேலையை எதிர்பார்த்த நிலையில் உள்ளது. மக்கள் வருகை குறைவு என்று தோன்றியது. கீரிமலை ஒரு புனித நீரேரி. நீராடி புனிதமடையும் தலம் என்று இந்துக்களின் சமயரீதியான நம்பிக்கை. அங்கிருந்து மீண்டு வரும் வழியில் காங்கேசன் துறை சீமெந்துத் தொழிற்சாலை செயலற்ற நிலையில் உள்ளது கண்டோம். எனினும் ஊழியர்கள் வெளிவேலைகளில் ஈடுபடுத்தப் பட்டுச் சம்பளம் வழங்கப்படுவதாக அறியக் கிடைத்தது.

யாழ். பல்கலைக்கழகம், யாழ் விளையாட்டரங்கு, ஆறுமுகநாவலரால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகள் என்பன தரிசிக்கக் கிடைத்த மற்றும் முக்கிய இடங்கள் சில.

விளையாட்டரங்கு முன் ''**யாதும் ஊரே யாவரும் கேளீர்**'' என எழுதப்பட்டிருந்தது. எனினும் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்றே கணியன் பூங்குன்றனாரால் கூறப்பட்டது, என அறிந்துள்ளேன். யாழ்ப் பாணத் தமிழகம் இத்தகு பிழை செய்யலாமா? என் மனதைக் கேட்டுக் கொள்கிறேன். திரு தவநாயகம் (ஆசிரிய ஆலோசகர்) மற்றும் ஆசிரிய நண்பர்கள் பலர் தமது வீடுகளுக்கு என்னை அழைத்துச் சென்று பெருமை தந்தமையைத் தட்டிக் கழிக்க முடியாது.

யாழ்ப்பாணத்தில் தமிழரசுக் கட்சியின் ''ஈழநாடு'' பத்திரிகை இப் பொழுது வெளிவருவதில்லை. எல்.ரீ.ரீ.ஈ. அதிகாரப் பிரதேசத்தில் அவர்கள் பத்திரிகையான ''ஈழநாதம்'' மட்டுமே வாசிக்கக் கிடைத்தது. உதயன், வலம்புரி போன்ற தினசரிப் பத்திரிகைகள் வடமாநிலம் எங்கும் விற்பனை யாகின்றன. வீரகேசரி, தினக்குரல், யாழ்ப்பாணத்தில் பெறக்கூடியதாக இருந்தது. ''தினக்குரல்'' விசேட பதிப்பு யாழ்நகரில் பிரசுரிக்கப்படுகிறது.

அச்சுவேலி நகரத்தில் முஸ்லிம் குடும்பம் இரண்டு வசிக்கின்றார்கள். புசல்லாவை, கொழும்பு இடங்களைச் சேர்ந்தவர்கள். இறைச்சிக்கடை, ஹோட்டல் வியாபாரம் செய்கின்றார்கள். அவர்களுடன் கதைத்ததில், புரிந் துணர்வு ஒப்பந்தத்திற்கு முன்னதாகவே திரும்பி வந்து வியாபாரத்தில் இறங் கியுள்ளனர். 1990ல் யாழ் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட போது இவர்க ளும் வெளியேறிச் சென்றதாகவும் பின்பு திரும்பி வந்ததாகவும் கூறினார்கள்.

யாழ் முஸ்லிம்கள் இன்னும் நிரந்தரமாக வசிக்க வருவது பற்றி முடிவு ஏதும் எடுக்கப்படவில்லை என அறிந்தோம். எனினும் யாழ் நகரில் 200க்கு மேற்பட்ட முஸ்லிம்கள் தங்கி நின்று சிறு வர்த்தகங்களில் ஈடுபட்டிருந்தமை யைக் காணக் கிடைத்தது. சிலர் குடும்ப சகிதம் சமுகம் தந்து தமது வீடு வாசல்கள் இருப்பிடங்களைப் பார்வையிட்டுத் துக்கப்பட்ட நிலையில்

தென்பட்டனர். அவர்களில் உஸ்மானியாக் கல்லூரி ஆரம்பக்கல்விப் பிரிவுத் தலைவரும் (கல்லூரி முன்னிலையில் வீடு இருந்தது) சில நாட்களுக்கு முன் தனது வீடு நொறுக்கப்பட்டதை அறிந்து பார்க்க வந்ததாக அவரது மனைவியுடன் சேர்ந்து அங்கே எம்மிடம் சுட்டிக் காட்டிக் கூறிக் கொண்டிருந்தார். கிட்டடியில் மிகப் பாரதூரமான நாசகாரச் செயல்கள் இங்கே விளைக்கப் பட்டிருக்கின்றன என்பது குறிப்பிட்டுச் சொல்லிவைக்க வேண்டியுள்ளது.

யாழ்ப்பாணக் கிட்டுப் பூங்கா தற்பொழுது திருத்த வேலை செய்யப் பட்டு வருகிறது. சிறிது தூரத்தே ''பூங்கனிச் சோலை'' தனியார் நடாத்தும் பூஞ்சோலை பார்க்கக் கிடைத்தது. 10/= டிக்கெட் கொடுத்து பார்வையிட வேண்டும். படம் பிடிப்பதானால் ஒரு படத்துக்கு 100/= ரூபா செலுத்த வேண்டும் .சிறியதாக இருந்தாலும் அழகான அமைப்பில் இருந்தது.


சங்கிலி மன்னனின் மாளிகை அழிநிலைக்குட்பட்டிருந்தாலும் இன்றும் பார்வைக்கு ஒழுங்காக அமைந்திருக்கிறது. புராதனச் சின்னமாக இது பேணிக் காக்கப்படவேண்டிய தொன்று என்பதைப் பொறுப்புதாரிகள் ஏற்று அக்கறை செலுத்துவது அவசியம் எனக் கூறி வைக்க வேண்டும்.

கீரிமலை சென்று மீளும் போது ''மணல் மேடு'' பகுதி பார்க்கச் செல்ல நாடினாலும் பாதுகாப்புக் காரணங்களையிட்டு அருகில் செல்லக் கிடைக்க வில்லை. தூரத்தில் நின்றே அவதானிக்கக் கிடைத்தது. கடற்கரையில் மணல் மேடாகக் குவிக்கப்பட்டுள்ள ஒரு பிரதேசம் இது. ஓரடி வைக்க முன் ஒரு கணம் சிந்தியுங்கள் ''கண்ணி வெடி கவனம் - காலடியில் மரணம் - என்ற அறிவித்தல்கள் தென்பட்டதால் பாதைமருங்கில் தாண்டிச் செல்ல முடியாத நிலை எங்கும் காணப்பட்டது. பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை சிதைவடைந்து காடடர்ந்த நிலை காணக்கூடியதாயிருந்தது. யாழ் நகர் வைத்திய சாலை சிறப்புற இயங்குகிறது என்பதை உணரக் கூடியதாய் இருந்தது. யாழ் நகரப் பாதைகள் புனருத்தாரணம் செய்யப்பட்டு போக்குவரத்துக்கு வசதியாக இருந்தமை விதந்து கூற வேண்டியதொன்று. யாழ் பஸ் நிலையமும் 1990லும் பார்க்க மிகச்சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. சென்ற ஆட்சிக் காலத்தில் ஈ.பி.டி.பியினர் செயல்பட்டுச் சென்ற அரசாங்கம் மூலம் இவற்றைச் சாதித்துள்ளனர் என்பதற்கான ஆதாரங்கள் தென்பட்டன. 1990ல் யாழ்ப் பாணப் புகையிரதப் பயணத்தைப் பற்றிச் சிந்தித்தேன். இன்று வவுனியா தொட்டு யாழ்ப்பாணம் வரை புகையிரதப் பாதை, புகையிரத நிலையங்கள் அழித்துச் சீர்குலைக்கப்பட்டுள்ளன. பெருந்தொகைப் பணம் செலவிட்டே இவற்றை மீள் நிர்மாணம் செய்ய வேண்டும்.

29ந்திகதி காலையில் அச்சுவேலியிலிருந்து புறப்பட்டோம். வரும் வழியில் எல்.ரீ.ரீ.ஈ. யினர் பாடசாலைக் கட்டிடங்கள் அமைப்பதையும் பொது நிலையங்கள் ஸ்தாபித்துக் கொண்டிருப்பதையும் அவர்கள் அதிகாரப்

பிரதேசங்களில் அவதானிக்கக் கூடியதாயிருந்தது. வெளிநாட்டு உதவிகளும் கிடைக்கப் பெறுவதால் வடபகுதியில் புனருத்தாரணமும் மீளமைப்புக் களும் மீள்குடியேற்றங்களும் கூடிய கெதியில் வெற்றியாக நிறைவேறலாம் என்ற மனத்திருப்தியுடன் இரவு 10.00 மணியளவில் வெலிப்பன்னைக்கு மீண்டு வீட்டை அடைந்தோம்.

*(தேன்துளி மலர் -6- இதழ் 1 -2002)*



பத்திரிகை, சஞ்சிகைகளில் 'வெலிப்பன்னை அத்தாஸ்' அவர்களால் எழுதப்பட்ட ஆக்கங்கள் சிலவற்றைத் தொகுத்து 'சிந்தனைப் பார்வைகள்' என்ற தலைப்பில் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது வாசகர்களைச் சிந்திக்கத் தூண்டும் நோக்கில் இந்த ஆக்கம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

'வெலிப்பன்னை அத்தாஸ்' எனும் அல்ஹாஜ் ஏ. எச். எம். அத்தாஸ் (சமாதான நீதவான்) அவர்கள் வெலிப்பன்னை விதானையார் ஹஸன் மரிக்கார் அப்துல் ஹமீது, அப்துர் ரஹ்மான் ஸெய்னத்தும்மா தம்பதிகளின் மூத்த புதல்வராய்ப் பிறந்தார். வெலிப்பன்னை முஸ்லிம் வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வி பெற்று, தர்ஹா நகர் அல் ஹம்ரா மஹா வித்தியாலயத்தில் உயர்தரக் கல்வியைத் தொடர்ந்தார்.

முதலாம்தர அதிபர் தரத்தில் உள்ள இவர், தற்போது வெலிப்பன்னை ரஹ்மானிய்யா முஸ்லிம் மஹா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றுகிறார்.

'உணர்வூட்டும் இஸ்லாமிய கீதங்கள்' எனும் நூலை 'இளங்கலைஞன்' எனும் பெயரில் எழுதியுள்ளார்.

வெலிப்பன்னை முஸ்லிம் வித்தியாலய முன்னாள் அதிபர் மர்ஹூம் எம். எம். யூசுப் நினைவு மலரை சிறப்பாகத் தொகுத்துத் தந்ததோடு பாடசாலைக் காலாண்டு சஞ்சிகையான 'தேன் துளி'யின் வளர்ச்சிக்கு வழிகாட்டுபவராகவும் உள்ள இவர் இலக்கிய ஆற்றலும் சமூக சேவை நோக்கமும் கொண்டவர்.

கொழும்பு பல்கலைக்கழக ஊடகத்துறை டிப்ளோமா பட்டதாரியான நூலாசிரியர் இன்னும் பல்வேறு ஆக்கங்களை சமூகத்தின் பார்வைக்கு முன் வைக்கக்கூடியவர். இவரின் ஆக்க இலக்கியச் செயற்பாடு தொடர வேண்டும் என்ற இலக்கியப் பிரியர்களின் வேணவாவோடு நானும் சேர்ந்து கொள்கிறேன்.

தர்ஹா நகர் ஸபா

ISBN 955-8847-00-3